
லிங்கத்தின் நீளம் 3 அங்குலமாகும். அதன் அகலம் அதில் பாதி 1½ அங்குலமாகும். பீஜகோசத்தின் நீளமும் அகலமும் 3 அங்குலமாகும் அடித்துடையின் அகலம் 12 அங்குலமாகும். முட்டுக்காலின் (முழங்காலின்) அகலம் 9 அங்குலமாகும். அடிக்கண்டைக்காலின் அகலம் 7 அங்குலமாகும். அதன் நுனியின் (நளகையின்) அகலம் 2½ (3½)

தலாஹ்ரஸ்வ து விஸ்தாரம் ஸாயஷ்டாங்குலமிஷ்யதெ |
பார்ஷ்ணியாயாமம் விஸ்தாரம் த்ரிமாத்ரம் மாத்ரமாஹ்ருதம் ||

அங்குஷ்டாதிகநிஷ்டாந்தம் அங்குல்யா யவ மானதஹ |
ஸம்மாத்ராதிகநிஷ்டாந்தம் பஞ்சமாத்ரவிஸ்தாரகம் || ௨௫ ||

தத்பாதம் நவ்யாவம் தத்யத்யதந்நமதம் |
ஸ்தானகம் வாஸனம் வாபி பத்மபீடெ விசேஷதஹ || ௨௬ ||

ஸ்வதந்தம் தக்ஷிணே ஹஸ்தே வாமஹஸ்தே கபிண்டகே
(து மோதகம் |

மோதகம் தக்ஷஹஸ்தே து அங்குசம் தக்ஷிணே கரே || ௨௭ ||

வாமஹஸ்தே து பாசம் வா நாகம் வா அக்ஷமாலிகா |
த்ரிநேத்ரம் ஹேமஸங்காசம் ரக்தவஸ்த்ராந்விதம் || ௨௮ ||

அங்குலமாகும். பாததலம் (உள்ளங்கால்) நுனியின் அகலம் $6\frac{1}{2}$ அங்குலமாகும். குதிகாலின் உயரமும் அகலமும் 3 அங்குலமாகும். (24)

பெருவிரல் முதல் சிறுவிரல் வரையில், விரல்களின் அகலம் முறையே, 12–8–7–6–5 யவைகளாகும். (25)

கால்விரல் நகங்கள், விரல் அகலத்தில் $\frac{3}{4}$ பங்கு அகலமும், $\frac{1}{2}$ பங்கு நீளமும் உடையதாய், அகன்று வட்டமாக இருப்பவைகளாம்.

நின்றவடிவமானாலும், உட்கார்ந்த வடிவமானாலும் விசேஷித்து பத்ம பீடத்திலிருப்பதாகும். (26)

வலது கீழ்க்கையில் தனது தந்தமும், இடது கையில் இட்டலியும், வலது வெளிக்கையில் அங்குசமும், இடது கையில் பாசம் அல்லது நாகம் அல்லது ஜபமாலையும், துதிக் கையில் மோதகமும் வைத்திருப்பதாகும்.

விநாயக மூர்த்தியானது, 3 கண்களும், தங்க நிறமும்

ஸூக்ஷ்மம் ஸ்தூலம் வா ஸ்தானகே து ப்ரகல்பயேத் |
ஆஸநம் ஸ்வாஸநம் சைவ வாமபாதம் து ஶாயயேத் ||
[வாமேதரம் குஞ்சிதம் ஸ்யாத் ஊருமூலோர்த்வபார்ஷ்ணிகே ||]

ஸ்தாநாஸநே மூர்த்நி பாதே பாதயோ து மத்யகாம் விநா |
[ஸ்தாநஸூத்ரம் து மூர்த்நஸ்ஸ்யாத் பாதயோர்மத்யமாகே |]
ஸாம்ஶக்ரம் தநுவாமே கர்த்தவ்யம் து விசேஷத: ||

வ்யாளயஜ்ஞோபவீதம் ச கிரீடமகுடம் ததா |
கரண்டமகுடம் வாபி ஜடாமகுடிகமேவ வா || ௩௧ ||

ஸர்வாபரணஸம்யுக்தம் மஹாகாயம் மஹோதரம் |
ஏவம் விநாயகம் ப்ரோக்தம் ஶ்ருணு ஷண்முகலக்ஷணம் ||

இதி காஶ்யபீயே ஶில்பஶாஸ்த்ரே விநாயகலக்ஷணம் நாம
ஸப்த அஷ்டாவிம்ஶ: படல: ||

கொண்டு, வெண்பட்டாடையணிந்து இருப்பதாகும். ஸ்தாநகமானால் (நின்ற வடிவமானால்) ஆபங்கமாகவோ ஸமபங்கமாகவோ இருக்கவேண்டும்.

ஆஸனமானால் (உட்கார்ந்த வடிவமானால்) இடது கால் படுக்கையாகவும், வலது குதிகால் அடித்துடையிலிருக்கும்படி குந்தவைத்துமிருக்கவேண்டும்.

புரஸ்ஸூத்திரமானது, உச்சியிலிருந்து இரு பாதங்களில் நடுவில் விழவேண்டும்.

விசேஷித்து, இடது பக்கத்தில் சிறிது சாய்ந்து இருக்கும்படி அமைக்கவேண்டும். (30)

நாகயக்ஞோபவீதமணிந்து, கிரீடமகுடம் அல்லது கரண்டமகுடம், அல்லது சடைமுடி தரித்து, ஸகல

ஆபரணங்களாலும் அலங்கரிக்கப்பட்டு, பருத்த வடிவமும் பெரிய வயிறுடன் கூடியது விநாயகரின் வடிவமாகும். இவ்விதம் விநாயகரின் லக்ஷணம் கூறப்பட்டுள்ளது. இனி ஷண்முகரின் லக்ஷணத்தைக் கூறுகிறேன். கேழ்ப்பாயாக.

காசியபீய சிற்பசாஸ்திரத்தில் விநாயக லக்ஷணமெனும்
47-வது படலம் முற்றும்.

अथ अष्टचत्वारिंशः पटलः ॥

षण्मुखलक्षणम् ॥

पञ्चतालोत्तमेनैव स्कन्दं कारयेद्विचक्षणः ।
मानोन्मानादिकं सर्वं प्रोक्तं चैव स्कन्दलक्षणे ॥

द्विभुजं वा चतुर्हस्तं षड्भुजं द्वादशहस्तकम् ।
शक्तिं बाणं च खड्गं च चक्रं प्रासं प्रसारितम् ॥

सव्ये वामे तु पिञ्छं तु खड्गं कुक्कुटकं तथा ।
धनुर्दण्डं हलं चैव द्वादशहस्तान्विते स्थितम् ॥

षड्भुजस्य द्वयं खड्गं शक्तिर्दक्षिणबाहुके ।
खेटकं चाक्षमाला च कुक्कुटं वामहस्तके ॥ ௪ ॥

48-வது படலம்

ஷண்முக லக்ஷணம்.

ஸமர்த்தனானவன், ஸ்கந்த விக்ரஹத்தை உத்தம பஞ்சதாலத்தால் செய்யவேண்டும். அளவுகள் யாவும் (ஸோமா)ஸ்கந்த லக்ஷணத்தில் கூறப்பட்டிருக்கின்றன.(1)

ஸுப்ரஹ்மண்ய மூர்த்தியானது, 2 கைகள், 4 கைகள், 6 கைகள் அல்லது 12 கைகள் உடையதாகும். 12 கைகளுடனிருந்தால், வலது கைகளில், சக்தி–அம்பு–கத்தி–சக்கரம்–பிராஸம்–பிரஸாரிதம் இவைகளும், இடது கைகளில் மயில் தோகை–கத்தி–கோழி–வில்–தடி–கலப்பை இவைகளுமிருப்பதாகும். (3)

6 கைகளிருந்தால், 2 கத்திகள்–சக்தி இவைகள் வலது கைகளிலும், கேடயம்–ஜபமாலை–கோழி இவைகள் இடது

அதஹஸ்ஜெ௨ஹபம் ஶக்திஃ உக்ஷிணெ து கரஷயெ |
கக்ஷ்ம் அாக்ஷஶாரு அவாஉஹஸெ்த ஹவெக் ஸய ‖ ரு ‖

ஷிஹஜம் கக்ஷ்டம் வாமெ ஶக்திஉக்ஷிணஹஸ்தகெ |
கநக்தம் யத்த தத்வஸம் ஸொஶாஸ்கெநாக்தவக் ஹவெக் ‖

ஸ்கந்ஶக்ஷணஶாவ்யாதம் ஜெ்யஷ்டாவியிரதஃ வாழ |

அத ஜெ்யஷ்டாலக்ஷணம் ‖

ஷிஹஜாஉநருவஸ்ஙாபா ஶுஃபொஷ்டா துஙநாஸிகா ‖

ஶுஃபஉாநஷ்நா கக்ஷிஶ்நா அாரக்தவாஸஸீ |
உத்யம் உக்ஷிணெ ஹஸ்தெ வாமெ து கரகாஙிதா ‖ அ ‖

ஹஸ்வீமெ ஸவாஸீநா வருஶிதவநுஷயா |
ஸவஹாரணஸஙவஹா விஸ்யாபஉஉமெயஜா ‖ க ‖

கைகளிலுமிருப்பதாகும். (4)

4 கைகளுடனிருந்தால் வலக்கைகளில் அபயமும் சக்தியும், இடது கைகளில் கோழியும்—மாலையுமிருப்பதாகும். (5)

2 கைகளுடனிருந்தால், வலது கையில் சக்தியும் இடது கையில் கோழியுமிருப்பதாகும்.

இதில் கூறப்படாத விஷயங்கள் யாவும் ஸோமாஸ்கந்த லக்ஷணத்தில் கூறியுள்ளபடியேயாகும். ஸ்கந்த லக்ஷணம் கூறப்பட்டுள்ளது. இனி ஜ்யேஷ்டா லக்ஷணத்தைக் கூறுகிறேன்.

ஜ்யேஷ்டாதேவீ லக்ஷணம்.

ஜ்யேஷ்டா தேவியானவள், இரண்டு கைகளும், தணல் போன்ற நிறமும், தொங்கிய உதடும், உயர்ந்த மூக்கும், தொங்கும் ஸ்தநமும், ஓட்டிய வயிறும், சிவந்த ஆடையும், வலக்கையில் நீலோத்பலமும், இடக்கையில் பானபாத்

காகயூஜஸஹாயாந்தா முறாடி திருகாஙிதா |
தஸ்யா உக்ஷிணவாரெவூ் தா வருஷொ(ஷெ)வெ
வருஷவாஹநஃ || ௧0 ||

ய்யாநாஷ்ரம் ||

ஸிஹெஜெ உக்ஷிணெ ஹஸெ உணூம் வாமெ அ ஸூசிகா |
முஂபிதம் உக்ஷிணம் வாமம் வாஜ்ஞூகாஸநம் || ௧௧ ||

ஸம்ஷ்நா யளவநாஷ்யா அ ஸவாஹரணஹூஷிதா |
கருஷ்ணாஜநநிஹா ரக்தவஸ்த்ரெணவ விஹூஷிதா || ௧௨ ||

வுநவணா ஹகாயஃ ஸவாஹரணஹூஷிதஃ |

திரமும், சிதறிச் சொறுகிய கூந்தலும், காக்கை துவஜமும், நெற்றியில் பொட்டும் உடையவளாய், ஸகல ஆபரணங் களையுமணிந்து, இருகால்களும் தொங்க, பத்திரபீடத்தில் ஸூகாஸநத்திலிருப்பவளாவாள். அவளுக்கு வலது பக்கத் தில் விருஷபமும் விருஷவாஹனும் (விருஷபவாஹனத் தில் விருஷவாஹனன்) இருப்பதாகும். (10)

மற்றொருவித தியானம்

ஜ்யேஷ்டாதேவியானவள், வலது கையில் தண்டமும் (தண்டம்-தடி) இடது கையில் ஊசி அல்லது சுட்டிக் காட்டும் குறியும், (அதாவது சுட்டிக்காட்டும் ஆள்காட்டி விரல்) தொங்கிய வலது காலும், உத்குடிகாஸநத்திலிருக் கும் இடது காலும், அழகிய கொங்கைகளும், யௌவனம் பொருந்திய சரீரமும், கருத்த நிறமும், சிவந்த ஆடையும் உடையவளாய் ஸகல ஆபரணங்களையும் அணிந்திருப்பவ ளாவாள். (12)

அவளுடைய வலது பக்கத்தில், வெளுத்த நிறமும், பருத்த உடலும் (அல்லது பெருந்தோற்றமுள்ள சரீரமும்) உடையவராய், ஸகலஆபரணங்களையும் அணிந்து, கரண்ட

கரண்டமகுடோபேத꞉ ஶுக்லவஸ்த்ராந்வித꞉ ॥ ௧௫ ॥

வ்ருஷபோ வை தக்ஷிணே சைவம் வாமே ச வஹ்நிர்தேவயா ஹவிர்வஹ꞉ ।
ஏவம் ஜ்யேஷ்டா ஸமாக்யாதா துர்காலக்ஷணமுச்யதே ॥

அத துர்காலக்ஷணம் ॥

சதுர்புஜா த்ரிணேத்ரா ச ஸா து ஶ்யாமஸந்நிபா ஶுபா ।
ஸௌம்யா பீதாம்பரோபேதா பீநோருஜகநஸ்தநா ॥

கரண்டமகுடோபேதா ஸர்வாபரணபூஷிதா ।
அபயம் தக்ஷிணே ஹஸ்தே கடகம் வாமஹஸ்தகே ॥ ௧௬ ॥

பரஹஸ்தே து ஸவ்யே து சக்ரம் வாமே து ஶங்ககம் ।
பத்மஶ்ரீ ஸமாவ்ருஷ்டா பத்மபீடோபரி ஸ்திதா ॥ ௧௭ ॥

மகுடம் தரித்து, வெண்பட்டாடையணிந்து விருஷபதேவர் இருப்பதாகும்.

இடது பக்கத்தில் விருஷபதேவரைப் போலவே ஆடை ஆபரணங்களைத் தரித்து அக்னிதேவன் இருப்பதாகும்.

இவ்விதம் ஜ்யேஷ்டாலக்ஷணம் கூறப்பட்டிருக்கிறது. இனி துர்கையின் லக்ஷணத்தைக் கூறுகிறேன். (14)

துர்கா லக்ஷணம்

துர்காதேவியானவள் 4 கைகளும், 3 கண்களும், பச்சைமேனியும், சாந்தமான ஆகிருதியும், பீதாம்பரமும், பருத்த துடை, பிருஷ்டபாகம், ஸ்தனங்கள் உடையவளாய், கரண்டமகுடம் தரித்து, ஸகல ஆபரணங்களும் பூண்டு, வலது கை அபயமும், இடது கை கடகஹஸ்தமும் உடையவளாய், வலது வெளிக்கையில் சக்ராயுதமும், இடக்கையில் சங்கும் தரித்து, ஸ்தநங்களில் யானைத்தோலா

நம்ரகக்ஷஸ்தநபரா ச ரக்தகஞ்சுகதாரிணீ |
ஏவம் துர்கா ஸமாக்யாதா விஷ்ணுலக்ஷணமுச்யதே ||

அத விஷ்ணுலக்ஷணம் ||

விஷ்ணு: கிரீடகடககடிஸூத்ராதிபூஷித: |
பீதாம்பரதர: ஸௌம்ய: சதுர்புஜஸமந்வித: || ௧௯ ||

அபயம் தக்ஷிணே ஹஸ்தே கடகம் வாமஹஸ்தகே |
கதா பத்மம் ச வாமே து ஶங்கம் சக்ரம் ச தக்ஷிணே ||

ஸஹாஸ்சைவ பத்மபீடஸ்த: ஸஸ்யஶ்யாமநிபாக்ருதி: |
ஸ்தாநகோ வா ஸ்திதோ வா ஸ்யாதாஸநோபரி ஶ்ரியாந்வித: ||

ஶ்ரியா யுக்தம் கேவலம் வா விஷ்ணுமூர்த்திம் ப்ரகல்பயேத் |

லாகிய வாரும் சிவப்பு ரவிக்கையுமணிந்து, பத்மபீடத்தின் மேல், ஸமபாதத்துடன் நிற்பவளாவாள். இவ்விதமாக துர்கையின் லக்ஷணம் கூறப்பட்டிருக்கிறது. இனி விஷ்ணுவின் லக்ஷணத்தைக் கூறுகிறேன். (18)

விஷ்ணு லக்ஷணம்

விஷ்ணுவானவர், பீதாம்பரமும், கடிஸூத்திரமும் (கடிஸூத்ரம்—அரைஞாண்) கிரீடமகுடமும் தரித்து, 4 கைகளையுடையவராய், வலக்கையில் அபய முத்திரையும், இடக்கையில் கர்க்கட முத்திரையும் தரித்து, இடக்கைகளில் கதை பத்மமும், வலக்கைகளில் சங்கம் சக்ரமும் தரித்து, பயிர்போன்று பசுமையான நிறத்துடன், பதுமபீடத்திலிருப்பவராவார்.

விஷ்ணு மூர்த்தியை நின்றவடிவமாகவோ உட்கார்ந்த வடிவமாகவோ செய்வதாகும். விஷ்ணுவின் இடது பக்கத்தில் மஹாலக்ஷ்மி இருப்பதாகும். விஷ்ணு மூர்த்தியை

ஸாம்க்ஷிகவிதெ வஷெ வஹந்தீ ஶ்ரீ: கரத்வயெ || ௨௨ ||

விஷ்ணோர்லக்ஷணமெவம் ஸ்யாதிந்த்ர லக்ஷணமுச்யதெ |

அத இந்த்ர லக்ஷணம் ||

ஏகவக்த்ர: த்விஹஸ்தஶ்ச ஜாதிலிங்கஸவர்ணக: || ௨௩ ||

கரண்டமகுடோபேத: ஸர்வாபரணபூஷித: |

ஶக்திம் (வஜ்ரம்) து தக்ஷிணே ஹஸ்தே வாமஹஸ்தேங்குஶம் வஹந் || ௨௪ ||

விஸ்த்ருதோரா தீர்கக்ரீவ: வாமெ ஶசீஸமந்வித: |

த்விநேத்ர: ஸௌம்யவதந: ஸிம்ஹாஸநோபரி ஸ்தித: || ௨௫ ||

ஸ்தாநகோ வா ப்ரகர்தவ்ய: கஜாரூடோபவிஷ்டோ வா |

லக்ஷ்மியுடன் கூடியதாகவோ, தனித்தோ செய்வதாகும்.

மஹாலக்ஷ்மி சிறிது மலர்ந்த இரு தாமரை மலர்களை இரு கரங்களிலும் வஹித்திருப்பவளாவாள். (கிரீடாதி ஸகல ஆபரணங்களாலும் அலங்கரிக்கப்பட்டவளாவாள்.)

விஷ்ணு லக்ஷணம் இவ்விதம் கூறப்பட்டது. இனி இந்திரன் லக்ஷணத்தைக் கூறுகிறேன்

இந்திர லக்ஷணம்

ஒரு முகமும், இரண்டு கைகளும், ஜாதிலிங்கத்தின் நிறமும்கொண்டு, கரண்டமகுடம் தரித்து, ஸகல ஆபரணங்களையும் அணிந்து, வலது கையில் சக்தி(வஜ்ரம்)யும், இடது கையில் அங்குசமும் ஏந்தி, அகன்ற மார்பும் நீண்ட கழுத்தும் இரண்டு கண்களும் சாந்தமான முகமுமுடையவனாய், இடது பக்கத்தில் சசீதேவியுடன் ஸிம்ஹாஸனத்தில் வீற்றிருக்கும் வடிவமுடையவனுவான். உட்கார்ந்த வடிவமாகவும் செய்யலாம். யானை மீது வீற்றிருக்கும்

இந்த்ரலக்ஷணாவஸாநே அஶ்விநோர்லக்ஷணம் ஶ்ருணு || ௨௬ ||

அத அஶ்விநோர்லக்ஷணம் ||

த்விவிஜாஸநாஸீநாவஶ்விநௌ விஶ்வரூபிணௌ |
தாடிமீபுஷ்பஸங்காஶாவப்ஜபத்ர ஸோமபாயிநௌ || ௨௭ ||

ஜடாமகுடஸம்யுக்தௌ த கமண்டலுதாரிணௌ |
நாஸத்யௌ த்வௌ நாஸாந் த பூர்வோக்தகுடிதாரிணௌ ||

கரத்வயஸமாயுக்தௌ ஸர்வபூஷணவிபூஷிதௌ |
அபயம் தக்ஷிணே ஹஸ்தே வாமே புஸ்தகம் வாமஹஸ்தகே || ௨௯ ||

ப்ரலம்பதக்ஷிணபாதௌ வாமே உத்குடிகாஸநௌ |
தேவாநாம் பிஷஜாவேதௌ ஸர்வசிகித்ஸாவித்யாயகௌ || ௩௰ ||

வடிவமாகவும் செய்யலாம். இவ்விதம் இந்திர லக்ஷணம் கூறப்பட்டது. இனி அசுவினீ தேவர்களின் லக்ஷணத்தைக் கூறுகிறேன். (26)

அசுவினீதேவ லக்ஷணம்.

உலகில் சிறந்த அழகுடைய அசுவினீ தேவர்கள், இரண்டுபேர்களாவர். இவர்கள் ஸோமபானம் செய்தவர்கள். இவர்கள், மாதுளம் பூப்போன்றநிறமும் மலர்ந்த செந்தாமரைபோன்ற கண்களும், உடையவர்களாய், குடாமகுடமும் (குடாமகுடம்—மகுடம்போன்ற முடி)கமண்டலமும் தரித்தவர்களாவார்கள். இரண்டு கைகளுடையவர்கள். வலது கையில் அபயமும் இடது கையில் புஸ்தகமும் தரித்திருப்பார்கள். (29)

வைத்திய விதிகள் யாவுமறிந்த தேவ வைத்தியர்களான இவர்கள், வலதுகால் தொங்கவிட்டும், இடதுகால் உத்குடிகாஸநமாகவுமிருக்கும்படி வீற்றியிருக்கும் வடிவ

தயோ: பார்ச்வயோ: ஸவ்யே வாமே ச தக்ஷிணே க்ரமாத் ।
த்ருதி: ஸஞ்ஜீவிநீ சைவ ஸம்ஸ்தூதா சாமராந்விதா ॥ ௩௧ ॥

ப்ருஷ்டே விசல்யகரணீ ஸம்ஸ்தூதா சாமராந்விதா ।
வாமே தந்வந்தரிச்சைவ வாமாத்ரேயஸ்ததைவ ச ॥ ௩௨ ॥

பீதரக்தநிபாவேதௌ ஸம்ஸ்தூதௌ க்ருஷ்ணவாஸஸௌ ।
கட்ககேடகஸம்யுக்தௌ ஸர்வாபரணபூஷிதௌ ॥ ௩௩ ॥

அச்விநௌ து ஸமாக்யாதௌ வஹ்னி: பூர்வவதேவ ஹி ।

அத பித்ருதேவதாலக்ஷணம் ॥

பிதர: பீதவர்ணாபா: வ்ருத்தா: கேசோர்த்வபந்தநா: ॥

யஜ்ஞஸூத்ரஸமாயுக்தா: த்விபுஜா: ச்வேதவாஸஸ: ।
நாநாபரணஸம்யுக்தா: பத்மபீடஸ்திதா: ॥ ௩௪ ॥

முடையவர்களாவார்கள். இவர்களின் வலது பக்கத்தில் திருதியும் இடது பக்கத்தில் ஸஞ்ஜீவிநியும் சாமரங்களை தரித்து இருப்பார்கள். பின்பக்கத்தில் விசல்யகரணீ சாமரத்தை தரித்திருப்பவளாவாள். இவர்களின் இடது பக்கத்தில், தன்வந்தரியும், வாமாத்திரேயரும் இருப்பார்கள். இவ்விருவரும் மஞ்சள் சிவப்பு நிறமுடையவர்களாவார்கள். கருப்பு வஸ்திரம் தரித்திருப்பார்கள். கைகளில் கத்தியும் கேடயமும் ஏந்தி, ஸர்வாலங்கார பூஷிதர்களாக இருப்பார்கள். (33)

இவ்விதமாக அசுவிநீ தேவலக்ஷணம் கூறப்பட்டது. அக்நியின் லக்ஷணம் முன்பு கூறியதுபோலவேயாம்.

பிதிருதேவதா லக்ஷணம்

பிதிருதேவர்கள், மஞ்சள் நிறமும், முதிர்ந்த வயதும், உயரத்தூக்கிக்கட்டிய முடியும், பூணூலும், இரண்டு கை

ஸுகாஸநே ப⁴த்³ரபீடே² வா விஸ்தரஸ்தா² ஸமாஸநா: |
வாமஜாநூபரிந்யஸ்த வாமஹஸ்தஸமந்விதா: || ௩௬ ||

ஸூசீத³க்ஷிணஹஸ்தாஸ்து பிதரஸ்தே ஸமீரிதா: |
பித்ரூணாம் லக்ஷணம் ப்ரோக்தம் ஶ்ருணு வைவஸ்வதம்
ததஃ || ௩௭ ||

அத² யமலக்ஷணம் ||

த்³விபு⁴ஜ: க்ருஷ்ணவர்ணஶ்ச க²ட்³க³கே²டகஸம்யுத: |
கராலத³ம்ஷ்ட்ரவத³ந: ரக்தமால்யாநுலேபந: || ௩௮ ||

ரக்தவஸ்த்ரயுதோ ரௌத்³ர: கிரீடமகுடாந்வித: |
தீ³ப்தாக்³நிஸத்³ருஶாக்ஷஶ்ச மஹாமஹிஷவாஹந: || ௩௯ ||

களும், வெண்மையான ஆடையும், நாகாபரணமும், மதி முகமும், உடையவர்களாய், பத்திரபீடப்பலகையில், ஸுகாஸநத்தில் இருப்பவர்களாவார்கள். இடது முழங்காலில் இடது கையை வைத்துக்கொண்டு, வலது கையை ஸூசீ முகமாக (சுட்டிக்காட்டுவதுபோல)வைத்துக்கொண்டிருப்பார்கள். இவ்விதமாக பிதிருக்களின் லக்ஷணம் கூறப்பட்டுள்ளது. இனி வைவஸ்வத (யம)னுடைய லக்ஷணத்தைக் கூறுகிறேன். (37)

யம லக்ஷணம்.

யமன், இரண்டு கைளும், கருத்த மேனியும், கைகளில் கத்தியும் கேடயமும் தரித்து, பயங்கரமான தித்திப்பற்களுடன்கூடிய முகமும், சிவப்பு மாலேயும், செஞ்சந்தனப் பூச்சும், சிவப்பு வஸ்திரமும் தரித்து, பயங்கரமான உருவமுடையவனய், கிரீடமகுடம் பூண்டு, அனல்வீசும் அக்கினி போன்ற கண்களையுடையவனய், பெரியதோர் மஹிஷ வாஹநத்திலிருப்பவனுவான். (39)

வைவஸ்வதஸ்ய பார்ஶ்வே து ஸவ்யயோ க்ரஹோக்ரகௌ
சித்ரகுப்தஃ கின்னரஶ்ச அக்ர பார்ஶ்வே து ஸம்ஸ்திதௌ ||

க்ருஷ்ணஶ்யாமநிபௌ தௌ ச ரக்தவஸ்த்ரதராவுபௌ |
பீடபார்ஶ்வே ஸ்திதௌ க்ரூரௌ ம்ருத்யுஸஹிதாவுக்ரதேஜஸௌ ||

ஜ்வலத்ரோஹிதஸங்காஶௌ வா அஸிதரக்தௌ ஸ்த்ரியௌ |
சாமரதஸ்ஸம்ஸ்திதௌ அக்ரே ஶர்மாஶர்மாக்யயௌ || ௪௨ ||

ஸிம்ஹாஸநாஸீநஃ மஹிஷோ ரோஹிதஃ ததா (அதவா) ஸ்திதஃ |
யமலக்ஷணமாக்யாதம் ரோஹிண்யாஃ லக்ஷணம் ஶ்ருணு || ௪௩ ||

யமனுடைய பக்கங்களில் அருகாமையில் க்ரஹன், உக்ரன் என்பவர்களும், முன்பக்கங்களில், சித்திரகுப்தனும், கின்னரனும் இருப்பார்கள் இவ்விருவரும் கருப்பு நிறமும் பச்சை நிறமும் உடையவர்களாய், சிவப்புவஸ்திரங்களணிந்திருப்பவர்களாவார்கள்.

பீடத்தின் பக்கத்திலிருப்பவர்கள் பயங்கரமான பராக்கிரமமுடையவர்களாய், மிருத்தியுவுடன் இருப்பார்கள். இவ்விருவரும் நெருப்பைப்போன்ற அல்லது கருப்பும் சிவப்பும் கலந்த நிறமுடையவர்களாவார்கள்.

யமனுக்கு முன்பக்கத்தில் இரண்டு ஸ்திரீகள் சாமரம் தரித்து நிற்பார்கள். அதற்கு முன்பக்கத்தில் சர்மன், ஶர்மன் என்பவர்கள் நின்றுகொண்டிருப்பார்கள். (42)

யமன் ஸிம்ஹாஸநத்தில் வீற்றியிருப்பவனாவான். யமனுடைய வாஹநமான மஹிஷம் (எருமை) செம்பட்டை நிறமுடையதாம். (அல்லது யமன் மஹிஷத்தின்மீது உட்கார்ந்துகொண்டிருப்பான்.) இவ்விதமாக யம லக்ஷணம் கூறப்பட்டுள்ளது. இனி ரோஹிணியின் லக்ஷணத்தைக் கூறுகிறேன். (43)

அத ரோஹிணீலக்ஷணம் ||

த்விபுஜா கரண்டமகுடா ரக்தவர்ணா ஸுஶோபநா |
ஸர்வாபரணஸம்யுக்தா நாகஹஸ்தா ஸிதாம்பரா || ௪௪ ||

ஆஸீநா வா ஸ்திதா வாபி ஸப்தஸங்க்யா ஹி ரோஹிணீ |
ரோஹிண்யேவம் ஸமாக்யாதா நைர்ருத்யலக்ஷணம் ஶ்ருணு || ௪௫ ||

அத நைர்ருதிலக்ஷணம் ||

நைர்ருதிர்நீலவர்ணஸ்ஸ்யாத் த்விபுஜஶ்ச மஹாதநு: |
கட்கம் தக்ஷிணஹஸ்தே து வாமஹஸ்தே ச கேடகம் || ௪௬ ||

பீதவஸ்த்ரதரோ ரௌத்ர: கராலதம்ஷ்ட்ரவக்த்ரக: |

ரோஹிணீ லக்ஷணம்.

ரோஹிணீ தேவியானவள், இரண்டு கைகளும், கரண்ட மகுடமும், சிவப்பு நிறமும், மங்களகரமான உடலும் உடையவளாய், வெளுப்பு ஆடையுடுத்தி, ஸகல ஆபரணங்களையும் அணிந்து, ஸர்ப்பத்தைக் கையில் வைத்துக்கொண்டு உட்கார்ந்த வடிவமாகவோ நின்ற வடிவமாகவோ இருப்பவளாவாள். ரோஹிணீ தேவிகள் ஏழு பேர்களாவார்கள். இவ்விதமாக ரோஹிணியின் லக்ஷணம் கூறப்பட்டிருக்கிறது. இனி நைர்ருதியின் லக்ஷணத்தைக் கூறுகிறேன். கேட்பாயாக. (45)

நைர்ருதி லக்ஷணம்.

நைர்ருதியானவன், நீலநிறமும், இரண்டு கைகளும், பெரிய உடம்பும், வலது கையில் கத்தியும் இடது கையில் கேடயமும் உடையவனுய், பீதாம்பரம் தரித்து, கொடுமையுடன் பயங்கரமான தித்திப்பற்களுடன் கூடிய முகமுடைய

𑌸𑌰𑍍𑌵𑌾𑌭𑌰𑌣𑌸𑌂𑌯𑍁𑌕𑍍𑌤𑌃 𑌶𑌵𑌾𑌰𑍂𑌢𑍋 𑌜𑌟𑌾𑌕𑍃𑌤𑌿𑌃 || ௪௭ ||

𑌨𑍈𑌰𑍃𑌤𑍇𑌰𑍍𑌲𑌕𑍍𑌷𑌣𑌂 𑌖𑍍𑌯𑌾𑌤𑌂 𑌤𑌤𑌸𑍍𑌤𑍍𑌵𑌪𑍍𑌸𑌰𑌸𑌃 𑌶𑍃𑌣𑍁 |

𑌅𑌥 𑌅𑌪𑍍𑌸𑌰𑍋𑌲𑌕𑍍𑌷𑌣𑌮𑍍 ||

𑌅𑌤𑌿𑌕𑌾𑌨𑍍𑌤𑌿𑌯𑍁𑌤𑌾𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑌾𑌃 𑌕𑍇𑌶𑌭𑌾𑌰𑌾𑌲𑌕𑌾𑌞𑍍𑌚𑌿𑌤𑌾𑌃 || ௪௮ ||

𑌨𑌾𑌨𑌾𑌬𑌨𑍍𑌧𑌨𑌸𑌂𑌯𑍁𑌕𑍍𑌤𑌾𑌃 𑌨𑌾𑌨𑌾𑌪𑍁𑌷𑍍𑌪𑍈𑌰𑌲𑌙𑍍𑌕𑍃𑌤𑌾𑌃 |
𑌶𑍁𑌕𑍍𑌲𑌕𑍍𑌷𑍌𑌮𑌵𑌸𑌨𑌾𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑌾𑌃 𑌪𑍀𑌨𑍋𑌰𑍁𑌜𑌘𑌨𑌸𑍍𑌤𑌨𑌾𑌃 || ௪௯ ||

𑌸𑍁𑌮𑌧𑍍𑌯𑌾𑌸𑍍𑌸𑍁𑌰𑍂𑌪𑌾𑌶𑍍𑌚 𑌕𑌿𑌞𑍍𑌚𑌿𑌤𑍍𑌪𑍍𑌰𑌹𑌸𑌿𑌤𑌾𑌨𑌨𑌾𑌃 |
𑌨𑌾𑌨𑌾𑌗𑌨𑍍𑌧𑌾𑌨𑍁𑌲𑌿𑌪𑍍𑌤𑌾𑌙𑍍𑌗𑌾𑌃 𑌭𑌦𑍍𑌰𑌪𑍀𑌠𑍋𑌪𑌵𑌿𑌷𑍍𑌟𑌿𑌤𑌾𑌃 ||

𑌸𑌮𑌭𑌙𑍍𑌗𑌯𑍁𑌤𑌾𑌸𑍍𑌸𑌪𑍍𑌤 𑌹𑍍𑌯𑌪𑍍𑌸𑌰𑌸𑌾𑌂 𑌗𑌣𑌾𑌃 |
𑌏𑌵𑌮𑌪𑍍𑌸𑌰𑌸𑌃 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌾𑌃 𑌵𑌰𑍁𑌣𑌸𑍍𑌯 𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌤𑍇 || ௫௧ ||

வனய், ஸகல ஆபரணங்களாலும் அலங்கரிக்கப்பட்டு, சவ வாஹநத்திலிருப்பவனாவான்." (47)

இவன் நைர்ருத லோகதேவனாவான். இவ்விதம் நைர்ருதியின் லக்ஷணம் கூறப்பட்டது இனி அப்ஸரஸ்ஸுகளின் லக்ஷணத்தைக் கூறுகிறேன். கேட்பாயாக.

அப்ஸரஸ்ஸுகளின் லக்ஷணம்.

அப்ஸரஸ்ஸுகள் அதிக ஒளியும், கூந்தலும் முன்னுச்சியும், பற்பலவிதமான கூந்தல் முடிச்சும், பலவிதமான புஷ்பாலங்காரமும், வெண் பட்டாடையுமுடையவர்களாய், பருத்த துடை, பிருஷ்ட பாகம், ஸ்தநங்களையுடையவர்களாய், சிறுத்த இடையும், அழகிய வடிவமும், சிரித்த முகமும், பற்பலவிதமான வாசனைப்பூச்சுமுடையவர்களாய், பத்திரபீடத்திலிருப்பவர்களாவார்கள். அப்ஸரஸ்ஸுகள் 7 பேர்களாவார்கள். இவர்கள் ஸமபங்கத்திலிருப்பவர்களாவார்கள். அப்ஸரோ லக்ஷணம் கூறப்பட்டது. இனி வருண லக்ஷணத்தைக் கூறுகிறேன். (51)

அத2 வருணலக்ஷணம் ||

வருண: ஶ்வேதவர்ணஶ்ச த்3விஹஸ்த: பாஶஹஸ்தக: |
ஸர்வாப4ரணஸம்யுக்த: கரண்ட3மகுடான்வித: || ௫௨ ||

பீதவஸ்த்ரபரீதா4ங்க3: மஹாப3லஸமன்வித: |
யஜ்ஞஸூத்ரஸமாயுக்த: மகராஸநஸம்ஸ்தி2த: || ௫௩ ||
[வாருணம் லக்ஷணம் ப்ரோக்தம் ருஷீணாம் லக்ஷணம்
ஶ்ருணு |]

அத2 ஸப்தர்ஷிலக்ஷணம் ||

ருஷய: பீதவர்ணாஶ்ச நாநாவர்ணாம்ப3ராந்விதா: || ௫௪ ||

வ்ருத்3தா4ஸ்து த்3விஹஸ்தாஶ்சாங்கா3: ஜடாமகுடஸமன்விதா: |
* ஶிவாகாஹ்ருதயாங்காஸ்து யஜ்ஞோபவீதஸம்யுதா: || ௫௫ ||

வருண லக்ஷணம்.

வருணன், வெளுப்பு நிறமுடையவர். அவர் இரண்டு கைகளும், கையில் பாசமுமுடையவராவார். ஸகல ஆபரணங்களையுமணிந்து, கரண்டமகுடம் தரித்து, பீதாம்பரமுடுத்தியிருப்பவராவார். வருணன் மஹாபலம் பொருந்தியவராவார். அவர் பூணூலணிந்து, மகராஸநத்தின்மேல் வீற்றியிருப்பவராவார் இவ்விதமாக வருணனுடைய லக்ஷணம் கூறப்பட்டுள்ளது. இனி இருடிகளின் லக்ஷணத்தைக் கூறுகிறேன். கேட்பாயாக. (53)

ஸப்தர்ஷி லக்ஷணம்.

ஸப்தர்ஷிகள், மஞ்சள் நிற வடிவமும், பல நிறமுள்ள ஆடை தரித்தும், முதிர்ந்த வயதும், இரண்டு கைகளும்,

---

* அலம்பகாஹ்ருதயாங்காஸ்து இதி பாடா2ந்தரம் | ஹ்ருத3யங்க3லம்பகூர்சாஸ்து இதி யுக்த: பாட2: இதி பா4தி,

ஹஸ்தாப்⁴யாம் ப்³ருஸிதா: ஶாந்தகம் வாஸநம் ததா² வா |
த³ண்ட³ம் த³க்ஷிணஹஸ்தே து ச²த்ரம் வாமகரோத்³ய³தம் ||

ச²த்ரத³ண்ட³ விநா வாபி ஹஸ்தே து ஜ்ஞாநமுத்³ரிகா |
வாமஜாநூபரி ந்யஸ்த வாமஹஸ்தஸமந்விதா: || ௫௭ ||

ப்⁴ருக³ங்கி³ரோ(அ)க³ஸ்த்யஶ்ச வஸிஷ்டோ² கௌ³தமஸ்ததா² |
விஶ்வாமித்ரோ ப⁴ரத்³வாஜ: ஸப்தர்ஷய: ப்ரகீர்திதா: || ௫௮ ||
[ருஷீணாம் லக்ஷணம் ப்ரோக்தம் வாயுலக்ஷணமுச்யதே ||]

சாந்தமான தோற்றமும், சடைமுடியணியும், மார்புடன் அமைந்த முகவாய்க்கட்டையும் (மார்பு வரையில் நீண்ட தாடியும்) பூணூலும், மூன்று பட்டையாக அணிந்த விபூதியும், (விபூதி—திருநீறு) வலது கையில் தண்டமும், (தண்டம்—தடி) இடது கையில் குடையும், உடையவர்களாய், நின்ற வடிவமாகவோ, உட்சார்ந்த வடிவமாகவோ இருப்பவர்களாவார்கள். (56)

அல்லது தடி குடை இல்லாமல் வலது கையில் சின் முத்திரை தரித்து, இடது கையை இடது முழங்காலின் மேலே வைத்துக்கொண்டிருக்கும் வடிவமாகவும் இருக்கலாம்.

[நின்றவடிவமானுல், தடியும் குடையுங்கொண்டிருக்க வேண்டுமென்றும், உட்கார்ந்த வடிவமானுல் சின்முத்திரையும், முழங்காலின்மேலே வைத்த கையுமாக இருக்கவேண்டுமென்று கொள்ளவேண்டும்.] (57)

பிருகு, அங்கிரஸ்ஸு, அகத்தியர், வஸிஷ்டர், கௌதமர், விசுவாமித்திரர், பரதுவாஜர், இவர்கள் ஸப்தர்ஷிகள் ஆவார்கள்.

ஸப்தர்ஷி லக்ஷணம் கூறப்பட்டது. வாயுவின் லக்ஷணத்தைக் கூறுகிறேன். (58)

𑌅𑌥 𑌵𑌾𑌯𑍁𑌲𑌕𑍍𑌷𑌣𑌂 ॥

𑌦𑍍𑌵𑌿𑌹𑌸𑍍𑌤𑍋 𑌮𑌹𑌾𑌵𑍀𑌰𑍍𑌯𑍋 𑌧𑍂𑌮𑍍𑌰𑌾𑌕𑍍𑌷𑍋 𑌧𑍂𑌮𑍍𑌰𑌸𑌨𑍍𑌨𑌿𑌭𑌃 ।
𑌧𑍍𑌵𑌜𑌂 𑌚𑍈𑌵 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑍇 𑌹𑌸𑍍𑌤𑍇 𑌵𑌾𑌮𑌹𑌸𑍍𑌤𑍇 𑌚 𑌦𑌣𑍍𑌡𑌯𑍁𑌕𑍍 ॥

𑌸𑌾𑌕𑍁𑌞𑍍𑌚𑌿𑌤𑌹𑌸𑍍𑌤𑌯𑍁𑌤𑌃 𑌶𑌬𑌲𑌾𑌮𑍍𑌬𑌰𑌭𑍂𑌷𑌿𑌤𑌃 ।
𑌨𑌾𑌨𑌾𑌲𑌙𑍍𑌕𑌾𑌰𑌸𑌂𑌯𑍁𑌕𑍍𑌤𑌃 𑌵𑌿𑌚𑌲𑌤𑍍𑌕𑍇𑌶𑌬𑌨𑍍𑌧𑌨𑌃 ॥ ௬௧ ॥

𑌸𑌿𑌂𑌹𑌾𑌸𑌨𑍋𑌪𑌵𑌿𑌷𑍍𑌟𑌸𑍍𑌤𑍁 𑌶𑍀𑌘𑍍𑌰𑌯𑌾𑌨𑍋𑌤𑍍𑌸𑍁𑌕𑌃 𑌸𑍍𑌥𑌿𑌤𑌃 ।
𑌵𑌾𑌯𑍁𑌰𑍇𑌵𑌂 𑌸𑌮𑌾𑌖𑍍𑌯𑌾𑌤𑌃 𑌰𑍁𑌦𑍍𑌰𑌲𑌕𑍍𑌷𑌣𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 ॥

𑌅𑌥 𑌰𑍁𑌦𑍍𑌰𑌲𑌕𑍍𑌷𑌣𑌮𑍍 ॥

𑌚𑌤𑍁𑌰𑍍𑌭𑍁𑌜𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌣𑍇𑌤𑍍𑌰𑌾𑌶𑍍𑌚 𑌜𑌟𑌾𑌮𑌕𑍁𑌟𑌮𑌣𑍍𑌡𑌿𑌤𑌾𑌃 ।
𑌶𑍍𑌯𑌾𑌮𑌵𑌸𑍍𑌤𑍍𑌰𑌧𑌰𑌾𑌶𑍍𑌚𑍈𑌵 𑌶𑍁𑌕𑍍𑌲𑌵𑌰𑍍𑌣𑌾𑌃 𑌪𑍍𑌰𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌤𑌾𑌃 ॥

வாயு லக்ஷணம்.

வாயுபகவான், மஹாபலம் பொருந்தியவராவார். வாயு இரண்டு கைகளும், புகை நிறமும், புகைநிறக் கண்களும், சபள நிறமான உடையும் (சபளம் — பலநிறங்களும் கலந்து நிச்சயிக்கமுடியாத நிறம்) வளைத்து வைத்துக் கொள்ளப்பட்ட கைகளும், அசையும் கூந்தல் முடிச்சும், பலவித ஆபரணங்களுமுடையவராவார். வலது கையில் துவஜமும், இடது கையில் தண்டமுமுடையவராவார். ஸிம்ஹாஸநத்திலிருப்பவராவார் வேகமாகச் செல்ல விருப்பமுடையவர். வாயு லக்ஷணம் கூறப்பட்டது. இனி ருத்திரனின் லக்ஷணத்தைக் கூறுகிறேன். (61)

ஏகாதச ருத்திர லக்ஷணம்.

உருத்திரர்கள், 4 கைகளும், 3 கண்களும், சடைமுடியணியும், பச்சை உடையும், வெளுத்தமேனியும், பற்பல

ஜடாமகுட ஸம்யுக்தா நாகாபரண பூஷிதா: |
ஸர்வாபரண ஸம்யுக்தா: ஸர்வ(நாநா)புஷ்ப ஸுசோபிதா: ||
அப்யம் பரசு: ஸவ்யே வாமே ஸ்யாத் வரதோ ம்ருக: ||

மஹாதேவ: சிவோ ருத்ர: சங்கரோ நீலலோஹித: ||

ஈசானோ விஜயோ பீமோ தேவதேவோ பவோத்பவ: |
கபாலீ ச இதி ஜ்ஞேயா: ருத்ரா ஏகாதச ஸ்ம்ருதா: ||
[ருத்ராணாம் லக்ஷணம் ப்ரோக்தம் ஸோமலக்ஷணமுச்யதே |]

அத ஸோமலக்ஷணம் ||

ஸோமஸ்ஸிம்ஹாஸநாஸீந: குந்தசங்கநிபத்யுதி: |
ப்ரபாமண்டலஸம்யுக்த: ஸிதபத்மாஸ்யவக்த்ரக: || ௬௬ ||

அணிகளும், பற்பல புஷ்பமாலைகளும், உடையவர்களாவார்கள். வலது கைகளில், அபயமும்—மழுவும், இடது கைகளில், வரதமும்—மானுமுடையவர்களாவார்கள்.

இவர்கள், நின்றவடிவமானால், ஸமபாதமாகவும், உட்கார்ந்த வடிவமானால், பத்மபீடத்தின்மீதும் இருக்க வேண்டும்.

இவர்கள், மஹாதேவன், சிவன், உருத்திரன், சங்கரன், நீலலோஹிதன், ஈசானன், விஜயன், ஈசன், தேவதேவன், பவோத்பவன், கபாலி, என்று பெயருடைய 11 பேர்களாகும். உருத்திர லக்ஷணம் கூறப்பட்டது. இனி ஸோம லக்ஷணத்தைக் கூறுகிறேன். (65)

சந்திர லக்ஷணம்.

சந்திரன் ஸிம்ஹாஸநத்திலிருப்பவராவார். அவர், முல்லை, சங்குபோன்ற நிறமும், மண்டலாகாரமாக வீசும்

[illegible]
[illegible]

[illegible]
[illegible]

[illegible]

[illegible]

[illegible]
[illegible]

தேஹகாந்தியும், 2 கைகளும், ஸௌமியமான முகமும், ஸுவர்ணயஜ்ஞோபவீதமும் (தங்கப் பூணூலும்) ஸகல ஆபரணங்களாலும் அலங்காரமும், வெண்மையான உடையும், பற்பல (வெண்மையான) புஷ்பங்களாலாகிய அலங்காரமும் உடையவராய், கைகளில் ஆம்பலும் நீலோத்பலமும் ஏந்தி, சாந்தமான ஆகாரத்துடன், நின்ற வடிவமாகவோ, உட்கார்ந்த வடிவமாகவோ, இருப்பதாம். சந்திர லக்ஷணம் கூறப்பட்டது. இனி க்ஷேத்திரபால(பைரவ) லக்ஷணத்தைக் கூறுகிறேன்.

க்ஷேத்ரபாலக(பைரவ)லக்ஷணம்.

க்ஷேத்திரபாலக மூர்த்தியானது, ஸத்துவகுண பிரதானமானது, ரஜோகுண பிரதானமானது, தமோகுண பிரதானமானது என மூன்று விதமாகும். ஸத்துவ மூர்த்தியானது, வெளுப்பு நிறமாகவும், ரஜோகுண மூர்த்தியானது சிவப்பு நிறமாகவும், தமோகுண மூர்த்தியானது கருப்பு நிறமாகவும் இருப்பவைகளாம். ஸத்துவ மூர்த்திக்கு 2 அல்லது 4 கைகளும், ரஜோமூர்த்திக்கு 6 கைகளும், தமோ

தாமஸஶ்சாஷ்டதோர்தண்ட: த்ரிணேத்ரஸ்ஸமபாதக: |
ஸ்தாநகே பத்மபீடம் ஸ்யாத் பத்ரபீடேऽதவாபி வா || ௭௦ ||

ஶூலம் து தக்ஷிணே ஹஸ்தே கபாலமிதரே பவேத் |
த்விஹஸ்தஶ்சைவமாக்யாத: அத ஹஸ்தசதுஷ்டயான்விதே ||

பரஹஸ்தே து ஸவ்யே ஸ்யாத் கட்வாங்கம் கட்கமந்யகே |
பூர்வஹஸ்தத்வயே சாபி அபயம் வரதம் ததா || ௭௨ ||

பூர்வவச்ச பரஹஸ்தௌ ச கண்டா ஸ்யாத்வாமஹஸ்தகே |
ஸாத்த்விகம் ஹ்யேவமாக்யாதம் ராஜஸம் ஶ்ருணு ஸுவ்ரத ||

ஶூலம் பத்மம் ச கண்டா ச தக்ஷிணே து கரத்ரயே |
கேடகம் ச கபாலம் ச நாகபாஶம் ச வாமகே || ௭௪ ||

மூர்த்திக்கு 8 கைகளுமாம். ஸ்தாநக மூர்த்தியானால் ஸமபாதமாம். (ஆஸநமானால்) பத்மபீடம் அல்லது பத்திர பீடத்திலிருப்பதாகும். பைரவ மூர்த்தியானது 3 கண்களுடையதாகும். (70)

பைரவரின் ஸத்துவ மூர்த்தியானது 2 கைகளுடனிருந்தால், வலது கையில் சூலமும் இடது கையில் கபாலமும் இருப்பதாகும்.

4 கைகளிருந்தால், வலது பரபுஜத்தில் கட்வாங்கமும் இடது கையில் கத்தியும், பூர்வ ஹஸ்தங்களில் அபயவரதமும் இருப்பதாகும். (கட்வாங்கம்–பரமேசுவரனுக்குரிய ஆயுதவிசேஷம்.) (72)

அல்லது பரஹஸ்தங்கள் முன்போலவும் பூர்வஹஸ்தம் இடது கையில் மணியுமிருப்பதுமாகும்.

இவ்விதம், ஸாத்துவிக மூர்த்தியின் லக்ஷணம் கூறப்பட்டிருக்கிறது. ஏ ஸுவ்ரத! இனி ராஜஸ மூர்த்தியின் லக்ஷணத்தைக் கூறுகிறேன். கேட்பாயாக. (73)

தாமஸே து தநுர்பாணம் தக்ஷிணே தக்ஷிணேதரே |
ஶேஷம் ராஜஸவத் ப்ரோக்தம் ரக்தகேஶோர்த்வகேஶகः ॥ ௭௫ ॥

உக்ரத்ருஷ்டிஶ்ஶிகாயுக்தः நாநாநாகவிபூஷிதः |
த்ரிணேத்ரஶ்சாக்நிஸங்காஶः கர்தவ்யஸ்ஸ்யாத் க்ஷேத்ரபாலகः ॥

[க்ஷேத்ரபாலலக்ஷணம் ப்ரோக்தம் ஸம்ஸ்தாஸ்ய லக்ஷணம்
பூர்ணம் |]

அத ஈஶாநலக்ஷணம் ॥

ஈஶாநோ த்விபுஜः ஶ்வேதः ஶ்வேதவஸ்த்ராபரணபூஷிதः |
ஜடாமகுடஸம்யுக்தः பூர்வவத்ஸம்ஸ்திதः ஸ்ம்ருதः ॥ ௭௭ ॥

ராஜஸ மூர்த்தியானது, வலது கைகள் மூன்றிலும், சூலம்–கத்தி–மணி இவைகளையும், இடது கைகள் மூன்றிலும் கேடயம்–கபாலம்–நாகபாசம் இவைகளையுமுடையதாகும். (74)

தாமஸ மூர்த்தியானது, இடது கையில் வில்லும், வலது கையில் அம்புமுடையதாம். மற்ற கைகளில் ராஜஸ மூர்த்திக்குக் கூறிய ஆயுதங்களேயாம்.

(தாமஸ மூர்த்தியானது) சிவப்பு நிறமாகவும் ஊர்த்துவ முகமாகவும் இருக்கும் சிகாமண்டலமும், உக்கிரமான திருஷ்டியும், பல நாகங்களை அணிந்தும், 3 கண்களுடையதாகவும், நெருப்புப்போன்ற வடிவமுடையதாகவும் செய்யத்தக்கதாகும். (76)

இவ்விதம் பைரவ லக்ஷணம் கூறப்பட்டுள்ளது இனி ஈசான லக்ஷணத்தைக் கூறுகிறேன்.

ஈசாந லக்ஷணம்.

ஈசான மூர்த்தியானது, 2 கைகளுடையதாம். வெளுப்பு நிறமும், வெளுப்பு வஸ்திரமுமுடையதாம். ஸகலவித

𑌸𑌵𑍍𑌯𑌜𑌾𑌨𑍁𑌵𑌿𑌤𑌤𑌸𑍍𑌤𑍁 𑌸𑌵𑍍𑌯𑌪𑌾𑌦𑍋𑌪𑌰𑌿 𑌸𑍍𑌥𑌿𑌤𑌃 ।
𑌶𑍂𑌲𑌂 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌹𑌸𑍍𑌤𑍇 𑌤𑍁 𑌕𑌪𑌾𑌲𑌂 𑌵𑌾𑌮𑌹𑌸𑍍𑌤𑌕𑍇 ॥ ௭௮ ॥

𑌏𑌵𑌮𑍀𑌶𑌸𑍍𑌯 𑌵𑍍𑌯𑌾𑌖𑍍𑌯𑌾𑌤𑌃 𑌶𑍃𑌣𑍁 𑌭𑌾𑌸𑍍𑌕𑌰𑌲𑌕𑍍𑌷𑌣𑌮𑍍 ।

𑌅𑌥 𑌆𑌦𑌿𑌤𑍍𑌯𑌲𑌕𑍍𑌷𑌣𑌮𑍍 ॥

𑌦𑍍𑌵𑌿𑌭𑍁𑌜𑌾𑌃 𑌪𑌦𑍍𑌮𑌹𑌸𑍍𑌤𑌾𑌸𑍍𑌤𑍁 𑌰𑌕𑍍𑌤𑌪𑌦𑍍𑌮𑌾𑌸𑌨𑍇 𑌸𑍍𑌥𑌿𑌤𑌾𑌃 ॥ ௭௯ ॥

𑌰𑌕𑍍𑌤(𑌤𑍍𑌨)𑌮𑌣𑍍𑌡𑌲𑌸𑌂𑌯𑍁𑌕𑍍𑌤𑌕𑌰𑌣𑍍𑌡𑌮𑌕𑍁𑌟𑌾𑌨𑍍𑌵𑌿𑌤𑌾𑌃 ।
𑌰𑌕𑍍𑌤𑌾𑌮𑍍𑌬𑌰𑌧𑌰𑌾𑌃 𑌸𑌰𑍍𑌵𑍇 𑌸𑌰𑍍𑌵𑌾𑌭𑌰𑌣𑌭𑍂𑌷𑌿𑌤𑌾𑌃 ॥ ௮௦ ॥

𑌛𑌨𑍍𑌨𑌵𑍀𑌰𑌸𑌮𑌾𑌯𑍁𑌕𑍍𑌤𑌾𑌃 𑌭𑌾𑌸𑍍𑌕𑌰𑌾 𑌦𑍍𑌵𑌾𑌦𑌶 𑌸𑍍𑌮𑍃𑌤𑌾𑌃 ।
𑌵𑌿𑌕𑌰𑍍𑌤𑌨𑍋 𑌵𑌿𑌵𑌸𑍍𑌵𑌾𑌂𑌶𑍍𑌚 𑌮𑌾𑌰𑍍𑌤𑌣𑍍𑌡𑍋 𑌭𑌾𑌸𑍍𑌕𑌰𑍋 𑌰𑌵𑌿𑌃 ॥

ஆபரணங்களையுமணிந்து, ஜடாமகுடமும் பூநூலும் அணிந்து, வலது கையில் சூலாயுதமும் இடது கையில் கபாலமும் ஏந்தி, வெண்தாமரைமலரில் வீற்றியிருப்பதாம். இவ்விதம் ஈசான லக்ஷணம் கூறப்பட்டிருக்கிறது. இனி ஆதித்தியர்களின் லக்ஷணத்தைக் கூறுகிறேன். கேட்பாயாக.

ஆதித்திய லக்ஷணம்.

ஆதித்தியர்கள், 2 கைகளும், 2 கைகளிலும் செந்தாமரை மலர்களை ஏந்தியும், செந்தாமரை மலரில் உட்கார்ந்து கொண்டுமிருப்பவர்களாவார்கள். (79)

சிவப்பு நிறமாய் வட்டமாக இருக்கும் (வட்டமாகப் பதிப்பிக்கப்பட்ட ரத்தினங்களுடன் கூடிய) கரண்ட மகுடத்தை அணிந்திருப்பவர்களாவார்கள். சிவப்பு ஆடையுடுத்தி, ஸகலவிதமான அணிகலங்களையுமணிந்து, சன்னவீரம் தரித்து இருப்பவர்களாவார்கள். இவ்விதமான ஆதித்தியர்கள் 12 பேர்களாவார்கள்.

1. விகர்த்தனன் 2. விவஸ்வான் 3. மார்த்தாண்டன்

ஜொகவால: வ்ரகாஶஸ்து ஜொகஸாக்ஷீ த்ரிவிக்ரமः ।
ஆதித்யஸ்து ததா ஸூர்ய: அம்ஶுமாலீ திவாகர: ॥ அஉ ॥

ஸவெத செவ ஆதித்யா: உத்தராதிக்ரமாக் ஸ்தீதா: ।
ஸவம் ஷொடஶஸம்வ்யாதா: ஆஶ்ரிஶ்ய வக்ஷ்யதெ ॥

அய அநந்தலக்ஷணம் ॥

ஸௌம்யஸ்து சதுர்புஜொபெதஃ ஸர்வாபரணபூஷிதः ।
ஜவாபுஷ்பநிபாகார: கரண்டமகுடாந்வித: ॥ அச ॥

ஸிதவஸ்த்ரபரஸ்ஸாந்த: த்ரிநெத்ர: பத்மஸம்ஸ்தித: ।
அபயம் வரதம் டக்காம் ஶூலம் ச தாரயந் கரை: ॥ அரு ॥

---

4. பாஸ்கரன் 5. ரவி 6. லோகபாலன் 7. பிரகாசன் 8. லோகஸாக்ஷீ 9. த்ரிவிக்கிரமன் 10. ஆதித்தியன் 11. ஸூரியன் 12. அம்சுமாலீ எனப்படும் திவாகரன் ஆகிய 12 பேர்களும் துவாதசாதித்தியர்களாவார்கள். (82)

இவர்கள் வடக்கிலிருந்து முறையே இருப்பவர்களாவார்கள்.

இவ்விதமாக 16 பரிவார மூர்த்திகளின் லக்ஷணம் கூறப்பட்டுள்ளது. இனி 32 பரிவார மூர்த்திகளின் லக்ஷணத்தைக் கூறுகிறேன். (83)

அனந்த லக்ஷணம்.

அநந்த மூர்த்தியானது, ஸௌமியமான வடிவமுடையதாகும். 4 கைகளுடையதாம். ஸகல ஆபரணங்களாலும் அலங்கரிக்கப்பட்டிருப்பதாம். சம்பரத்தம்பூவைப்போன்ற நிறமுடையதாம். கரண்டமகுடத்தை அணிந்திருப்பதாம். வெளுப்பு வஸ்திரம் தரித்ததாம். சாந்தமான முகமுடையதாம். 3 கண்களுடையதாம். கைகளில், அபயம்–வரதம்–உடுக்கை–சூலம் இவைகளை ஏந்தி, பத்மாஸநத்திலிருப்பதாம். (85)

𑌅𑌥 𑌅𑌰𑍍𑌕𑌲𑌕𑍍𑌷𑌣𑌮𑍍 ||

𑌅𑌰𑍍𑌕𑌶𑍍𑌶𑌾𑌨𑍍𑌤𑌶𑍍𑌚𑌤𑍁𑌰𑍍𑌭𑍁𑌜𑌸𑍍𑌸𑌾𑌙𑍍𑌗𑌃 𑌸𑌰𑍍𑌵𑌾𑌭𑌰𑌣𑌭𑍂𑌷𑌿𑌤𑌃 |
𑌹𑌿𑌰𑌣𑍍𑌯𑌸𑌦𑍃𑌶𑌪𑍍𑌰𑌖𑍍𑌯𑌃 𑌦𑍁𑌕𑍂𑌲𑌵𑌸𑌨𑌾𑌨𑍍𑌵𑌿𑌤𑌃 || ௮௭ ||

𑌅𑌭𑌯𑌂 𑌵𑌰𑌦𑌂 𑌚𑌾𑌪𑌿 𑌖𑌡𑍍𑌗𑌂 𑌖𑍇𑌟𑌂 𑌕𑌰𑍈𑌰𑍍𑌵𑌹𑌨𑍍 |
𑌸𑌾𑌸𑍀𑌨𑌃 𑌪𑌦𑍍𑌮𑌪𑍀𑌠𑍇 𑌤𑍁 𑌆(𑌸𑍂)𑌰𑍍𑌯𑌮𑍇𑌵𑌂 𑌪𑍍𑌰𑌕𑌲𑍍𑌪𑌯𑍇𑌤𑍍 ||

𑌅𑌥 𑌭𑌵𑌲𑌕𑍍𑌷𑌣𑌮𑍍 ||

𑌭𑌵𑌶𑍍𑌶𑌾𑌨𑍍𑌤𑌶𑍍𑌚𑌤𑍁𑌰𑍍𑌭𑍁𑌜𑌸𑍍𑌸𑌾𑌙𑍍𑌗𑌃 𑌜𑌟𑌾𑌮𑌕𑍁𑌟𑌮𑌣𑍍𑌡𑌿𑌤𑌃 |
𑌅𑌤𑌿𑌰𑌕𑍍𑌤𑌸𑌮(𑌤𑌨𑍁)𑌪𑍍𑌰𑌖𑍍𑌯𑌃 𑌸𑌰𑍍𑌵𑌾𑌭𑌰𑌣𑌭𑍂𑌷𑌿𑌤𑌃 ||௮௮||

𑌹𑌿𑌰𑌣𑍍𑌯𑌸𑌦𑍃𑌶𑌪𑍍𑌰𑌖𑍍𑌯𑌃 𑌦𑍁𑌕𑍂𑌲𑌵𑌸𑌨𑌾𑌨𑍍𑌵𑌿𑌤𑌃 |
𑌅𑌭𑌯𑌵𑌰𑌦𑍋𑌪𑍇𑌤 𑌶𑍂𑌲𑌪𑌾𑌶𑌯𑍁𑌤𑍋 𑌭𑌵𑌃 || ௮௯ ||

அர்க்கன் லக்ஷணம்.

அர்க்கன் சாந்தமான வடிவமும் 4 கைகளும் உடையவராவார். ஸகல ஆபரணங்களையும் அணிந்திருப்பார். ஸுவர்ணம்போன்ற மேனியும் வெண்பட்டாடையும் உடையவராவார். கைகளில் அபயம்--வரதம்—கத்தி—கேடயம் இவைகளை ஏந்தியிருப்பவராவார். பத்மபீடத்தில் உட்கார்ந்திருப்பவராவார். இவ்விதம் ஆரியனை (ஸூரியனை) கல்பிக்கவேண்டும். (87)

பவ லக்ஷணம்.

பவன், சாந்தமான வடிவமுடையவராவார். மிகச் சிவந்த மேனியும் 4 கைகளுமுடையவராவார். ஜடா மகுடம் தரித்து, ஸகல ஆபரணங்களையுமணிந்திருப்பார். அவருடைய மேனி ஸுவர்ணம்போன்றதாகும். வெண் பட்டாடையுடுத்தியிருப்பார். கைகளில் அபயம்—வரதம்—சூலம்—பாசம் இவைகளை ஏந்தியிருப்பவராவார். (89)

𑌅𑌥 𑌮𑌰𑍁𑌦𑍍𑌲𑌕𑍍𑌷𑌣𑌂 ॥

𑌶𑌾𑌨𑍍𑌤𑌰𑍂𑌪𑌧𑌰𑌾𑌃 𑌸𑌰𑍍𑌵𑍇 𑌸𑌰𑍍𑌪𑌯𑍁𑌕𑍍𑌤𑌕𑌰𑌾 𑌦𑍍𑌵𑌿𑌨𑍇𑌤𑍍𑌰𑌕𑌾𑌃 ।
[𑌶𑌾𑌨𑍍𑌤𑌰𑍂𑌪𑌾𑌃 𑌸𑌰𑍍𑌪𑌯𑍁𑌕𑍍𑌤𑌾𑌃 𑌸𑌰𑍍𑌵𑍇 (𑌵𑌾𑌤𑌾𑌃)
𑌦𑍍𑌵𑌿𑌨𑍇𑌤𑍍𑌰𑌕𑌾𑌃 ।]
𑌅𑌤𑍍𑌯𑌨𑍍𑌤𑌸𑍁𑌨𑍍𑌦𑌰(𑌰𑌾𑌃) 𑌶𑌾𑌨𑍍𑌤𑌾(𑌃) 𑌸𑌰𑍍𑌵𑌾𑌭𑌰𑌣-
𑌭𑍂𑌷𑌿𑌤𑌾(𑌃) ॥ ௯௦ ॥

𑌨𑌾𑌨𑌾𑌗𑌨𑍍𑌧𑌾𑌨𑍁𑌲𑌿𑌪𑍍𑌤𑌾𑌶𑍍𑌚(𑌂𑌗𑌾𑌃) 𑌚(𑌨𑌾𑌨𑌾)𑌪𑍁𑌷𑍍𑌪𑌵𑌿-
𑌭𑍂𑌷𑌿𑌤𑌾(𑌃) ।
𑌕𑌰𑌣𑍍𑌡𑌮𑌕𑍁𑌟𑍋𑌪𑍇𑌤𑌾(𑌃) 𑌪𑌦𑍍𑌮𑌪𑍀𑌠𑍋𑌪𑌰𑌿𑌸𑍍𑌥𑌿𑌤𑌾(𑌃) ॥ ௯௧ ॥

𑌅𑌥 𑌅𑌪𑍍𑌸𑌰𑍋𑌲𑌕𑍍𑌷𑌣𑌮𑍍 ॥

𑌕𑌿𑌞𑍍𑌚𑌿𑌲𑍍𑌲𑌕𑍍𑌷(𑌸𑍂)𑌕𑍍𑌷𑍍𑌮𑌮𑌧𑍍𑌯𑌾𑌶𑍍𑌚 𑌪𑍀𑌨𑍋𑌰𑍁𑌜𑌘𑌨𑌸𑍍𑌤𑌨𑌾𑌃 ।
𑌸𑍍𑌵𑌰𑍍𑌣𑌕𑌞𑍍𑌚𑍁𑌕𑌸𑌂𑌵𑍀𑌤𑌾(𑌹𑍇𑌮𑌾)𑌙𑍍𑌗𑌾𑌃 𑌨𑌾𑌨𑌾𑌵𑌸𑍍𑌤𑍍𑌰𑌯𑍁𑌤𑌾 𑌵𑌰𑌾𑌃 ॥

மருத்துக்களின் லக்ஷணம்.

மருத்துக்கள், (மருத்து—வாயு) சாந்தமான உருவம் படைத்தவர்களாவார்கள். இரு கைகளிலும் ஸர்ப்பங்களை தரித்துக்கொண்டிருப்பார்கள். இரண்டு கண்களுடையவர்கள். மிக்க அழகும் சாந்தமுமுடையவர்கள். ஸகல ஆபரணங்களையும் அணிந்து, பற்பல வாஸனை திரவியங்களையும் பலவித புஷ்பங்களையும் அணிந்திருப்பார்கள். கரண்ட மகுடம் தரித்து பத்மபீடத்தில் இருப்பவர்களாவார்கள். (91)

அப்ஸரஸ்ஸுகளின் லக்ஷணம்.

அப்ஸரஸ்ஸுகள், பயிர்போன்று பசுமையான நிறமுடையவர்களாவார்கள். சிறிது விலக்ஷணமான (சிறிது ஒட்டிய) வயிறு உடையவர்கள். பருத்த துடை-பிருஷ்டபாகம்-ஸ்தநங்களையுடையவர்களாவார்கள். தங்க ஜரிகை

ஸஸ்யஶ்யாமநிபாகாரா ரக்தோத்பலதரா: கரே |
ஜாநுலம்பஹஸ்தாஶ்ச ஸர்வே ச (ஸர்வாஶ்ச) ஸமபங்கிகா: ||

அத கௌரீலக்ஷணம் ||

ஸூக்ஷ்மா நீலநிபா (ஸஸ்யஶ்யாமதநு:) ஶாந்தா ஹேம-
வஸ்த்ரயுதா வரா |
சதுர்புஜா த்ரிநேத்ரா ச ஸர்வாபரணபூஷிதா ||

அபயம் வரதம் டங்கம் ஶூலம் ச ததுதீ கரை: |
கௌரீலக்ஷணமாக்யாதம் யதா ஸகலலக்ஷணே || ௯௩ ||

தமேவ காரயேத்தீமாந் ஸ்தாபயேச்ச கேவலஸாத்விகாம் |

களுடன் கூடிய பலநிற பட்டாடைகளை அணிந்திருப்பார்கள். ஒரு கையில் செந்தாமரை மலரேந்தி மற்றொரு கையை முழங்கால்வரையில் தொங்கவிட்டுக்கொண்டு இருப்பவர்களாவார்கள். இவர்கள் யாவரும் ஸமபங்க லக்ஷணமுடையவர்களாவார்கள். (93)

கௌரீ லக்ஷணம்.

கௌரீ தேவியானவள், மெல்லிய உடலும் நீலநிறமுமுடையவளாவாள். (பயிர்போன்ற பசுமை நிறமுடையவளாவாள்). சாந்தமான தோற்றமுடையவள். ஸ்வர்ண வர்ணமுடைய ஆடையை அணிந்திருப்பவளாவாள். 4 கைகளும் 3 கண்களுமுடையவளாவாள். ஸகல ஆபரணங்களையும் அணிந்திருப்பவளாவாள். கைகளில், அபயம்-வரதம்-டங்கம் (உளி)-சூலம்-இவைகளை தரித்திருப்பாள். இவ்விதமாக ஸகல லக்ஷணத்தில் கௌரீ லக்ஷணம் கூறப்பட்டிருக்கிறது.

சுத்த ஸத்வ பிரதானமான இந்த மூர்த்தியை புத்திமானாயிருப்பவன், கூறியுள்ளபடியே செய்து ஸ்தாபிக்க வேண்டும்.

அத ஶர்வலக்ஷணம் ॥

ஶர்வ꞉ குந்தேந்துஸங்காஶ꞉ ஸர்வாபரணபூஷித꞉ ॥ ௧௬ ॥

ஜடாமகுடஸம்யுக்த꞉ ஶங்ககுந்தேந்துஸந்நிப꞉ ।
அபயம் வரதம் கட்கம் கேடகம் ச தரந் கரை꞉ ॥ ௧௭ ॥

பத்மாஸநோபவிஷ்டஸ்து ஸ்தாநக꞉ ஶர்வ ஸம்ஸ்தித꞉ (ஸம்ஸ்தித꞉) ।

அத விரிஞ்சித்யாநம் ॥

சதுர்வக்த்ரஶ்சதுர்பாஹு꞉ ஸ்வர்ணாக்ஷ꞉ ஸர்ப(ஸர்வ)
பூஷண꞉ ॥ ௧௮ ॥

க்ருஷ்ணாஜிநோத்தரீயஶ்ச யஜ்ஞஸூத்ரஸமந்வித꞉ ।
ஶுக்லவஸ்த்ரபரீதாந꞉ ஸகடீஸூத்ரமேகல꞉ ॥ ௧௯ ॥

சர்வ லக்ஷணம்.

சர்வ மூர்த்தியானது, சங்கு-முல்லை-சந்திரன்-இவைகளைப்போல வெண்மையான நிறமுடையது. 4 கைகள் உடையதாம். ஸகல ஆபரணங்களையும் அணிந்திருப்பதாம். ஜடாமகுடத்தை தரித்திருப்பதாம். கைகளில், அபயம்-வரதம்-கத்தி-கேடயம்-இவைகளை ஏந்தியிருப்பதாம். பத்மாஸநத்தில் ஸ்தாநகமாக இருப்பதாம். இவ்விதம் சர்வ லக்ஷணம் கூறப்பட்டிருக்கிறது.

பிரம்ஹதேவ லக்ஷணம்,

பிரம்ஹதேவர், 4 முகங்களும், 4 கைகளும். பொன்னிறக் கண்களுமுடையவராவார். ஸர்பங்களை ஆபரணங்களாக அணிந்திருப்பவராவார்? [ஸகல ஆபரணங்களையும் அணிந்திருப்பவராவார்] வெண்பட்டாடையுடுத்தி, மான் தோலை உத்தரீயமாகக் கொண்டிருப்பவராவார். பூநூலணிந்திருப்பார். அரை ஞாணுடன் மேகலை என்னும் கட்டுவாரு

ஶுக்லமால்யாநுலேபஶ்ச கர்ணகுண்டலமண்டிதः |
தக்ஷிணே அக்ஷமாலாம் ச கூர்ச்சம் சைவ து
தாரயேத் || [illegible] ||

கமண்டலும் குஶம் வாமே தக்ஷிணே ஸ்ருக்ஸ்ருவௌ
ததா |
ஆஜ்யஸ்தாலீம் குஶாம்ஶ்சைவ வாமஹஸ்தே து தாரயேத் ||

ஸுப்ரவர்ணஶ் சதுர்ஹஸ்தோ வாமே விநாயகः |
ஸூக்ஷ்மே தத்ஸ்யாம்ஶ்ச ஶோபயேத்து ப்ரஸஸ்தம் ||

* ஜ்ஞாநமுத்ராவிஶிஷ்டஸ்து வாமஹஸ்தோ வரதகம் |

மணிந்திருப்பார். வெண்சந்தணம் பூசி வெண்மையான மாலையுமணிந்திருப்பார். காதுகளில் குண்டலங்களையணிந்திருப்பார்.

வலது கைகளில், ஜபமாலையும் கூர்ச்சமும் (கூர்ச்சம்-தர்பத்தால் முறைபுடன் செய்யப்பட்ட ஒருவித முடிச்சு) இடது கைகளில் கமண்டலமும் (கிண்டிபோன்ற அமைப்புடைய பாத்திரம்.) குசமும் (தர்ப்பப்புல்) தரித்திருப்பவராவார்.

அல்லது, வலதுகைகளில் ஸ்ருக்-ஸ்ருவம்-இவைகளையும் இடது கைகளில் ஆஜ்பஸ்தாலீ-தர்ப(முஷ்டி)ம் - இவைகளையும் தரித்திருப்பவராவார். [ஸ்ருக்-ஸ்ருவம் இவைகள் யாகங்களில் ஹோமம் செய்ய ஸாதனமாக, மரத்தால் செய்யப்பட்ட கருவிகள். இவைகள், சிறிய முட்டைக் கரண்டியைப்போல் இருக்கும்]

---

* ஜ்ஞாநமுத்ராதரோ வாமே ஸவ்யேऽபயம் கரம் |
ஸவ்யஹஸ்தம் ச தத்ஸவ்யாபயே ததா தத்ஸ்தோ ஸமாஸ்தித: ||
இதி பாத்மே ஸாவ்யே.

𑌸𑌵𑍍𑌯𑌹𑌸𑍍𑌤𑌂 𑌚 𑌤𑌥𑍈𑌵𑌾𑌸𑍍𑌯 𑌤𑌤𑍍𑌰 𑌨𑍍𑌯𑌸𑍍𑌤𑍌 𑌸𑌵𑌾𑌮𑌕𑍌 ॥

𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑍇 𑌚𑌾𑌕𑍍𑌷𑌮𑌾𑌲𑌾𑌂 𑌚 𑌵𑌾𑌮𑌹𑌸𑍍𑌤𑍇 𑌕𑌮𑌣𑍍𑌡𑌲𑍁𑌮𑍍 ।
𑌸𑌰𑌸𑍍𑌵𑌤𑍀 𑌦𑌕𑍍𑌷𑌪𑌾𑌰𑍍𑌶𑍍𑌵𑍇 𑌸𑌾𑌵𑌿𑌤𑍍𑌰𑍀 𑌵𑌾𑌮𑌪𑌾𑌰𑍍𑌶𑍍𑌵𑌕𑍇 ॥ ௰௪ ॥

𑌸𑍍𑌥𑌿𑌤𑍇 𑌵𑌾 𑌹𑍍𑌯𑌾𑌸𑌿𑌤𑍇 𑌵𑌾𑌪𑌿 𑌪𑌦𑍍𑌮𑌪𑍀𑌠𑍋𑌪𑌰𑌿 𑌸𑍍𑌥𑌿𑌤𑌃 ।

𑌅𑌥 𑌶𑌿𑌵𑍋𑌤𑍍𑌤𑌮𑌲𑌕𑍍𑌷𑌣𑌮𑍍 ॥

𑌶𑌿𑌵𑍋𑌤𑍍𑌤𑌮𑌃 𑌶𑍍𑌵𑍇𑌤𑌵𑌰𑍍𑌣𑌃 𑌚𑌤𑍁𑌰𑍍𑌭𑍁𑌜𑌸𑌮𑌨𑍍𑌵𑌿𑌤𑌃 ॥ ௰௫ ॥

𑌸𑌰𑍍𑌵𑌾𑌭𑌰𑌣𑌸𑌂𑌯𑍁𑌕𑍍𑌤𑌃 𑌶𑍁𑌕𑍍𑌲𑌵𑌸𑍍𑌤𑍍𑌰𑍋𑌪𑌵𑍀𑌤𑌕𑌃 ।
𑌨𑍇𑌤𑍍𑌰𑌦𑍍𑌵𑌯𑌸𑌮𑌾𑌯𑍁𑌕𑍍𑌤𑌃 𑌕𑌰𑌣𑍍𑌡𑌮𑌕𑍁𑌟𑌾𑌨𑍍𑌵𑌿𑌤𑌃 ॥ ௰௬ ॥

அல்லது, ஆஸநத்தில் உட்கார்ந்துகொண்டு முன்கைகளை வரதமாகவும் அபயமாகவும் வைத்துக்கொண்டு, இரு கால்களையும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைத்து வைத்துக்கொண்டு, மேட்ர மூலத்திற்குமேலே (அதாவது நடு மடியில்) இரு கைகளில் இடதுகையை மேலே நோக்கி வைத்து அதன்மேலே வலதுகையையும் முன்போலவே மே நோக்காகவே வைத்துக்கொண்டு, இருப்பவராவார்.

அல்லது, முன்கைகள் அபயம் வரதமாகவும், புறக்கைகளில் வலக்கையில் ஜபமாலையும் இடக்கையில் கமண்டலமும் கொண்டிருப்பதுமாம்.

வலது பக்கத்தில் ஸரஸ்வதியும் இடது பக்கத்தில் ஸாவித்திரியுமிருப்பார்கள்.

நின்ற வடிவமானாலும் உட்கார்ந்த வடிவமானாலும் பிரம்மதேவர் பத்மபீடத்திலிருப்பதாகும்.

சிவோத்தம லக்ஷணம்.

சிவோத்தம மூர்த்தியானது, வெளுப்பு நிறமும் 4 கைகளும் 2 கண்களும் ஸகல ஆபரணங்களாலும் அலங்காரமும் வெளுப்பு வஸ்திரமும் பூநூலும் கரண்ட மகுடமு

அபயம் வரதம் ஶூலம் பாஶம் சாபி வஹந் கரை: |
பத்மபீடோபரிஷ்டாத்து ஸ்தாநக: ஸமபாதக: || ௱௭ ||

அத ப்ருகுலக்ஷணம் ||

ப்ருகுஶ்ஶாந்தவிக்ரஹஶ் ஶ்வேதவஸ்த்ரயாந்விதா |
கரண்டமகுடோபேதோ ஹஸ்தத்வயஸமந்வித: || ௱௮ ||

அபயவரதோபேத: ஸர்வாபரணபூஷித: |
ஸ்தாநகோ வாஸநோ வாபி பத்மபீடே ப்ருகுஶ்ஶுப: ||

அத ஈஶாகஸ்த்யகௌஶிகைகநேத்ரலக்ஷணம் ||

பூர்வோக்தேஶஸ்வரூபஸ்து ததாகஸ்த்யம் ச கல்பயேத் |
அகஸ்த்யவத் கௌஶிகம் ச ஸ்தாபயேத் ஸ்தாபகோத்தம: ||

முடையதாகும். கைகளில், அபயம்—வரதம்—சூலம்—பாசம் இவைகளை ஏந்தியிருப்பதாகும். பத்ம பீடத்தில் ஸம பாதமாகவும் ஸ்தாநகமாகவுமிருப்பதாகும். (107)

பிருகுமுனிவரின் லக்ஷணம்.

பிருகுமுனிவர், சாந்தமான வடிவமுடையவராவார். வெண்மையான வஸ்திரமும், 2 கைகளும் உடையவராவார். கரண்ட மகுடம் தரித்தவராவார். 2 கைகளிலும் அபயமும் வரதமும் தரித்திருப்பவராவார். ஸகல ஆபரணங்களையும் அணிந்திருப்பவராவார். ஸ்தாநகவடிவமாஞலும், ஆஸந வடிவமாஞலும், பத்மபீடத்தில் இருப்பதாகும். இந்த மூர்த்தியானது சுபகரமானதாகும். (109)

ஈச-அகஸ்திய-கௌசிக-ஏகநேத்ர லக்ஷணம்

ஈச லக்ஷணம் முன்னமே (பவ லக்ஷணத்தில்) கூறப் பட்டுவிட்டது. அகஸ்திய லக்ஷணத்தையும் (ஸப்தர்ஷி லக்ஷணத்தில்) முன்பு கூறியதுபோலவே கொள்ளவும். கௌசிக லக்ஷணமும் அவ்விதமேயாம்.

ஏகநேத்ரஸ்து சதுர்பாஹு: நேத்ரத்ரயஸமந்வித: |
சாம்பேயபுஷ்பாப: ஸூக்ஷ்மஶுக்லாம்பராவ்ருத: ॥ ௧௧௧ ||

ஜடாமகுடஸம்யுக்த: ஸர்வாபரணபூஷித: |
அபயவரதோபேத: டங்கஶூலஸமந்வித: ॥ ௧௧௨ ॥

அத விக்னேஶ ஸரஸ்வதீலக்ஷணம் ॥

விக்னேஶம் பூர்வவத் க்ருத்வா ஸ்தாபயேத்தேஶிகோத்தம: |
ஸரஸ்வதீ சதுர்பாஹு: ஶ்வேதபத்மாஸநாந்விதா || ௧௧௩ ||

ஜடாமகுடஸம்யுக்தா ஶுக்லவர்ணா ஸிதாம்பரா |
யஜ்ஞோபவீதஸம்யுக்தா முக்தாஹாரா ஸுலோசநா ॥

வ்யாக்யாமுத்ராம் அக்ஷமாலாம் தக்ஷிணே து கரத்வயே |

ஏக நேத்திரமூர்த்தியானது, 4 கைகளும், 3 கண்களும், சம்பரத்தம் பூவின் நிறமும், வெண்பட்டாடையும், சாந்தமான உருவமும் உடையதாய் ஜடாமகுடம் தரித்து ஸகல அலங்காரங்களாலும் அலங்கரிக்கப்பட்டு, கைகளில், அபயம்-வரதம்-டங்கம்-சூலம் இவைகளை தரித்து இருப்பதாகும்.

விக்கிநேசுவர—ஸரஸ்வதீ லக்ஷணம்.

தேசிகோத்தமன், முன்பு கூறியுள்ள லக்ஷணத்துடன் விக்கிநேசுவரரை செய்து ஸ்தாபிக்கவேண்டும்.

ஸரஸ்வதீ தேவியானவள், 4 கைகளும், வெளுப்பு நிறமும், வெளுப்பு ஆடையும் உடையவளாவாள். வெண்தாமரை மலரில் உட்கார்ந்திருப்பவளாவாள். அழகிய கண்களையுடையவளாவாள். யஜ்ஞோபவீதமணிந்து, முக்தாஹாரமும் அணிந்திருப்பவளாவாள். ஜடாமகுடம் (சடையாலாகிய மகுடம்) தரித்திருப்பவளாவாள்? வலது கைகளில் வியாக்கியாந முத்திரையும் (சின்முத்திரையும்)

𑌪𑍁𑌸𑍍𑌤𑌕𑌂 𑌕𑍁𑌣𑍍𑌡𑌿𑌕𑌾𑌂 𑌵𑌾𑌮𑍇 𑌤𑍍𑌰𑌿𑌨𑍇𑌤𑍍𑌰𑌾 𑌚𑌾𑌰𑍁𑌰𑍂𑌪𑌿𑌣𑍀 ॥

𑌋𑌗𑍍𑌯𑌜𑍁𑌸𑍍𑌸𑌾𑌮𑌸𑌂𑌹𑌿𑌤𑌾𑌭𑌿 𑌮𑍁𑌨𑌿𑌭𑌿𑌸𑍍𑌸𑍇𑌵𑌿𑌤𑌾 𑌵𑌰𑌾 ।
𑌸𑌰𑍍𑌵𑌲𑌕𑍍𑌷𑌣𑌸𑌂𑌯𑍁𑌕𑍍𑌤𑌾 𑌵𑌾𑌗𑍍𑌦𑍇𑌵𑍀 𑌪𑌰𑌿𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌤𑌾 ॥ ௱௬௬ ॥

𑌅𑌥 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌲𑌕𑍍𑌷𑌣𑌮𑍍 ॥

𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌃 𑌪𑌦𑍍𑌮𑌾𑌸𑌨𑌾𑌸𑍀𑌨𑌾 𑌦𑍍𑌵𑌿𑌭𑍁𑌜𑌾 𑌕𑌾𑌞𑍍𑌚𑌨𑌪𑍍𑌰𑌭𑌾 ।
𑌹𑍇𑌮𑌰𑌤𑍍𑌨𑍋𑌜𑍍𑌜𑍍𑌵𑌲𑌦𑌿𑌵𑍍𑌯𑌕𑌰𑍍𑌣𑌕𑍁𑌣𑍍𑌡𑌲𑌮𑌣𑍍𑌡𑌿𑌤𑌾 ॥ ௱௬௭ ॥

𑌸𑌯𑍌𑌵𑌨𑌾 𑌸𑌾𑌙𑍍𑌗𑌰𑍂𑌪𑌾 𑌕𑍁𑌞𑍍𑌚𑌿𑌤𑌭𑍍𑌰𑍂𑌃 𑌸𑌵𑌿𑌭𑍍𑌰𑌮𑌾 ।
𑌰𑌕𑍍𑌤𑌾𑌕𑍍𑌷𑍀 𑌪𑍀𑌨𑌗𑌣𑍍𑌡𑌾 𑌚 𑌕𑌞𑍍𑌚𑍁𑌕𑌾𑌙𑍍𑌕𑌿𑌤 (𑌕𑌾𑌶𑍍𑌯) 𑌸𑍍𑌤𑌨𑌦𑍍𑌵𑌯𑍀 ॥

𑌶𑌿𑌰𑌸𑍋 [illegible] ।

ஜபமாலையும், இடது கைகளில் புஸ்தகமும் குண்டிகையும் (கிண்டி) தரித்திருப்பவளாவாள். மூன்று கண்களும் அழகிய உருவமுமுடையவளாவாள். ருக்கு–யஜுஸ்–ஸாம–என்ற மறைகளாலும் முனிவர்களாலும் ஸேவிக்கப் பட்டிருப்பவளாவாள். வாக்குக்கு அதிதேவதையான ஸரஸ்வதீதேவி, இத்தகைய லக்ஷணங்களுடையவளென்று கூறப்பட்டிருக்கிறது.

லக்ஷ்மீ லக்ஷணம்.

லக்ஷ்மீ தேவியானவள், பத்மாஸநத்தில் உட்கார்ந்திருப்பவளாவாள். இரண்டு கைகளும் பொன்னிற மேனியுமுடையவளாவாள். காதில் கற்கள் பதித்த பொன்தோலை யணிந்திருப்பவளாவாள். நல்ல யௌவனப்பருவமும், அழகிய அங்க அமைப்பும், வளைந்த புருவமும், அழகு நிறைந்த விலாஸமும் உடையவளாவாள். சிவந்த கண்களும் பருத்த (சதைப்பற்றுள்ள) கன்னங்களும், ரவிக்கை அணிந்த ஸ்தநங்களுமுடையவளாவாள். தலை அணியும்

ஸாம்புஜம் தக்ஷிணே ஹஸ்தே வாமே ஶ்ரீபலமிஷ்யதே ॥

ஸுமத்யா விபுலஶ்ரோணீ ஸூக்ஷ்மாம்பரவேஷ்டிதா |
மேகலாகடிஸம்யுக்தா ச ஸர்வாபரணபூஷிதா || ௱௨௰ ||

அத ஏகருத்ர-பஶுபதி-வஸுலக்ஷணம் ||

ஏகாக்ஷருத்ரவத்ப்ரோக்த ஏகருத்ர: காயேன விஶேஷத: |
பஶுபதிம் ஸமவேதஸ்து ஏகாக்ஷரவசனேஷு கோஷ்டித: ॥

தரோ த்ருவஸ்து ஸோம: ஸ்யாத் ஆபஸ்ச நல ஏவ ச |
அநிலஶ்சைவ ப்ரத்யூஷ: ப்ரபாவ(ஸ)ஸ்ததைவ ச ॥

வஸவோஷ்டௌ கீர்த்திதா ஹ்யேதே ரக்தவர்ணா த்விநேத்ரகா: |
பீதாம்பரதராஸ்ஸர்வே க்ருஷ்ணா வா ஹ்ருதாஸ்து வா ॥

முன் தலையின் இரு பக்கங்களிலும் அணியும் சங்கசக்ர வடிவமான நெத்திச் சுட்டியும் உடையவளாவாள். வலது கையில் தாமரை மலரும், இடது கையில் பில்வப்பழமும் வைத்திருப்பவளாவாள். அழகிய இடுப்பும் பருத்த பிருஷ்ட பாகமும், அழகிய வஸ்திராலங்காரமும், ஒட்டியாணமும் அரைநூல் மாலையும் அணிந்து, ஸகல ஆபரணங்களாலும் அலங்கரிக்கப்பட்டும் இருப்பவளாவாள்.

ஏகருத்திர–பசுபதி–வஸு–லக்ஷணம்.

ஏகருத்திரன் – பசுபதி – இவர்களை, ஏகாக்ஷருத்திரனுக்குக் கூறிய லக்ஷணப்படியே செய்யவேண்டும்.

தரன், துருவன், ஸோமன், ஆபதேவன், அநலன், அநிலன், பிரத்யூஷன், பிரபாவ(ஸ)ன் என்ற பெயருடைய 8 பேர்களும் வஸுக்கள் எனப்படுவார்கள்.

இவர்கள் சிகப்புநிறம் உடையவர்களாவார்கள். இரண்டு கைகளுடையவர்களாவார்கள். இவர்கள் எல்

𑌸𑌰𑍍𑌵𑍇 𑌟𑌙𑍍𑌕𑌹𑌸𑍍𑌤𑌾𑌶𑍍𑌚 𑌸𑌰𑍍𑌵𑌾𑌭𑌰𑌣𑌭𑍂𑌷𑌿𑌤𑌾𑌃 |
𑌕𑌰𑌣𑍍𑌡𑌮𑌕𑍁𑌟𑍋𑌪𑍇𑌤𑌾𑌃 𑌰𑍌𑌦𑍍𑌰𑌾𑌂𑌶𑌾𑌶𑍍𑌚𑍈𑌵 𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌤𑌾𑌃 ||

𑌅𑌥 𑌮𑌹𑌾𑌦𑍇𑌵 𑌤𑍍𑌰𑌿𑌮𑍂𑌰𑍍𑌤𑌿 𑌯𑌕𑍍𑌷𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌲𑌕𑍍𑌷𑌣𑌮𑍍 ||

𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌃 𑌪𑌶𑍁𑌪𑌤𑌿𑌵𑌤𑍍 𑌮𑌹𑌾𑌦𑍇𑌵𑍋 𑌵𑌿𑌜𑌾𑌨𑌤𑌾 |
𑌏𑌕𑌰𑍁𑌦𑍍𑌰𑌵𑌤𑍍 𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌮𑍂𑌰𑍍𑌤𑌿𑌰𑍍𑌵𑌿𑌜𑌾𑌨𑌤𑌾 || ௱௨௫ ||

𑌯𑌕𑍍𑌷𑌾𑌣𑌾𑌂 𑌸𑌰𑍍𑌵𑌯𑌕𑍍𑌷𑍇𑌶𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑌾𑌭𑌰𑌣𑌭𑍂𑌷𑌿𑌤𑌃 |
𑌤𑌪𑍍𑌤𑌕𑌾𑌞𑍍𑌚𑌨𑌸𑌙𑍍𑌕𑌾𑌶𑌃 𑌦𑍍𑌵𑌿𑌨𑍇𑌤𑍍𑌰𑌭𑍁𑌜𑌸𑌮𑌨𑍍𑌵𑌿𑌤𑌃 || ௱௨௬ ||

𑌵𑌰𑌦𑌾𑌭𑌯𑌹𑌸𑍍𑌤𑌶𑍍𑌚 𑌗𑌦𑌾 𑌵𑌾 𑌵𑌾𑌮𑌹𑌸𑍍𑌤𑌕𑍇 |
𑌭𑌦𑍍𑌰𑌪𑍀𑌠𑍋𑌪𑌵𑌿𑌷𑍍𑌟𑌸𑍍𑌤𑍁 𑌵𑌿𑌨𑍇𑌤𑍍𑌰𑌾 𑌨𑌰𑌵𑌾𑌹𑌨𑌃 || ௱௨௭ ||

லோருமே பீதாம்பரம் உடுத்தியிருப்பவர்களாவார்கள். இவர்கள் உட்கார்ந்த வடிவமாகவோ அல்லது நின்ற வடிவமாகவோ இருப்பதாகும். கைகளில் கத்தியும் கேடயமுமேந்தி இருப்பவர்களாவார்கள். ஸகல ஆபரணங்களாலும் அலங்கரிக்கப்பட்டு, கரண்டமகுடமணிந்து இருப்பவர்களாவார்கள். இவர்கள், பயங்கரமான ரூபமுடையவர்கள். அல்லது ருத்திரனின் அம்சம் படைத்தவர்கள் என்று கூறப்பட்டிருக்கிறது.

மஹாதேவ-த்ரிமூர்த்தி-தநத-இந்திர லக்ஷணம்.

மஹாதேவ மூர்த்தியை பசுபதி மூர்த்தியைப்போல செய்யவேண்டும். த்ரிமூர்த்தியை ஏகருத்திரனைப் போல் செய்யவேண்டும்.

ஸகல யக்ஷர்களுக்கும் அதிபனான குபேரன், உலையில் இட்ட தங்கம்போன்ற நிறமுடையவராவார். 2 கைகளும் 2 கண்களுமுடையவராவார். ஸகல ஆபரணங்களையும் அணிந்திருப்பவராவார். இருகைகளிலும் அபயமும் வரதமுமுடையவராவார். அல்லது இடதுகையில் கதை வைத்

ரக்தாம்பரஸ்ரக்வஸ்த்ரஶ்ச ஶங்கபத்மநிதியுத꞉ |
ஶங்கபத்மநிதீ தஸ்ய பூதாகாரௌ மஹாபலௌ ||

குண்டீநாம் பத்மபீடே து பத்மஹஸ்தௌ ஸிதௌ ததா |
கரண்டமகுடோபேதௌ ஸிதவஸ்த்ரோத்தரீயகௌ ||

தக்ஷிணே தக்ஷிணே ஶங்கநிதி꞉ பத்மநிதி꞉ ஸ்ம்ருத꞉ |
குபேரஸ்ய து வாமே ச தேவீம் குர்யாத் ஸலக்ஷணாம் ||

யதோக்தமேவ வாஸவம் ப்ராகுக்தம் வா கல்பயேத் |

அத காலாக்நிருத்ரலக்ஷணம் ||

காலாக்நிருத்ரமூர்தேஸ்து லக்ஷணம் வக்ஷ்யதே(அ)துநா ||
அத்யுக்ரம் ஜ்வலிதாகாரம் ... |

திருப்பதுமாம். பத்மபீடத்தில் இருப்பவராவார். இவருக்கு நரவாகனமாம். (நரவாகனம்-மனிதர்களால் சுமக்கப்படும் பல்லக்கு) இவர் சிகப்பு வஸ்திரமணிந்திருப்பார்: சங்கநிதி-பத்மநிதிகளுடன் இருப்பவராவார்.

சங்கநிதி-பத்மநிதி இரண்டுபேரும் பூதம் போன்ற பெரிய உடலும் அதிக பலமுமுடையவர்களாம். கைகளில் தாமரை மலர்களுடன் பத்மபீடத்தில் உட்கார்ந்திருப்பவர்களாகும். வெளுப்புவஸ்திரமுடுத்தி, கரண்ட மகுடம் பூண்டு இருப்பவர்களாம். வலது பக்கத்தில் சங்கநிதியும் இடது பக்கத்தில் பத்மநிதியும் இருப்பதாகும்.

குபேரனின் இடது பக்கத்தில் லக்ஷணத்துடன் தேவிரூபத்தை அமைக்கவேண்டும். இவ்விதம் குபேரலக்ஷணம் கூறப்பட்டிருக்கிறது.

இந்திரனை முன்பு கூறியுள்ளபடியே அமைக்கவேண்டும்.

காலாக்கினி ருத்திர லக்ஷணம்.

காலாக்கினி ருத்திர மூர்த்தியின் லக்ஷணத்தைக் கூறு

வஹ்நிவத்கேஶஸம்யுக்த: ஸிம்ஹகாயஸ்தித: பர: ॥ ௱௬௨ ॥

ரக்தவஸ்த்ரயுதோ பாலசந்த்ர: ஸர்வாபரணபூஷித: ।
ரக்தோர்த்வகேஶஸம்யுக்த: ஸிம்ஹாஸநோபவிஷ்டித: ॥

சதுர்புஜஸ்த்ரிணேத்ரஶ்ச நீலோத்பலஸமப்ரப: ।
கரண்டமகுடோபேத: ஸர்வாபரணபூஷித: ॥ ௱௬௪ ॥

அபயவரதோபேத: டங்கஶூலதர: பர: ।
ரக்தவஸ்த்ரஸமாயுக்த: பத்மபீடோபவிஷ்டித: ॥ ௱௬௫ ॥

அத நாகதேவலக்ஷணம் ॥

ஶ்ரீகண்டோ ஹ்யேவமாக்யாத: நாகதேவஸ்ய சோச்யதே ।
த்ரிணேத்ரஶ்ச சதுர்புஜ: ஸௌம்ய: ரக்தாபஸ்ஸுவிதாம்பர: ॥

கிறேன். அந்த மூர்த்தியானது, 4 கைகளும், 3 கண்களுமுடையதாகும். தீச்சுடர்போல ஒளியுடன் விளங்குவதாகும். இளம்பிறை சந்திரனும், சிவப்பு ஆடையும் அணிந்து, ஸகல ஆபரணங்களாலும் அலங்கரிக்கப்பட்டிருப்பதாகும். சிவப்பு நிறமாய் செங்குத்தாக உயர்ந்த மயிர்களுடன் பயங்கரமான உருவமுடையதாய் ஸிம்ம வாஹனத்தில் வீற்றிருப்பதாகும்.

ஸ்ரீகண்ட மூர்த்தியானது, 4 கைகளும், 3 கண்களும், நீலோத்பலம்போன்ற நிறமும், உடையதாகும். கரண்ட மகுடமும், ஸகலவித ஆபரணங்களுமணிந்து அபயம்–வரதம்–டங்கம்–சூலம் இவைகளைக் கையிலேந்தி, சிகப்பு வஸ்திரமுடுத்தி, பத்ம பீடத்தில் உட்கார்ந்திருப்பதாகும்.

நாகதேவ லக்ஷணம்.

ஸ்ரீகண்ட லக்ஷணம் இவ்விதம் கூறப்பட்டது. நாகதேவலக்ஷணத்தைக் கூறுகிறேன். நாகதேவர் 3 கண்களும், 4 கைகளும், ஸௌம்யமான உருவமும், சிவந்த நிறமும்,

ஊஹயவாஶொவெதஃ வாஊஹஸ்தெ தூ நாமயுகூ |
கரண்டமகுடொவெதஃ நாமஃ வஞ்சஹணாந்விதஃ || ௫௩ ||

ஸவாஹரணஸம்யுக்தஃ வத்மபீடொவரி ஸ்திதஃ |

அய பீம-பூமிலக்ஷணம் ||

பீமஸ்து பயங்கரோ ராஜு: ஸவாஹரணபூஷிதஃ ||

ஊஹயம் வரதம் சைவ மூலம் பாமம் ச யாரயநு |
விதவஸ்ரயராம்ருவ உக்ரத்ருஷ்டிஃ ஸதம்ஷ்ட்ரகஃ || ௫௩ ||

ஸஸ்யாம்குாநிஹா பூமிஃ நீலாலகஸமந்விதா |
கரண்டமகுடொவெதா ஸவாஹரணபூஷிதா || ௫௪ ||

பீதாம்பரயா சைவ வத்மஹஸ்தாந்விதா |

வெண்மையான உடையும், உடையவராவார். முன் கைகள் அபயவரதமாகவும், பர ஹஸ்தத்தில் ஸர்ப்பத்தை வைத்திருப்பவருமாவார். கையிலிருக்கும் நாகமானது 5 தலைகளுடையதாகும். கரண்ட மகுடமும், ஸகல ஆபரணங்களும் அணிந்து பத்மபீடத்தில் உட்காந்திருப்பவராவார்.

பீம-பூமி-லக்ஷணம்.

பீம மூர்த்தியானது, பயங்கரமான உருவமும் 4 கைகளுமுடையதாம். கொடூரமான பார்வையும் தித்திப்பற்களுமுடையதாகும். வெளுப்பு ஆடையுடுத்தி வரதம்-அபயம்-சூலம்-பாசம்-இவைகளை ஏந்தி, ஸகல ஆபரணங்களையும் அணிந்திருப்பதாகும்.

பூமிதேவியானவள் பயிரின் முளைபோன்ற நிறமும், அழகிய முகமும், நீலமான முன்னுச்சியும், பீதாம்பர ஆடையுமுடையவளாவாள். ஸகல ஆபரணங்களையும் அணிந்து, கரண்ட மகுடம் தரித்து, இரு கைகளிலும்,

𑌪𑌦𑍍𑌮𑌂 𑌵𑌾𑌬𑍍𑌜𑌦𑍍𑌵𑌯𑌂 𑌵𑌾𑌪𑌿 𑌵𑌹𑌨𑍍𑌤𑍀 𑌹𑌸𑍍𑌤𑌯𑍋𑌰𑍍𑌦𑍍𑌵𑌯𑍋𑌃 ॥
𑌪𑌦𑍍𑌮𑌪𑍀𑌠𑍋𑌪𑌵𑌿𑌷𑍍𑌟𑌾 𑌤𑍁 𑌆𑌸𑍀𑌨𑌾 𑌵𑌾 𑌸𑍍𑌥𑌿𑌤𑌾𑌥𑌵𑌾 ।

𑌅𑌥 𑌶𑌿𑌖𑌣𑍍𑌡𑌿 - 𑌮𑌰𑍁𑌲𑍍𑌲𑌕𑍍𑌷𑌣𑌮𑍍 ॥

𑌶𑌿𑌖𑌣𑍍𑌡𑍀 𑌕𑌞𑍍𑌚𑌨𑌾𑌭𑌸𑍍𑌤𑍁 𑌚𑌤𑍁𑌰𑍍𑌭𑍁𑌜𑌸𑌮𑌨𑍍𑌵𑌿𑌤𑌃 ॥ ௪௨ ॥
𑌖𑌡𑍍𑌗𑌖𑍇𑌟𑌕𑌸𑌂𑌯𑍁𑌕𑍍𑌤𑌃 𑌪𑌦𑍍𑌮𑌪𑍀𑌠𑍋𑌪𑌵𑌿𑌷𑍍𑌟𑌕𑌃 ।
𑌮𑌰𑍁𑌦𑍍𑌗𑌣𑌾 𑌧𑍂𑌮𑍍𑌰𑌵𑌰𑍍𑌣𑌾𑌸𑍍𑌤𑍁 𑌦𑍍𑌵𑌿𑌹𑌸𑍍𑌤𑌾 𑌮𑍁𑌦𑍍𑌗𑌰𑌧𑌰𑌾𑌃 ॥
𑌕𑍇𑌶𑌬𑌨𑍍𑌧𑌸𑌮𑌾𑌯𑍁𑌕𑍍𑌤𑌾𑌃 𑌸𑌰𑍍𑌵𑌾𑌭𑌰𑌣𑌭𑍂𑌷𑌿𑌤𑌾𑌃 ।
𑌰𑌕𑍍𑌤𑌵𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌶𑍍𑌚 𑌵𑍈 𑌨𑌾𑌨𑌾𑌪𑍁𑌷𑍍𑌪𑍈𑌶𑍍𑌚 𑌸𑌂𑌯𑍁𑌤𑌾𑌃 ॥
𑌟𑌙𑍍𑌕𑌶𑍂𑌲𑌸𑌮𑌾𑌯𑍁𑌕𑍍𑌤𑌾𑌃 𑌪𑍀𑌨𑍋𑌰𑍁𑌜𑌘𑌨𑌸𑍍𑌤𑌨𑌾𑌃 ।
𑌪𑌾𑌦𑌪𑍀𑌠𑍋𑌪𑌵𑌿𑌷𑍍𑌟𑌾𑌸𑍍𑌤𑍁 𑌸𑌕𑌲𑌾𑌃 𑌸𑍍𑌯𑍁𑌰𑍍𑌮𑌰𑍁𑌦𑍍𑌗𑌣𑌾𑌃 ॥

இரண்டு தாமரை மலர்களையாவது, இரண்டு நீலோத்பலங்களையாவது வைத்திருப்பவளாவாள். பத்மபீடத்தில், உட்கார்ந்த வடிவமாகவோ, நின்ற வடிவமாகவோ இருப்பவளாவாள்.

சிகண்ட—மருத்—லக்ஷணம்.

சிகண்டர் என்ற மூர்த்தியானது, கஞ்சன (மைனா) பக்ஷியைப்போன்ற நிறமும், 4 கைகளும், கைகளில் கத்தி—கேடயம், இரண்டையும் ஏந்தி பத்ம பீடத்திலிருப்பதாகும். (மற்ற 2 கைகள் வரதாபயமாகக் கொள்ளவேண்டும்.)

மருத்துக்கள் புகை நிறமும், 2 கைகளும், முத்கரம் என்ற ஆயுதமும், சிகப்புப்பட்டாடையும், முடிந்த முடியும், உடையவர்களாவார்கள். ஸகல ஆபரணங்களையும் அணிந்து, பலவித புஷ்பங்களையும் தரித்து, டங்கம் சூலம் இவைகளை ஏந்தி, பாத பீடத்திலிருப்பவர்களாவார்கள். இவர்களுக்குத் துடை—பிருஷ்டபாகம் — ஸ்தநம்—இவைகள் பெரிதாக இருப்பதாகும்.

அத² உக்³ரலக்ஷணம் ||

உக்³ரஸ்து பீ⁴ஷணோ ரௌத்³ர: ரக்தவஸ்த்ரஸமந்வித: |
கரண்ட³மகுடோபேதஸ்ஸர்வாப⁴ரணபூ⁴ஷித: || ௱௪௬ ||

அப⁴யவரதோ³பேத: டங்கஶூலத⁴ர: பர: |
ஸ்தா²நக: பத்³மபீடே² து ஶுக்லவஸ்த்ரயுத: ஶுசி: || ௱௪௭ ||

அத² ஶநைஶ்சரலக்ஷணம் ||

ஶநைஶ்சர: க்ருஷ்ணவர்ணோ த்³விபு⁴ஜோऽஸிதவஸ்த்ரக: |
கரண்ட³மகுடோபேதஸ்ஸர்வாப⁴ரணபூ⁴ஷித: || ௱௪௮ ||

த³ண்ட³ஸ்ஸ்யாத்³த³க்ஷிணே ஹஸ்தே வரதோ³ வாமஹஸ்தகே |
ஸ்தா²நக: பத்³மபீடே² து ஆஸீநோ வா விஶேஷத: ||

கிஞ்சித்குஞ்சிதபாத³ஸ்ஸ்யாதீ³ஷத்³ப⁴க்³நஸ்து ஸம்ஸ்தி²த: |

உக்கிர லக்ஷணம்.

உக்கிர மூர்த்தியானது, சிகப்பு உடையணிந்து, பயங்கரமான தோற்றமுடையதாகும். 4 கைகளும், கைகளில் அபயம்-வரதம்-டங்கம்-சூலம்-இவற்றைத்தரித்து, கரண்ட மகுடம் தரித்து, ஸகல ஆபரணங்களையுமணிந்து, பத்ம பீடத்தில் ஸ்தாநகமாக இருப்பதாகும்.

இந்த மூர்த்தியானது வெளுப்பு நிறமுடையதாய், வெளுப்பு உடை தரித்திருப்பதுமாகும்.

சனைச்சர லக்ஷணம்.

சனைச்சரன் கருப்பு நிறமும், 2 கைகளும், கருப்பு உடையுமுடையவராவார். கரண்ட மகுடம் தரித்து, எல்லா ஆபரணங்களையும் அணிந்திருப்பவராவார். வலது கையில் தண்டமும், இடது கையில் வரதமுமிருப்பதாகும். பத்ம பீடத்தில் நின்ற வடிவமாகவோ, விசேஷித்து உட்கார்ந்த வடிவமாகவோ இருப்பதாகும். சிறிது வளைந்த காலும்,

ஏவம் லக்ஷணமாக்யாதம் பீடஸ்ய லக்ஷணம் ச்ருணு ||

அத பீடலக்ஷணம் ||

சதுர்தசாங்குலம் தாரமுத்ஸேதம் த்வாதசாங்குலம் |
உத்ஸேதத்ரயபாகம் யுக்தம் வேதமாத்ராதிமேகலம் ||

மாத்ரா(வேதா)மாத்ரமுத்ஸேதம் விஸ்தாரம் து
மாத்ராமாத்ரகம் |

ஷண்மாத்ரம் பத்மதாரம் ஸ்யாச்சேஷார்த்தம் கம்பநீவ்ரகம் ||

சிலாபிரிஷ்டகாபிர்வா ஸுதயா வா ப்ரகல்பயேத் |
பரிவாரபீடமேவம் மஹாபீடவிதிம் ச்ருணு || ௱௫௩ ||

அத மஹாபீடலக்ஷணம் ||

ப்ராஸாதஸ்ய து விஸ்தாரம் தத்ஷட்ஸப்தாஷ்டபாகதே |
ஏகம் மஹாபீடம் ஸமாக்யாதம் ஷட்ஷட்பாகாத்மகே || ௱௫௪ ||

சிறிது குட்டையான உடலுமுடையவராவார். இவ்விதம் பரிவார லக்ஷணம் கூறப்பட்டுள்ளது. இனி பீட லக்ஷணத்தைக் கேட்பாயாக.

பீட லக்ஷணம்.

பீடமானது, 14 அங்குலம் அகலமும், 12 அங்குலம் உயரமுமுடையதாக இருக்கவேண்டும். உயரத்தை 3 பாகங்களாகக்கொண்டு, மேகலை ஒன்று, 4 அங்குல உயரமும் 4 அங்குல அகலமுமிருக்கும்படி, 3 மேகலையுடையதாக அமைக்கவேண்டும். அதன் (மத்தியில்) பத்மத்தின் அகலம் 6 அங்குலமாகும். பாக்கி ½ பாகமானது கம்பத்தின் நீவ்ரம் (ஒதுக்கம்) ஆகும். பீடமானது, கருங்கல்–செங்கல்–அல்லது ஸுதை இவைகளால் செய்யப்படவேண்டும். இவ்விதம் பரிவாரங்களின் பீடம் கூறப்பட்டுள்ளது. இனி மஹா பீடவிதியைக் கூறுகிறேன். கேட்பாயாக.

[illegible] |
[illegible] || ௱௫௫ ||

[illegible] |
[illegible] || ௱௫௬ ||

[illegible] |
[illegible] ||

[illegible] |
[illegible] || ௱௫௮ ||

மஹாபீட லக்ஷணம்.

இவ்விடத்தில் கர்பகிருஹத்தின் அகலமானது தண்டம் என்று கூறப்பட்டிருக்கிறது.

மஹாபீடமானது, கர்பகிருஹத்திலிருந்து, 6–8–10–12–14–16 அல்லது 18 தண்ட அளவில் கல்பிக்கப்படவேண்டும்

அல்லது மற்றொரு முறையின்படியும் வைக்கலாம். பிராகாரத்தின் மூன்ருவது, நான்காவது அல்லது ஐந்தாவது சுவற்றின் (உட்பக்கத்தில்) அதாவது 2–3–4வது பிராகாரத்தில் முன்பக்கத்தில் அதன் நீளத்தின் நடுவில் வைப்பதுமாகும்.

இவ்விதம் மஹா பீடஸ்தானம் கூறப்பட்டுள்ளது. இனி அதன் லக்ஷணத்தைக் கூறுகிறேன்.

பீடமானது, கர்பகிருஹ துவாரத்தின் உயரம் எவ்வளவோ அவ்வளவு அகலமிருப்பது உத்தமமாகும். அதில் $\frac{3}{4}$ பங்கு அகலமிருப்பது மத்தியமமாகும். $\frac{1}{2}$ பங்கு அகலமிருப்பது அதமமாகும்.

பீடமானது, கர்பகிருஹ துவாரத்தின் அகலம் எவ்வளவோ அவ்வளவு அகலமிருப்பது அதமமாகும். அதைப்

த்விபாகம் மத்யமம் ப்ரோக்தம் த்ரிபாகம் ச்ரேஷ்டமுச்யதே |
அதவா பீடஹஸ்தம் ஸ்யாததமம் பரிகீர்த்திதம் || ௱௫௬ ||

த்விஹஸ்தம் து மத்யமம் ஸ்யாத் த்ரிஹஸ்தம் ச்ரேஷ்டமுச்யதே |
தத்விஸ்தாரஸமம் துங்கம் ஸப்தாஷ்டநவவிம்சதி: (வேதிகம்) ||

உபானோச்சம் த்விபாகம் ஸ்யாத் ஷடம்(பஞ்சாம்)
சம் ஜகதீ பவேத் |
குமுதோத்ஸேதம் து பூதாம்சம்(வேதாம்சம்) கம்பமேகாம்ச-
முச்யதே || ௱௬௧ ||

வேதாம்(அக்ந்யம்)சம் கர்ணோத்ஸேதம் ஸ்யாதூர்த்வகம்பம்
ஏகாம்சகம் |
மஹாபட்டம் குணாம்சம் து த்விபாகம் வா விசேஷத: ||
வேதாம்சம் பத்மதுங்கம் து த்விபாகம் கண்டமாதயேத் |

போல் 2 பங்கு அகலமிருப்பது மத்தியமமாகும். 3 பங்கு அகலமிருப்பது உத்தமமாகும்.

அல்லது 1 ஹஸ்தம் அகலமிருப்பது அதமமாகும். 2 ஹஸ்தம் அகலமிருப்பது மத்தியமமாகும். 3 ஹஸ்தமிருப்பது உத்தமமாகும்.

பீடமானது அதன் விஸ்தாரம் எவ்வளவோ அவ்வளவு உயரமுடையதாகும்.

அதன் உயரத்தைப் பங்கிட்டு, 3 வேதிகளையும் முறையே 7–8–9 பங்குகளாகக் கொள்ளவேண்டும்.

(பீடத்தின் உயரத்தில்) உபானம் 2 பங்காகும். ஜகதீ 6 (5) பங்காகும். குமுதத்தின் உயரம் 5 (4) அம்சமாகும். கம்பம் 1 பங்காகும். கர்ணம் 4 (3) பங்காகும். ஊர்த்துவ கம்பம் 1 பங்காகும். மஹாபட்டி 3 பங்காகும்; அல்லது விசேஷித்து 2 பங்கு இருப்பதுமாகும். பத்மத்தின் உயரம்

அத²வா கர்ணிகோத்ஸேத⁴ம் பத்³மாம்ஶம் விப⁴ஜேத்ததா² ॥ ௨௯௪ ॥

பஞ்சாம்ஶம் பத்³ம(வேத³)பா⁴க³ம் து மஹாபட்டீ த்³விபா⁴கத: ।
உபாநாம்ஶம் ஏகாம்ஶம் து ஶேஷம் பூர்வவதே³வ ஹி ॥

அத² பீடோ²த³யம் ஹித்வா பூ⁴(பூ)தலாத³த⁴(அ)தோ⁴ம்பு³ஜம் ।
தது³ர்த்⁴வே பத்³மதுங்க³ம் து பீடோ²த்ஸேத⁴(த்ஸேதா⁴ம்)ஶ
ஸமாவ்ருதே ॥ ௨௯௫ ॥

அதி⁴ஷ்டா²நோக்தமார்கே³ண வேஶநிஷ்க்ராந்தமாசரேத் ।
பத்³மதாரே யுகா³ம்ஶம் வா ஶராம்ஶம் கர்ணிகா ததம் ॥

பத்³மதாரம் சதுரஶ்ரம் வா வ்ருத்தம் வாஷ்டாஶ்ரமேவ வா ।

---

4 பங்காகும். கர்ணிகையின் உயரம் 2 பங்காகும். ஆகக் கூடுதல், 2+5+4+1+3+1+3+4+2=24 அம்சமாகும்.

(பீடத்தின் உயரத்தை 24 பாகங்களாகச் செய்து கொண்டு, உபானம் முதலான 9 பிரிவுகளையும், கூறிய பங்குகளால் அமைக்கவேண்டும் என்பது பொருள்.)

அல்லது, கர்ணிகை 3 பாகம், பத்மம் 5 (4) பாகம், மஹாபட்டி 2 பாகம், உபானம் 1 பாகம், மற்றவைகள் கீழே கூறப்பட்டிருப்பதுபோலவும் கொள்வதாகும்.

அல்லது, பீடத்தின் உயரத்திற்குக் கீழே பூமட்டத்திற்குக் கீழே தாமரை மலரின் அடிப்பக்கமாகக்கொண்டு, பூமட்டத்திற்குமேலே பீடத்தின் உயரம் முழுமையும் பத்மத்தின் பாகமாகக் கொள்வதுமாகும். அதிஷ்டானத்திற்குக் கூறியபடி, வேசநிஷ்க்ராந்தம் செய்யவேண்டும். கர்ணிகையின் அகலம் பத்மத்தின் அகலத்தில் 4 அல்லது 5ல் ஒரு பாகமாகும்.

பத்மத்தின் அகலமானது, சதுரஶ்ரமாகவாவது, அஷ்டாஶ்ரமாகவாவது, வட்டவடிவமாகவாவது, ஷடஶ்ர

கும்பாஶ்ரயஸமாயுக்தம் ... ஹம்ஸதார்க்ஷ்யாப்யாம் [illegible] || ௧௬ ||

[கும்பாத்யாஶ்ரயம் யுக்தம் ஹம்ஸதார்க்ஷ்யாதிஶோபிதம் |]

லோஹஜம் ஶைலஜம் வாபி ஐஷ்டகாமயமேவ வா |

ஸுதயா சேஷ்டகாகர்ப்பம் நாநாசித்ரைர்விசித்ரிதம் ||

பூதேவ்யா மகரவ்யாலைஃ வ்ருஷபைஶ்ச விபூஷிதம் |

நாநாவர்ணைர்விசித்ரம் வா பூஷயேத்ஸௌவர்ணராஜதைஃ ||

பீடவ்யாஸே து ஷட்ஸப்தவஸுநந்தாம்ஶகேந வா |

உபபீடாம்ஶமாநேந வா பீடமுபபீடோக்தவச் சரேத் || ௧௭ ||

வடிவமாகவாவது, அமையப்பெற்று, அன்னம்—கருடன் இவைகளால் அலங்கரிக்கப்பட்டுமிருக்கவேண்டும். (பத்மமானது, பீடத்தின் வடிவத்திற்கேற்ப, 4, 6 அல்லது 8 இதழ்களைக்கொண்டதாக இருக்கவேண்டுமென்பது பொருள்.)

பீடமானது, உலோகம்—கருங்கல்—செங்கல்—உட்பகுதியில் செங்கலுடன் கூடிய ஸுதை, இவைகளால் செய்யப்படவேண்டும். பலவித சித்திரங்களாலலங்கரிக்கப்பட்டிருக்கவேண்டும். பூதேவி—மகரம்—வியாளம் (ஸர்ப்பம்) விருஷபம் இவ்வுருவங்களால் அலங்கரிக்கப்பட்டிருக்கவேண்டும். பலவித வர்ணங்கள் தீட்டப்பட்டிருக்கவேண்டும். தங்கம் வெள்ளி இவைகளால் பூஷிக்கப்பட்டிருக்கவேண்டும்.

பீடத்தின் அகலத்தில் 6—7—8—9 அம்சத்தினாலாவது, உபபீடத்திற்குக் கூறப்பட்ட அம்ச அளவினாலாவது பீடத்தைச் செய்யவேண்டும். (இந்தக் கணக்கு பீடத்தின் கீழ்பாகத்திற்குக் கூறியதாகக் கொள்ளவேண்டும்.)

தத௩ுவெ௯ தா உஹாவீ௦ உ௩க்தவ்யாஹொ௩யாமிதழ |
உவவீடொக்தவத்௦ம் கதவ்ய௦ வா ஆிஜொத்ர || ௬௭க ||

சூஜொ௩௦ அ வ௫வ௯ஸை வ்ருயிஷீ தகவா௫விணழ |
வ்ருஜொ௩௦ அ யாஊ்ஜ௩ஸை யத்தஃஹ௩நிருாதகழ || ௬௭௨ ||

ஸ௩ஊ௩வ௦ வஸ்ரீஊ௩ஸை தகீ ஹ௫த௦ ஷ்யாஜருாதகழ |
௩௩ஊ௩வ௦ ஸளஊ்ரீஹாமெ வாய௩தகவாதக௦ தயா ॥

கவிஹ௦ கணிகொயெ௯ தா வெ்யாஊாதகஊ௩ரீதழ |
தாஊஸ௦ அாதரூ௩ஸை ராஜஸ௦ நெரு௯தெ ௩ஸை ||

ஸாகவிக௦ வாயுஹிஹாமெ விஹகத௯ாராஉீஸகெ |

அதற்குமேலே, மஹாபீடத்திற்குக் கூறப்பட்ட அளவுடன் மஹாபீடத்தைச் செய்யவேண்டும். அந்த பீடத்தின் மேல்பாகத்தையும் உபபீடத்திற்குக் கூறப்பட்ட அளவின்படியேயும் செய்யலாம்.

பூதத்துவஸ்வரூபியான ஆமோதரை கிழக்கு திக்கிலுள்ள தளத்திலும், அக்நிதத்துவ ஸ்வரூபியான பிரமோதரை தெற்கு திக்கிலுள்ள தளத்திலும், ஜலதத்துவ ஸ்வரூபியான ஸுமுகரை மேற்கு திக்கிலுள்ள தளத்திலும், வாயுதத்துவ ஸ்வரூபியான துர்முகரை வடக்கு திக்கிலுள்ள தளத்திலும், ஆகாசதத்துவ ஸ்வரூபியான அவிக்நரை கர்ணிகையின்மேலேயும், (கர்ணிகை—தாமரை மலரின் இதழ்களின் நடுவிலுள்ள பாகம். இங்கு கர்ணிகை என்பது பீடத்தின் மேல்தளமாகும்.) அக்கினி மூலையிலுள்ள தளத்தில் தமோகுணத்தையும், நைர்ருதி மூலையிலுள்ள தளத்தில் ராஜஸ குணத்தையும், வாயு மூலையிலுள்ள தளத்தில் ஸத்துவ குணத்தையும், (குணங்கள் என்பதற்கு குணங்களின் அதிதேவதைகள் என்று பொருள் கொள்ளவேண்டும்.) ஈசான மூலையிலுள்ள தளத்தில் விக்ந கர்த்தாவையும்

த்வம் ஹ்யேதந்மஹாகுணாகாரஸாத்மதத்வமுதாஹ்ருதம் || ௪௭௫ ||

ஸ்வர்கம் ஹ்யந்தரிக்ஷம் ஸர்வம் ஹ்யேதத்குணாத்மகம் |
ஆத்மதத்த்வம் து தத்ஸர்வம் மஹாபீடம் த்விஜோத்தம || ௪௭௬ ||

தாமஸாதிநிவ்ருத்த்யர்த்தம் நித்யம் பல்யந்தம் ச பூஜயேத் |
ததாஸாஸாத்மாவஹாராய நித்யோத்ஸவை: ப்ரதக்ஷிணம் ||

[தஸ்மாதாத்மாவஹாராய நித்யம் குர்யாத் ப்ரதக்ஷிணம் |]
ப்ரதமம் ப்ரதக்ஷிணம் க்ஷ்மாதல த்விதீயம் ஹ்யந்தரிக்ஷகம் |
ஸ்வர்க ப்ரதக்ஷிணம் பஸ்சாத் க்ருதம் தத்வவிதாம் ஹிதம் ||

(பூஜிக்கவேண்டும்.) ஆத்தும தத்துவமானது இவ்விதம் மஹாபூத குணங்களால் ஆகியது என்று கூறப்பட்டிருக்கிறது.

ஸ்வர்கம், பூமி, அந்தரிக்ஷம் (ஸ்வர்க்கத்திற்கும் பூமிக்கும் மத்தியிலுள்ள இடம்) இவை யாவும் ஸகல பூதங்களாலும் குணங்களாலும் அமையப்பெற்றதாகும். ஹே அந்தணனே! ஆத்துமா என்று கூறப்படும் எல்லாம் மஹாபீடமேயாகும். (மஹாபீடமானது ஸர்வாத்தும ஸ்வரூபமாகும் என்பது பொருள்) தாமஸாதி குணங்கள் நிவர்த்தியடைவதற்காக, தினந்தோறும் (பீடத்தை) பூஜித்து கடைசியில் பலிகொடுக்கவேண்டும்.

அத்தகைய ஆத்மஸ்வருபத்தை நாம் ஏற்றுக் கொள்ளும் பொருட்டு (பீடத்தை) நித்தியோத்ஸவாதிகளுடன் பிரதக்ஷிணம் செய்யவேண்டும். (ஆகையால் ஆத்துமார்ப்பணம் செய்யும் பொருட்டு தினந்தோறும் பீடத்தைப் பிரதக்ஷிணம் செய்யவேண்டும்.)

முதல் பிரதக்ஷிணத்தால் பூமியை வலம் வந்ததாகும். இரண்டாவது பிரதக்ஷிணத்தால் அந்தரிக்ஷத்தை (ஆகாசத்தை) வலம் வந்ததாகும். மூன்ருவது பிரத

𑌉𑌪𑌪𑍀𑌠𑌾𑌧𑌿𑌷𑍍𑌠𑌾𑌨𑌾𑌦𑍍𑌯𑌂 𑌕𑌲𑍍𑌪𑌯𑍇𑌤𑍍 𑌸𑍍𑌥𑌾𑌪𑌕𑍋𑌤𑍍𑌤𑌮𑌃 |
[illegible] ||

𑌵𑍃𑌷𑌸𑍍𑌥𑌾𑌨𑍇 𑌕𑍁𑌮𑌾𑌰𑌂 𑌤𑍁 𑌕𑍁𑌮𑌾𑌰𑍇 𑌵𑍃𑌷𑌭𑌂 𑌨𑍍𑌯𑌸𑍇𑌤𑍍 |
𑌵𑌾𑌰𑍁𑌣𑍇 𑌤𑍁 [illegible] |
𑌪𑌰𑌿𑌵𑌾𑌰𑌵𑌿𑌧𑌿𑌃 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌃 𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌤𑍇 𑌲𑌿𑌙𑍍𑌗𑌲𑌕𑍍𑌷𑌣𑌮𑍍 || ௪௮ ||

𑌇𑌤𑌿 𑌕𑌾𑌶𑍍𑌯𑌪𑍀𑌯𑍇 𑌶𑌿𑌲𑍍𑌪𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑍇 𑌪𑌰𑌿𑌵𑌾𑌰𑌵𑌿𑌧𑌿𑌰𑍍𑌨𑌾𑌮
𑌅𑌷𑍍𑌟𑌚𑌤𑍍𑌵𑌾𑌰𑌿𑌂𑌶𑌃 𑌪𑌟𑌲𑌃 ॥

க்ஷிணத்தால் ஸ்வர்க்கத்தை வலம்வந்ததாகும். இது அந்த தேசத்தில் வசிப்பவர்களுக்கு நன்மையையுண்டுபண்ணும். உலகத்தின் துன்பத்தை நீக்கவேண்டி, தேவாலய நிர்மாணம் செய்பவன், இவ்விதம் பீடத்தை நிர்மாணப்செய்ய வேண்டும்.

இனி, மேற்கு முகமான தேவாலயத்தில் சிறிது மாறுபாட்டைக் கூறுகிறேன்.

விருஷபத்தை ஸ்தாபிக்க வேண்டிய இடத்தில் ஸுப்ரஹ்மணிய மூர்த்தியையும், ஸுப்ரஹ்மணியரை வைக்கவேண்டியவிடத்தில் விருஷபத்தையும் மாற்றியமைக்கவேண்டும். மற்றவைகள் முன்பு கூறியுள்ள விதிப்படியேயாகும்.

இவ்விதம் பரிவாரவிதி கூறப்பட்டுள்ளது. இனி லிங்க லக்ஷணத்தைக் கூறுகிறேன்.

காசியபீய சில்ப சாஸ்திரத்தில் பரிவாரவிதியெனும்
48வது படலம் முற்றும்.

அதைகோநபஞ்சாஶத்தம: படல: ‖

ஶிவலிங்கலக்ஷணம் ‖

அத வக்ஷ்யே விஶேஷேண ஶிவலிங்கஸ்ய லக்ஷணம் |
ஸம்ஸாரவிலயே ஜாதா: லயம் யாந்த்யஶேஷத: ‖ 1 ‖

யதா ஸ்ருஷ்டிஸ்திதா தஸ்மாத் ஸ்ருஷ்டிகாரீ லிங்கமுச்யதே |
ஸம்ஸாரே நிஷ்கலம் ஶாந்தம் மநோவாசாமகோசரம் ‖ 2 ‖

ஆத்மநஸ் ஸர்வபூதாநாம் மோக்ஷத: ஸர்வதம் விபா (ஹிதக்ரு) |
ஸர்வவ்யாபீ தத்ஸ்தோ ஹ்யம் ஸர்வலோகைகநாயக: ‖

தஸ்மாச்ச ஸ்ருஷ்டிகாலே து ஶாந்திதத்வஸமுத்பவ: |

நாற்பத்தி ஒன்பதாவது படலம்.

சிவலிங்க லக்ஷணம்.

இனி சிவலிங்கத்தின் லக்ஷணத்தை விசேஷித்துக் கூறுகிறேன். ஆக்கமும் அழிவுமாகிய ஸம்ஸாரமானது லயத்தை அடையும்பொழுது, பூதஜாலங்கள் யாவும் ஸ்ருஷ்டி காலத்தில் எவ்வாறு தோன்றினவோ, அவ்வாறே லயத்தை அடைகின்றன. சிவலிங்கமானது அவைகளைப் படைக்கும் தன்மை வாய்ந்ததாகையால் அதற்கு லிங்கம் என்று பெயர்.

நிஷ்கலமாயும், சாந்தமாயும், மனதிற்கும் வாக்குக்கும் அப்பாற்பட்டதும், ஆத்மாவுக்கும் அப்பாற்பட்டதுமான அதுவே, ஸம்ஸார சக்கிரத்தில் உழலும் ஸகல பூதஜாலங்களுக்கும் முக்தியைக் கொடுக்கும் தன்மைவாய்ந்ததாம்.

அதுவே, எல்லாவற்றிலும் வியாபித்து, அவைகளுள் மறைந்து, ஸகல உலகங்களுக்கும் நாயகனாக விளங்குகிறது. அதனிடமிருந்து ஸ்ருஷ்டி காலத்தில் சாந்தி தத்துவமுண்டாயிற்று.

𑌤𑌸𑍍𑌮𑌾𑌚𑍍𑌛𑌾𑌨𑍍𑌤𑍇𑌃 𑌶𑌕𑍍𑌤𑌿𑌸𑍍𑌸𑌂𑌭𑍂𑌤𑌾 𑌤𑌸𑍍𑌯𑌾 𑌨𑌾𑌦𑌸𑍍𑌯 𑌸𑌂𑌭𑌵𑌃 ॥
𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑍍𑌬𑌿𑌨𑍍𑌦𑍁𑌸𑍍𑌸𑌮𑍁𑌦𑍍𑌭𑍂𑌤𑌃 𑌨𑌾𑌦𑌂 𑌸𑌾𑌦𑌾𑌖𑍍𑌯𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 ।
𑌬𑌿𑌨𑍍𑌦𑍁𑌰𑍍𑌮𑌨𑍋𑌨𑍍𑌮𑌨𑍀 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌾 𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑍀𑌶𑍍𑌵𑌰𑌸𑌂𑌭𑌵𑌃 ॥ ௫ ॥

𑌈𑌶𑍍𑌵𑌰𑌾𑌚𑍍𑌚 𑌮𑌹𑍇𑌶𑌸𑍍𑌯 𑌸𑍃𑌷𑍍𑌟𑌿𑌸𑍍𑌤𑌸𑍍𑌮𑌾𑌚𑍍𑌚 𑌵𑍈𑌷𑍍𑌣𑌵𑌮𑍍 ।
𑌤𑌸𑍍𑌮𑌾𑌚𑍍𑌚 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌸𑌂𑌭𑍂𑌤𑌿𑌃 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑌸𑍍𑌤𑍁 𑌵𑌿𑌶𑍇𑌷𑌤𑌃 ॥

𑌤𑍍𑌰𑍀𑌣𑌿 𑌚𑍈𑌵 𑌤𑌥𑌾 𑌤𑍍𑌰𑌿𑌂𑌶𑌤𑍍 𑌤𑍍𑌰𑌿𑌶𑌤𑌂 𑌤𑍍𑌰𑌿𑌸𑌹𑌸𑍍𑌰𑌕𑌮𑍍 ।
𑌦𑍇𑌵𑌤𑌾 𑌋𑌷𑌯𑌶𑍍𑌚𑍈𑌵 𑌦𑌾𑌨𑌵𑌾𑌸𑍁(𑌸𑍁𑌰)𑌯𑍋𑌨𑌯𑌃 ॥

𑌸𑌂𑌹𑌿𑌤𑍋 𑌹𑍍𑌯𑍁𑌦𑌿𑌤𑍋 𑌵𑌿𑌪𑍍𑌰 𑌤𑍇𑌷𑌾𑌦𑍌 𑌤𑍍𑌰𑍀𑌣𑌿 𑌨𑌿𑌷𑍍𑌕𑌲𑌮𑍍 ।
𑌶𑌿𑌵𑌂 𑌤𑌚𑍍𑌚 𑌸𑌕𑌲𑌂 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌂 𑌮𑌿𑌶𑍍𑌰𑌂 𑌨𑌾𑌦𑌂 𑌚 𑌬𑌿𑌨𑍍𑌦𑍁𑌕𑌮𑍍 ॥
𑌨𑌾𑌦𑌂 𑌲𑌿𑌙𑍍𑌗𑌾𑌕𑍃𑌤𑌿 𑌜𑍍𑌞𑍇𑌯𑌂 𑌬𑌿𑌨𑍍𑌦𑍁𑌃 𑌪𑍀𑌠𑌾𑌕𑍃𑌤𑌸𑍍𑌤𑌥𑌾 ।

அந்த சாந்தி தத்துவத்திலிருந்து சக்தி தத்துவம் தோன்றிற்று. அதிலிருந்து நாதம் தோன்றிற்று. நாதத்திலிருந்து பிந்து தோன்றிற்று. அந்த நாதமே ஸத் என்று கூறப்படுகிறது. பிந்துவானது, மநோன்மநீ என்று கூறப்படுகிறது. அதிலிருந்து ஈசுவரன் தோன்றினன். ஈசுவரனிடத்திலிருந்து மஹேசுவரன் தோன்றினன். மஹேசுவரனிடத்திலிருந்து விஷ்ணு தத்துவம் உண்டாயிற்று. (விஷ்ணு தோன்றினர்.) விஷ்ணுவிடமிருந்து பிரம்ஹா உண்டானர். அந்த பிரம்ஹாவிடமிருந்து, 3–30-300-3000, என்று முறையே விசேஷித்து, தேவர்களும் இருடிகளும் தானவர்களும் ரஸத்தின் வழியே யுண்டாகும் பற்பல ஜீவராசிகளும் (அஸுரர்களும்) உண்டானர்கள். ஹே அந்தணனே! உலகத்தின் உத்பத்தியானது இவ்வாறு கூறப்பட்டுள்ளது. இவைகளில் முதலில் கூறப்பட்ட லிங்கம், சாந்தி, சக்தி, என்ற மூன்றும் நிஷ்களமாகும். (உருவற்றதும் விவரித்துக்கூற முடியாததுமாகும்.)

சிவமானது ஸகலம் எனப்படும். நாதம், பிந்து

ஶ்ரீம்ருங் ஶிவஶயம் வ்யாதம் பீடம் ஶக்த்யாத்மகம் ஶ்ருதம் ॥ ௯ ॥

தஸ்மாத் ஶிவாத்மிகா சைவ ஸாஹிஹா ஆநந்தோத்ஸவக் ।

ஜகதாதி விநாஶாய ஸர்வப்ராணிஹிதாய ச ॥ ௰ ॥

தேவாதீநாம் ஹிதார்த்தாய த்யாநபூஜாதிஸித்தயே ।

ஶ்ரீம்ருயோநிப்ரஹேதோ ஸாதாவ்யம் தஸ்வரூபஹள ॥

ஸர்வேஷாமுபகாராய தத் ப்ராஅஹ்தே ஶ்ரீம்ருலக்ஷணம் ।

தச்ஶ்ரீம்ருங் த்ரிவிதம் வ்யாதம் அசும் சைவாஅசும் தயா ॥

அசூாஅசும் ச விவ்யாதம் க்ரமேணைவ விஶேஷதஃ ।

ரத்நஜம் லோஹஜம் வாய ஶ்ரீம்ருங் க்ருத்வா (க்ஷயகாரக)

ஸயோநிகம் ॥ ௰௧ ॥

இரண்டும் மிச்ரம் எனப்படும். நாதமே லிங்கவடிவம் என்றும், பிந்துவே அதன் பீடமென்றும் கூறப்பட்டிருக்கிறது. லிங்கமானது சிவஸ்வரூபமாகும். பீடமானது சக்திஸ்வரூபமாகும். லிங்கமும் பீடமும் சேர்ந்து ஒன்ருகவே இருப்பதால், நெருப்பும் உஷ்ணமும் சேர்ந்து ஒன்ருக இருப்பதுபோல, ஶிவமும் சக்தியும் சேர்ந்து ஒன்ருகவே விளங்குகின்றது.

ஸத்பாவமானது, உலகத்தின் தீமைகளைப் போக்கி ஸகல பிராணிகளுக்கும் நன்மையைக் கொடுப்பதற்காகவும், தேவாதிகளான ஸகலஜீவராசிகளும் நன்மையையடைவதற்காகவும், (அவர்கள்) தியானம் பூஜை முதலியவைகளைச் செய்யவேண்டியதற்காகவும், லிங்கம் யோனி என்ற பாகுபாடுடன் விளங்கலாயிற்று.

(தேவாதிகளான ஸகல ஜீவராசிகளும், தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம், என்ற புருஷார்த்தங்கள்) எல்லாவற்றையும் அடையும்பொருட்டு, லிங்கலக்ஷணத்தைக் கூறுகிறேன்.

அந்த லிங்கமானது, சலம், அசலம், சலாசலம், என்று

ஞிஂமஊவெூதாஂ வாழ ஶொஙிஂ கூரகவா (கூயஶாக)
ஸஞகூணழ |

ஶிரவொ வதூநொவெதஂ ஞகூணொஙாவஜிதஂ ||

ஞிஂமாகாரஉபொஷஂ த கூரகவா ஞிஂமொஈயாயகூழ |

* உஈயெ ஞொகஹாமஂ(மெ) வா வெஊாஂபாஂஶஉயாவி வா ||

வீஂெ ஙிவெஶயெக ஶெஷஂ ஊரஶூஉாநஸஉஙிதழ |

மூன்று வகையாகும். அந்த லிங்கத்தை முறையே விசேஷித்து யோநியுடன் (யொநி — பீடம்) ரத்நத்திலைாவது, (ஸுவர்ணம் முதலிய) லோஹத்திலைாவது அமைக்க வேண்டும். லிங்கமானது எந்த திரவியத்தால் செய்யப் படுகிறதோ, அந்த திரவியமல்லாத வேறு திரவியத்திலைும் யோநியைச் செய்யலாம். ஆனால் அது லக்ஷணத்துடன் இருக்கவேண்டும்.

லிங்கமானது, லக்ஷணம் பொருந்தியதாக இல்லாவிட்டாலும் சிரோவர்தனமுடையதாக இருக்கவேண்டும். (சிரோவர்த்தனம் — லிங்கத்தின் முகமட்டத்திற்குமேலே குடை போன்று உயர்ந்து வட்டமாக இருக்கும் சிரோ பாகம்)

லிங்கத்தின் உருவத்தை முழுமையும் செய்து, லிங்கத்தின் உயரத்தில் ஸரிபாதி அளவாவது, லிங்கத்தின் உயரத்தில் 7-ல் 4 பாகமாவது, அல்லது 7-ல் 5 பாகமாவது, பீடத்திற்குள் பதிந்திருக்கும்படி வைக்கவேண்டும். அது நீங்கிய பாகமானது பீடத்திற்கு மேலே காணப்படுவதாக இருக்கவேண்டும்

* உஈயெஉநஞெகஹாமஂ வா வெஊாஂஶெஉஂஶஉயாவி வா |
உதி வாஊஞாஂ |

உயரத்தில் 3ல் 1 பாகமாவது, 4ல் 1 பாகமாவது, என்பது மற்ருெரு பாடம்.

சலம் சலக்ஷமம் இஷ்டே ச ந்யாஸோத்தாரயோ: க்ஷமம் ||

யல்லிங்கம் அசலம் ப்ரோக்தம் தேவாலயஸ்திரம் அசலம் |
ஸ்தாபிதம் சைவ யத் பீடே தேவாலயஸ்தம் சலாசலம் ||

ஸ்வயம்ஜம் ஸூத்ரஸம்யுக்தம் பாணலிங்கம் து தத்விது: |
தேஷ்வாதாவசலலிங்கஸ்ய லக்ஷணம் வக்ஷ்யதேऽதுநா || ௧௮ ||

ஸன்மாஸதிதிநக்ஷத்ரலக்னவாரே சிலாக்ரஹ: |
ஆசார்ய: சில்பிஸம்யுக்த: சிலாக்ரஹணமாசரேத் || ௧௯ ||

இஷ்டமான எந்த இடத்திற்கும் எடுத்துச் செல்லக் கூடியதாகவும் இஷ்டமான இடத்தில் வைக்கவும் எடுக்கவும் தகுதிவாய்ந்ததுமான லிங்கமானது, சல லிங்கம் எனப் படும்.

அதற்கு உரிய தேவாலயத்தில் காணப்படுவதும், இருக்குமிடத்திலிருந்து அசைக்கமுடியாதபடி ஸ்திரமாக பிரதிஷ்டை செய்யப்பட்டதுமான லிங்கமானது, அசல லிங்கம் எனப்படும்.

உரிய இடத்தில் ஸ்திரமாக இருப்பதுபோல் காணப் படுவதும், பீடத்தில் வைக்கவும், அதனின்றும் தனித்து எடுக்கவும் கூடியதுமான லிங்கமானது, சலாசல லிங்கம் எனப்படும். (17)

தானகவே லிங்காகாரத்தை அடைந்து ஸூத்திரத் துடன் கூடியதாய் காணப்படும் லிங்கத்தை, பாணலிங்கம் என்று கூறுகிறார்கள்.

இத்தகைய லிங்கங்களில் அசலலிங்க லக்ஷணத்தை முதலில் கூறுகிறேன். (18)

நல்ல மாதத்தில் நல்ல திதியில், நல்ல நக்ஷத்திரத்தில், நல்ல லக்கினத்தில், நல்ல வாரத்தில், சிலாஸங்கிரஹணம் செய்யவேண்டும். ஆசார்யனானவன் சில்பியுடன் கூடச்

ஶிவ்யாஞரிக்ஷஹளஜாநி நிமித்தாநந்யவகூஷயெக |
வாயஸொ உக்ஷிணம் வாஜாஉாமதஸ்து தமெயெவ அ || உ௦ ||

ஶெ்யநொ வெ உக்ஷிணாஉாஜஃ மாயெ்ரா ஜாம்ஸெந ஸம்யுதஃ |
கந்யாமொஉபஸ்ஜநம் வெஅவ மவாஜாமஜநம் தயா || உக ||

உயிஸம்வஙணஜீகூம்ஹஸ்து கூீரகூம்ஹஸ்தமெயெவ அ |
வஸ்ஷாணி வஸ்ஷஸ்ரகு அாவி ஸதவத்யஸ்தயா ஷ்ரியஃ ||

ஶுஹும் ஜாம்ஸஸ்தயாஹாரஃ ஶிவஹக்தவராயணஃ |
ஜ்வாலாநமுஸ்து தீவஸ்து ஐமுவஙணெஜா வடஸ்தயா || உங ||

ஸாமுங்காரொ மஜநெ்வெவ வெஶ்யா அாதந்ஞஸஙடிநீ |
ஶஹாநெ்யதாநி ஹளஜாநி ஶுஶஹம் விவரீதகழ || உச ||

சென்று, சிலாஸங்கிரஹணம் செய்யவேண்டும். அவன், சிலாஸங்கிரஹணத்திற்குப் புறப்படும் பொழுதும், மார்கத்திலும், சிலாஸங்கிரஹணம் செய்யும்பொழுதும், தெய்வச்செயலாக ஏற்படும் நிமித்தங்களையும், ஆகாச வெளியில் காணப்படும் நிமித்தங்களையும், பூமியில் காணப்படும் நிமித்தங்களையும் கவனித்துப்பார்க்கவேண்டும்.

காக்கையானது இடது பக்கத்திலிருந்து வலமாக வருவது, பருந்து வலது பக்கத்திலிருந்து இடது பக்கம் வருவது, மாம்ஸத்துடன்கூடிய கழுகு, கந்நிகை, பசு இவைகளைக் காண்பது, பசுக்கள் எதிரில் வருவது, தயிர் நிறைந்த குடம், பால் நிறைந்த குடம், மலர்ந்த மலர்கள், புஷ்பமாலை, குழந்தைகளுடன் கூடிய ஸ்திரீகள், சோறு, மாம்ஸம், உணவுப்பொருள், சிவபக்தி நிறைந்தவன், ஜ்வாலையுடன் கூடிய நெருப்பு, ஜலம் நிறைந்த குடம், அலங்காரம் செய்யப்பட்ட யானை, மிகவும் அழகுடன்கூடிய வேஶ்யை (தாஸீ)

உல்காபாதோ திஶாம் தாஹ: மஹாவாதப்ரவர்தநம் |
அஶுபாந்யந்தரிக்ஷாணி ஸஞ்ஜாதா ப்ரோச்யந்தே || ௨௫ ||

முக்தகேஶா நரா நார்ய: க்ஷீணகேஶாஸ்ததைவ ச |
தைலாப்யக்தாஸ்து நக்நாஸ்து காஷாயவஸ்த்ராந்விதா: || ௨௬ ||

ஶூந்யம் சைவ ததா பாண்டம் தைலபாத்ரம் ததைவ ச |
சிந்நநாஸிககர்ணாஸ்து ஹீநாங்காஸ்த்வதிகாங்ககா: || ௨௭ ||

வந்த்யாஹீநாபத்யா நார்ய: விதவா ச ததைவ ச |
பஹ்வாஹாரக்ருதாஸ்து ஸஞ்ஜாதாநி வதாநி வர்ஜயேச் சுபே ||

இவைகளைக் காண்பதும், இவைகள் எதிரில் வருவதும் பூமியில் நிகழும் சுப சகுநங்களாகும்.

இவைகளுக்கு மாருகக் காணப்படுகின்றவைகள் அசுப சகுநங்களாகும். (24)

கொள்ளிக்கட்டை விழுவது, திக்குகள் எரிவது, பெருங் காற்றடிப்பது, இவைகள் அந்தரிக்ஷத்தில் உண்டாகும் அசுபங்களாகும். (அந்தரிக்ஷம் — ஆகாசம்) இனி பூமியில் காணப்படும் அசுப சகுனங்களைக் கூறுகிறேன்.

அவிழ்ந்த கூந்தலையுடைய ஸ்திரீகள் ,ஆண்கள், விரிந்த கூந்தலையுடைய ஸ்திரீகள் புருஷர்கள், எண்ணை தேய்த்துக் கொண்ட ஸ்திரீ புருஷர்கள், துணி அணிந்துகொள்ளாமல் நக்நமாக இருப்பவர்கள், காஷாயவஸ்திரம் உடுத்தியவர்கள், ஒன்றுமில்லாமல் சூநியமாக இருக்கும் மண்பாண்டம், எண்ணையுடன் கூடிய பாத்திரம், மூக்கு, காது முதலிய அங்கங்கள் அறுபட்டவர்கள், அங்கம் குறைந்தவர்கள், அதிக அங்கமுடையவர்கள், பிள்ளை பெருத ஸ்திரீகள், கணவனை இழந்த விதவைகள், அளவு கடந்து அதிகமாக ஆஹாரம் செய்பவன், இவைகள் பூமியில் காணப்படும் அசுப சகுநங்களாகும். இத்தகைய அசுப சகுநங்களைச் சுபகாரியங்களில் விலக்கிவிடவேண்டும். (28)

ஶுபம் ஸங்கல்ப ஶகுநம் த்ருஷ்ட்வா ஶுபம் ப்ரவிஶேதக |
அஶுபே த்வஷ்டநாஸார்யா ஶிலேகாமயநம் ஶ்ருதம் || ௨௯ ||

ஸமித்வாஜ்யாந்நைஶ் ஶதமந்த்ரா(ஞ்சா)க்ஷரம் ஹுத்வா-
லௌஷணம் |
த்வாஶா ஶிவம் நமஸ்க்ருத்யாசார்ய ஶில்பிநா ஶிலா ||

பர்வதே ஸாகரே தீர்த்தே க்ஷேத்ரே சைவ வநே
வாஸ: |
க்ஷீரவ்ருக்ஷஸமீபே ச தேவஹர்ம்யஸமீபகே || ௩௧ ||

நதீ தடாகதீரே வா ஶிலாம் ஸங்க்ராஹயேத் ஶிலாம் |
அந்யத்ர து ந க்ருஹ்ணீயாத் க்ருஹீதே வ்யாதிநாஶநம் |

சுபசகுனங்கள் காணப்பட்டால் புறப்பட்டுச்செல்ல வேண்டும். அசுபசகுனங்கள் காணப்பட்டால் பிரயாணத்தை நிறுத்திவிடவேண்டும்.

அசுபசகுனங்கள் காணப்பட்டால், அக்கினியை வளர்த்து, அதில் ஸமித்து, அன்னம், ஆஜ்யம் (நெய்) இவைகளால், சிவ (பஞ்சாக்ஷர) மந்திரத்தினால் 100 தடவை ஹோமம் செய்து பயத்தம்பருப்பிட்ட பொங்கலை நிவேதனம் செய்து, நாகபூஷணனை பரமேசுவரனை வணங்கிவிட்டு, பிறகு, ஆசார்யனானவன் சில்பியுடன் சிலாகிரஹணத்திற்கு புறப்பட்டுச் செல்லவேண்டும். (30)

சில்பியானவன், மலை, ஸமுத்திரம், புண்யதீர்த்தம், புண்யக்ஷேத்திரம், காடு இவ்விடங்களில், பாலுள்ள மரத்தின் பக்கத்திலும் தேவாலயத்தின் பக்கத்திலும் நதிக்கரையிலும் குளக்கரையிலும் இருக்கும் சிலையை எடுக்க வேண்டும். மற்றவிடங்களில் சிலாஸங்கிரஹணம் செய்யக்கூடாது. அப்படிச் செய்தால், அதனால் அழிவு உண்டாகும். (32)

ஷ்வேதா ரக்தா ச பீதா ச க்ருஷ்ணா சைவ சதுர்விதா ।
கோக்ஷீரசங்க குந்தேந்து முக்தா ஸ்படிக மல்லிகா ॥ ௩௩ ॥
ஸந்நிகாசாஸ்து ஸப்தைதா ஷ்வேதா ஸப்தவிதா ஸ்ம்ருதா ।
ஜபாகிம்ஸுகபுஷ்பாபா இந்த்ரகோபகஸந்நிபா ॥ ௩௪ ॥
ஜாதிலிங்கஸ்துஹாகாரா ஸஸரக்தஸந்நிபா ।
தாடிமீபுஷ்பஸங்காஸா பந்துஜீவகஸந்நிபா ॥ ௩௫ ॥
ரக்தா ஸப்தவிதா ப்ரோக்தா ததைவ பீதவர்ணகே ।
*[ஸுவர்ணகேஸராகாரா சம்பகப்ரஸவோபமா ॥ ௩௬ ॥
ஹரித்ராஸ்து ஸமப்ரக்யா ஹரிதாலஸமா ததா ।
கோ(கு)ரண்டபுஷ்பஸங்காஸா ஜம்பீரபலஸந்நிபா ॥
ஹரிதாலஸமாபாஸா] பீதா ஸப்தயா ।
ஸ்நிக்தாஞ்ஜனாபாஸா நீலோத்பலஸந்நிபா ॥ ௩௮ ॥

சிலையானது, வெளுப்பு, சிவப்பு, மஞ்சள், கருப்பு. என்று நான்கு வகையாகும். வெளுப்புநிறச் சிலையானது, பசுவின் பால் 1, சங்கு 2, முல்லைப்பூ 3, சந்திரன் 4, முத்து 5, ஸ்படிகம் 6, மல்லிகைப்பூ 7, இவைகளைப் போன்ற 7 வித நிறமுடையதாகும்.

சிவப்புச் சிலையானது சம்பரத்தம்பூ 1, புரசம்பூ 2, பட்டுப்பூச்சி 3, ஜாதிலிங்கம் 4, முயல் ரத்தம் 5, மாதுளம்பூ 6, பந்தூக புஷ்பம் (சிவப்புப் பூவுடன் கூடிய பெருமருந்துப்பூ) 7, இவைகளைப்போல 7 விதமாகும்.

இவ்விதமே மஞ்சள் வர்ணச்சிலையானது, ஸுவர்ணம் 1, சரக்கொன்னைப்பூ 2, சம்பகப்பூ 3, மஞ்சள் 4, மஞ்சள்நிறக் குறிஞ்சிப்பூ 5, எலுமிச்சம்பழம் 6, அரிதாரம் 7 இவைகளைப்போல 7 விதமாகும்.

* ஸூத்ரவம் அகம் ஸாதர காஸ் பெருஷ்பம் ஸுதிஸமிகம் வ்யாகரணாநுஸாரேண யோஜிதம் பாட்யம் ।

முதலில் கூறியுள்ள 5ம் பல பிரதிகளிலிருந்து எடுக்கப் பட்டது. கடைசியிலிருக்கும் 2ம் இடத்திற்குப் பொருத்த மாகச் சேர்க்கப்பட்டது.

ஶ்யாமஶிலாஞ்ஜநாபா மஹீபத்ரஸமா ததா |
ராஜாவர்த்தநிபாகாரா க்ருஷ்ணமுத்கஸமப்ரபா || ௩௯ ||

மாஷமுத்கஸமாகாரா க்ருஷ்ணா தஶ(நவ)விதா ஶிலா |
ஶ்வேதரக்தபீதக்ருஷ்ணா: விப்ராதீநாம் க்ரமாத் ஸ்ம்ருதா: || ௪௦ ||

தர்மார்த்தகாமமோக்ஷாம்ஸ்து ததந்தி ஸததமேவ ஹி |
ஸ்வவர்ணேஷு வரம் ஶ்ரேஷ்டம் ஸ்வவர்ணேஷு வரம் விநா || ௪௧ ||

ப்ராதிலோம்யாநுலோம்யாப்யாம் ஹீநயோநிம் ந ஸம்க்ரஹேத் |
ஆசார்யஶ்ஶில்பிநஶ்சைவ ஶ்வேதவஸ்த்ரோத்தரீயகௌ || ௪௨ ||

கருப்புச் சிலையானது, மஹிஷாக்ஷம் (பூனைக்கண் குங்குலியம்) 1, அஞ்சநக்கல் 2, நீலோத்பலம் 3, கருங்குவளை 4, மயிலின் கழுத்து 5, மஹீபத்ரம் 6, ராஜாவர்த்தம் (சிறிது கருமையான தேன் நிறமான ஒருவிதக் கல்) 7, கருப்புப்பயறு 8, குறும்பயறு 9. இவைகளைப் போல 10 (9) விதமாகும்.

வெளுப்பு, சிவப்பு, மஞ்சள், கருப்பு, இந்நிறங்கள் முறையே பிராமணாதி ஜாதிகளுக்கு உரியவைகளாகக் கூறப்பட்டிருக்கின்றன அவைகள் (ஒவ்வொன்றும்) தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம் இவைகளை எப்பொழுதும் கொடுப்பவைகளாம்.

அந்தந்த ஜாதிகளுக்குரிய சிலைகள், அந்தந்த ஜாதிக்கு ஶ்ரேஷ்டமாகும். ஹீநஜாதிச் சிலைகள் நிஷித்தமன்று. ஆனால் ஹீநஜாதியினருக்கு உத்தம ஜாதிச் சிலைகள் கூடாதவைகளாகும்.

இந்தப் பாகுபாட்டை, அநுலோமமாகவும் பிரதிலோமமாகவும் கொள்ளவேண்டும். ஆயினும் ஹீநஜாதிச் சிலையை ஶ்ரேஷ்டமாகக் கொள்ளக்கூடாது. (அநுலோமம் - கிரமமுறை. பிரதிலோமம் - எதிர்முறை)

ஆசார்யன் சில்பீ இவ்விருவரும், வெளுப்பு ஆடை

ஶுக்லஸ்ரக்கந்தலிப்தாங்க: பஞ்சாங்கபூஷணான்வித: |
குடாராதீநி ஸம்க்ருஹ்ய ஶிலாம் கத்வா ஸமாஹித: ||

யஸ்மிந்தேஶே ஶிலா ஸேதே தாம் க்ருத்வா து ப்ரதக்ஷிணம் |
தோஷவர்ஜ்யாம் ஶிலாம் த்ருஷ்ட்வா பரீக்ஷ்ய விஶேஷத: ||

வர்ஷாதபாக்நிமக்நாம்(தக்தாம்) ச ஸங்க்லிந்நாம் க்ஷாரவாரிணா |
துர்தேஶஸ்தாம் தடஸ்தாம் ச கர்மாந்தரே து யோஜிதாம் ||

ஶர்கராட்யாம் ஸபங்காம் ச ஜர்ஜராம் ரூக்ஷஸம்யுதாம் |
ரேகாபிந்துகளங்காதிஸம்யுக்தாம் பரிவர்ஜயேத் || ௪௬ ||

ஸுசித்ரவர்ணா தீர்காகாரா ரவிரஶ்மிஸமாயுதா |

அணிந்து, வெண்சந்தனம் பூசி, வெளுப்பு மாலையணிந்து, பஞ்சாங்க பூஷணங்கள் பூண்டு, கோடரி முதலியவைகளுடன், சிலை இருக்குமிடம் சென்று, மன அமைதியுடன் அந்தச் சிலையைப் பிரதக்ஷிணம் செய்து, தோஷமில்லாத சிலையைப் பார்த்து, விசேஷித்து அச்சிலையின் ஆகாரத்தை நிச்சயித்துக்கொள்ளவேண்டும். (44)

எப்பொழுதும் மழையில் நனைந்துகொண்டிருப்பது, வெய்யிலில் காய்ந்துகொண்டிருப்பது, தீயின் நாற்றமுள்ளது, (அல்லது தீயால் பொசுங்கியது) உப்பு ஜலம் படிந்தது, கெட்ட இடத்திலிருப்பது, தடத்தில் (ஜலக் கரையில்) இருப்பது, வேறு காரியத்திற்கு உபயோகிக்கப் பட்டது, மணல் கலந்திருப்பது, சேறு படிந்திருப்பது, சிதைவுற்றது (அழுத்தம் விசிறிப்போனது), பார்க்க பயங்கரமானது, கோடுகள் புள்ளிகள் களங்கங்கள் இவைகளுடன் கூடியது, இத்தகைய சிலைகளை நீக்கிவிட வேண்டும். (46)

வஷ-ிவாதவஷாகாரா சைவா வெ த்ரிவிதா ஸ்ம்ருதா || சஎ ||

ஜம்பூபலஸமாகாரா த்ராக்ஷாபலஸமப்ரபாயவா |
அந்யதா(யா) வ்ருத்தஸங்காசா த்ரிவிதா பிந்துஸஞ்ஜிதா ||

க்ருஷ்ணலோஹநிபாகாரா க்ருஷ்ணஹ்ரஸ்வ ஸந்நிபா |
பிவிவிம்பஸமாகாரா ஸகளங்கா அதோவிதியா
(த்ரியா உதா) || சகூ ||

வஜ்ரிவத்ரஸங்காசா தவிவாலஸ்ஸ்ம் ஸந்நிபா ததா |
வெணவாங்குரஸங்காசா லூதாபாதவதாயதா || ரு0 ||

அந்யா ப்ருஸா விதா சைவா ஸவர்ண ஸமவர்ஜிதா |

கயிறு விழுந்தது (கல்லின் நடுவில் கயிறு போன்ற ரேகை யுள்ளது) அல்லது கயிறு போன்ற தோற்ற முடையது, ஸூரிய கிரணம் பாய்ந்தது, மழைக்கால் போன்ற உருவமுடையது என ரேகை மூன்று விதமாகும்.

நாவப்பழம் போன்ற உருவமுடையது, திராக்ஷைப் பழம் (அல்லது காய்) போன்ற உருவமுடையது, வேறு எந்த விதத்திலாவது வட்டவடிவமாக இருப்பது, என பிந்துவானது மூன்றுவிதமாகும்.

இரும்புபோன்ற நிறமுடையது, கருங்குளவிபோன்ற நிறமுடையது, மயில் தோகை போன்ற நிறமுடையது, என களங்கம் மூன்றுவிதமாகும். (இத்தகைய தோஷ முள்ள கற்கள் கூடாதவைகளாம்) (49)

பேர்ச்சையிலைபோன்ற கோடுடையது, அருகங்கட்டை போன்ற கோடுடையது, மூங்கில் முளைபோன்ற கோடுடை யது, எட்டுக்கால் பூச்சியின் கால்களைப்போல நீண்ட கோடுகளுடையது, இவைகளும், வெள்ளை நிறமல்லாத மற்ற நிறமுள்ள கல்லில் வெள்ளை ரேகையும், ஸகலவித ஸம்பத்துக்களின் நிறைவைக் கொடுக்கும். [எனவே

க்ருஷ்ணக்ருஷ்ணா விநாசாய ச்வேதக்ருஷ்ணா ததைவ ஹி || ருக ||

தஸ்மாத்ஸர்வப்ரயத்நேந வர்ஜ்ய ரக்தஸ்ய தாஸா: |
க்ருஷ்ணா ச ஹரிதா க்ராஹ்யா ஸிதவர்ணா விசேஷத: ||

கபோத வர்ணஸம்யுக்தா ஸ்வர்ண வர்ணஸமா சுபா |
அதிக்ருஷ்ணா சுபா ஹானி தநதாந்ய நாசநா ||

ஸகளங்கா ரோகதா ராஜராஷ்ட்ர விநாசநம் (நா) |
ஸபிந்துகா புத்ரநாசாநி தாரித்ர்ய ஸ்ரீவிநாசநா || ருச ||

முதலில் கூறப்பட்ட 4 வித கோடுகளும் வெள்ளைக் கல்லுக்குக் கூறப்பட்டவைகளாம்.]

கருப்புக் கல்லில் கருப்புக்கோடும், வெள்ளைக் கல்லில் கருப்புக்கோடும் அழிவை யுண்டுபண்ணும். ஆகையால், முழுமுயற்சியுடன் கீழே கூறப்பட்ட குற்றங்களில்லாத கற்களையே கிரகிக்கவேண்டும்.

கருப்பு நிறமான கல்லும், பச்சை நிறமான கல்லும், (அல்லது கருப்பும் பச்சையும் கலந்த நிறமான கல்) கிரஹிக்கத் தக்கதாகும். வெள்ளை நிறமான கல், விசேஷித்து கிரஹிக்கத் தக்கதாகும். பேர்ச்சையிலையின் நிறமுடைய கல்லும், அருகங்கட்டையின் நிறமுடைய கல்லும் சுப பலனைக் கொடுக்கும்.

மிகவும் கருப்பான நிறமுடைய கல்லானது, அசுப பலனைக் கொடுக்குமென்று கூறப்பட்டிருக்கிறது. பசுக்கள், தானியம், தநம் இவைகளையும் அழித்துவிடும். (53)

களங்கதோஷமுள்ள கல்லானது, ரோகத்தை யுண்டு பண்ணும்; அரசன், ராஜ்யம் இவைகளையும் அழித்துவிடும்.

பிந்து (புள்ளி) தோஷமுள்ள கல்லானது, புத்திர நாசத்தையும் தாரித்திரியத்தையும் கொடுக்கும்; இருக்கும் செல்வத்தையும் அழித்துவிடும்.

ஏவம் பரீக்ஷ்ய யத்நேந க்ருஹ்ணீயால்லக்ஷணாந்விதாம் |
பாலா ச யௌவதீ வ்ருத்தா பும்ஸ்த்ரீநபும்ஸகம் ததா ||

ஸ்வரேகா(ரா)க்ருதிபேதேந ப்ரவக்ஷ்யாமி ஶ்ருணுஷ்வ |
கமநே ஹ்ரஸ்வநிர்ஹ்ரஸ்வா ஶிலா பாலா இதி ஸ்ம்ருதா ||

கண்டாத்வநிஸமா தீர்கா யௌவதீ ஸா ப்ரகீர்திதா |
வ்ருத்தத்வநிஸம்யுக்தா யா ஸா வ்ருத்தா ச கீர்திதா || ௫௭ ||

கண்டாத்வநிமஹாநாதா தீர்கா ஸா பும்ஶிலோதிதா |
தாலபத்ரஸ்வநாகாரா தீர்கா யா ஸ்த்ரீஶிலா து ஸா ||

இவ்விதமாகக் கற்களின் குணதோஷங்களை நன்கு ஆராய்ந்து பார்த்து, தோஷமுள்ள சிலைகளை நீக்கி, குணமும் லக்ஷணமுமுடைய சிலையையே கிரஹித்துக்கொள்ள வேண்டும்.

சிலையானது, ஒலி, உருவம் இவைகளின் பேதங்களால் பாலை, யுவதி, விருத்தை என்றும், புருஷ சிலை, ஸ்திரீ சிலை, நபும்ஸக சிலை என்றும், பாகுபாடு செய்யப்பட்டிருக்கும் முறையைக் கூறுகிறேன். கேட்பாயாக!

செல்லும்பொழுது, சத்தமும் குட்டையான உருவமும் உடைய சிலையானது, பால சிலையாகும் என்று கூறப்பட்டிருக்கிறது.

மணியின் ஓசையைப்போன்ற ஓசையும் நீண்ட வடிவமுமுடையது ஸ்திரீ சிலை என்று கூறப்பட்டிருக்கிறது.

எரசலான சத்தமுடையது விருத்தசிலை என்று கூறப்பட்டிருக்கிறது. (57)

மணியோசையைப்போல் அதிக சத்தமும், நீண்ட வடிவமுமுடையது, புருஷ சிலையாகும் என்று கூறப்பட்டுள்ளது.

பனையைப்போன்ற ஓசையும் நீண்ட வடிவமுமுடையது, ஸ்திரீ சிலையாகும் என்று கூறப்பட்டுள்ளது.

அஸ்நிக்³தா⁴ கர்கஶா ரூக்ஷா ஶப்³த³ஹீநா நபும்ஸகா |
ஶிலைவம் ஸமாக்²யாதா ரூபத்வாத் பே⁴த³ உச்யதே ||

சதுரஶ்ரா ச வஸ்வஶ்ரா ஸ்த்ரீஶிலேதி ப்ரகீர்திதா |
ஆயதாஶ்ரா ச வ்ருத்தா ச த³ஶத்³வாத³ஶகோணகா || ௬௧ ||

தீ³ர்கா⁴ஶ்ரா வா ஸமாக்²யாதா ஸாவ்ருத்தா வா நபும்ஸகா |
த³ஶாஶ்ரம் த்³வாத³ஶாஶ்ரம் ச பா³லம் வ்ருத்³த⁴ம் ச வர்ஜயேத் ||

லிங்க³ம் கார்யம் து பும்ஶிலாபி⁴: ஸ்த்ரீஶிலாபி⁴ஸ்து பிண்டி³கா |
நபும்ஸகஶிலாபி⁴ஸ்து பாதா³தா⁴ரம் ஸமாசரேத் || ௬௨ ||

பளபளப்பில்லாமல் உறுதியில்லாமல் கரடுமுரடாய் ஒலியில்லாமலிருக்கும் சிலையானது நபும்ஸக சிலை என்று கூறப்பட்டுள்ளது.

இவ்விதம் ஒலியினால் பேதம் கூறப்பட்டுள்ளது. இனி உருவத்தினால் பேதத்தைக் கூறுகிறேன். (59)

சச்சதுரமாகவும் எட்டுக் கோணமாகவும் இருக்கும் சிலையானது ஸ்திரீ சிலையாகும் என்று கூறப்பட்டிருக்கிறது.

நீண்டசதுரமாகவும், வட்டவடிவமாகவும், பத்துக் கோணமாகவும், பன்னிரண்டு கோணமாகவும் இருப்பது, புருஷசிலை என்று கூறப்பட்டிருக்கிறது.

நன்கு வட்டவடிவமாக இருப்பது, நபும்ஸக சிலையாகும்.

10 கோணமாக இருக்கும் சிலை, 12 கோணமாக இருக்கும் சிலை, பாலசிலை, விருத்தசிலை, இவைகளை விலக்கிவிட வேண்டும். (61)

புருஷ சிலையினால் லிங்கத்தைச் செய்யவேண்டும். ஸ்திரீ சிலையினாலே பிண்டிகையைச் செய்யவேண்டும்.

𑌕𑍃𑌤𑌂 𑌚 𑌵𑌿𑌪𑌰𑍀𑌤𑌂 𑌯𑌤𑍍 𑌸𑌰𑍍𑌵𑌦𑌾 𑌕𑌰𑍍𑌤𑍃𑌨𑌾𑌶𑌨𑌮𑍍 ।
𑌪𑍍𑌰𑌾𑌗𑌗𑍍𑌰𑌂 𑌵𑍋𑌦𑌗𑌗𑍍𑌰𑌂 𑌵𑌾 𑌶𑌿𑌲𑌾𑌂 𑌸𑌂𑌗𑍃𑌹𑍍𑌯 𑌦𑍇𑌶𑌿𑌕𑌃 ॥ ௬௩ ॥

𑌪𑍍𑌰𑌾𑌗𑌗𑍍𑌰𑍇 𑌪𑌶𑍍𑌚𑌿𑌮𑌂 𑌮𑍂𑌲𑌮𑍁𑌦𑌗𑌗𑍍𑌰𑍇 𑌤𑍁 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑍇(𑌣𑌂) ।
𑌪𑍍𑌰𑌾𑌗𑍁𑌦𑌕𑍍𑌸𑌂𑌸𑍍𑌥𑌮𑌗𑍍𑌰𑌂 𑌯𑌤𑍍 𑌶𑌿𑌲𑌾𑌗𑍍𑌰𑌂 𑌤𑌤𑍍𑌪𑍍𑌰𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌤𑌮𑍍 ॥

𑌅𑌧𑍋𑌭𑌾𑌗𑌂 𑌮𑍁𑌖𑌂 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌂 𑌪𑍃𑌷𑍍𑌠𑌮𑍂𑌰𑍍𑌧𑍍𑌵𑌗𑌤𑌂 𑌭𑌵𑍇𑌤𑍍 ।
𑌏𑌵𑌂 𑌪𑌰𑍀𑌕𑍍𑌷𑍍𑌯 𑌸𑌂𑌗𑍃𑌹𑍍𑌯 𑌗𑌵𑍍𑌯𑍈𑌃 𑌕𑍍𑌷𑌾𑌲𑍍𑌯 𑌹𑍃𑌦𑌾 𑌪𑌯𑌃 ॥ ௬௫ ॥

𑌸𑌦𑍍𑌯(𑌦𑍍𑌯𑍋)𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑍇𑌣 𑌸𑌂𑌸𑍍𑌥𑌾𑌪𑍍𑌯 𑌗𑌨𑍍𑌧𑌪𑍁𑌷𑍍𑌪𑌾𑌦𑌿𑌭𑌿𑌰𑍍𑌯𑌜𑍇𑌤𑍍 ।

(பிண்டிகை — பீடம்.) நபும்ஸக சிலையினாலே பாதாதாரத்தைச் செய்யவேண்டும். (பாதாதாரம் — லிங்கத்தின் அடித்தலத்தின் ஆதாரம்.) இப்படிக்குச் செய்யாமல் இதற்கு விபரீதமாகச் செய்தால், அது எப்பொழுதும் கர்த்தாவுக்கு (செய்தவனுக்கு) அழிவையுண்டுபண்ணும்.

தேசிகனானவன், கிழக்கு நுனியாகவோ வடக்கு நுனியாகவோ இருக்கும் சிலையை கிரஹிக்கவேண்டும். (63)

கிழக்கு நுனியான சிலையில், மேற்குப்பக்கம் அடிப்பக்கமாகும். வடக்கு நுனியான சிலையில் தென்பக்கம் அடிப்பக்கமாகும். கிழக்குப்பக்கமும் வடக்குப்பக்கமும் லிங்கத்தின் நுனிப்பக்க (தலைப்பக்க) மாகும் என்று கூறப்பட்டிருக்கிறது. சிலையின் அடிப்பக்கம் முகமாகும் (முன் பக்கமாகும்). மேல்ப்பக்கம் பின்பக்கமாகும்.

இவ்விதமாக, சிலையை நன்கு பரீக்ஷித்துப்பார்த்து, அதை எடுத்து, அந்தச் சிலையை, ஹிருதய மந்திரத்தினாலே பசும்பாலினால் நன்கு அலம்பி சுத்தம் செய்யவேண்டும். பிறகு, அந்தச் சிலையைத் தூக்கி நிறுத்திவைத்து, ஸத்திய மந்திரத்தினாலே சந்தனம் புஷ்பம் முதலியவைகளால்

தஸ்யைஶாந்யே ஶாந்திகுண்டே ஶாந்திஹோமம் து
காரயேத் || ௬௬ ||

அக்ந்யாதாநாதிகம் ஸர்வம் ஸ்வஶாஸ்த்ரோக்தவிதாநத꞉ |
ஸமிதோ ஹ்ருதயேநைவ மூலேநாஜ்யம் து ஹோமயேத் ||

அகோரேண சரும் ஹோம்யம் புருஷேணைவ தண்டுலம் |
திலாநீஶாநமந்த்ரேண ஸர்ஷபம் கவசேந து || ௬௮ ||

ஶதம் ததர்தம் பாதம் வா ப்ரத்யேகம் ஜுஹுயாத் க்ரமாத் |
ஸ்விஷ்டக்ருதம் அக்நயேதி பூர்ணாஹுதிமதாசரேத் ||

ததோ வஹ்நிம் ஸமுத்வாஸ்ய நிர்மால்யம் பூஜிதம் த்யஜேத் |
ஶிலாச்சேதகரம் ஶஸ்த்ரம் ஶஸ்த்ரமந்த்ரேண பூஜயேத் || ௭௦ ||

பூஜிக்கவேண்டும். அதன் பிறகு, அதன் ஈசான்ய திக்கில் சாந்தி ஹோமத்தைச் செய்யவேண்டும். (66)

அக்னி ஆதானம் முதலிய எல்லாவற்றையும், அதற்குக் கூறியுள்ள முறைப்படி செய்யவேண்டும். ஹிருதய மந்திரத்தினால் ஸமித்துக்களையும், மூலமந்திரத்தினால் நெய்யையும், அகோர மந்திரத்தினால் சரு (அன்னம்) வையும், புருஷ மந்திரத்தினால் தண்டுலத்தையும், (தண்டுலம் – அரிசி) ஈசான மந்திரத்தினால் எள்ளையும், கவச மந்திரத்தினால் கடுகையும் ஹோமம் செய்யவேண்டும். கீழே கூறியுள்ள ஸமித்து, நெய், அன்னம், அரிசி, எள்ளு, கடுகு, இவைகள் ஒவ்வொன்றையும் முறையே 100, 50 அல்லது 25 தடவை ஹோமம் செய்யவேண்டும். அக்நே என்ற மந்திரத்தினால் ஸ்விஷ்டகிருத் ஹோமத்தைச் செய்து, அதன் பிறகு, பூர்ணாஹுதி ஹோமத்தைச் செய்யவேண்டும். (69)

அதன் பிறகு, அக்னியை உத்வாஸனம் செய்துவிட்டு, பூஜைசெய்த நிர்மாலிய புஷ்பம் முதலியவைகளை எடுத்துக் களையவேண்டும்.

சிலையைத் துண்டாடவேண்டிய ஆயுதத்தை, அஸ்த்ர

* கவசஸ்யைவ மந்த்ராய ஶிலாச்சேதநமாசரேத் |
ததூர்த்வம் ஶில்பிகார்யம் து ஸ்தபத்யாதி: ஸமாசரேத் ||

கர்ப்பகேஹப்ரமாணம் ச த்வாரமாநம் ததைவ ச |
ஸ்தம்பமாநம் தலமாநம் ஹஸ்தம் தாலாங்குலம் ததா || ௭௨ ||

லிங்கமாநம் த்ருவம் ஸப்தஹேதாஸ்து ப்ரத்யேகயா |
கர்ப்பகேஹே து நவாம்ஶே மாநாம்ஶம் ஶ்ரேஷ்ட
முச்யதே || ௭௩ ||

கர்ப்பார்த்தம் மத்யமம் ப்ரோக்தம் தயோர்மத்யேஷு பாஜிதே |

மந்திரத்தினாலே பூஜை செய்யவேண்டும். அபஸர்பண மந்திரத்தை ஜபித்து, சிலையைத் துண்டாடவேண்டும். அதற்குப் பிறகு சிற்பி செய்யவேண்டிய காரியத்தை ஸ்தபதி முதலியவர்கள் செய்யவேண்டும். (71)

கர்ப கிருஹத்தின் அளவு, துவாரத்தின் அளவு (துவாரம் – கர்பகிருஹத்தின் வாயிற்படி) ஸ்தம்பத்தின் அளவு (ஸ்தம்பம் – கர்பகிரஹத்தின் தூண் மட்டம்) தலமாநம் (கர்பகிருஹத்தின் பூமட்டத்தின் வெளிப்பக்கத்தின் அளவாகும். வெளிப்பிராகாரத்தின் வெளிப்பக்கத்தின் நீளமும் தலமாநமாகக் கூறப்பட்டிருக்கிறது. இதுவே பாதமாநமென்றும் கூறப்பட்டிருக்கிறது) ஹஸ்தமாநம், தாலமாநம், அங்குலமாநம் என்று லிங்கமாநமானது 7-வித மாநங்களால் நிச்சயிக்கப்பட்டிருக்கிறது. இந்த 7-வித மாநங்களிலும் டலவித அளவுகள் கூறப்பட்டிருக்கின்றன.

கர்பகிருஹத்தின் அளவில் 5-ல் 3 பங்கு (உயரம்) இருக்கும் லிங்கமானது உத்தமலிங்கமாகும். அதில் ஸரி

* கவசம் ச ஸமந்த்ராய சிந்தேதி பாடாந்தரம் |

கவசமந்திரத்தால் சிலாச்சேதநம் செய்யவேண்டும் என்று மற்றொரு பிரதியிலுள்ள பாடம்.

ஜ்யேஷ்டமத்யாயமம் லிங்கம் ப்ரத்யேகம் த்ரிவிதம் பவேத் || ௭௪ ||

அதவா கர்பகேஹம்(ஹே)து நவதா ஸவிபாஜிதே |
கர்பகேஹமானாந்தே லிங்கத்ரயம் த்ரயம் || ௭௫ ||

த்வாரமானம் ஜ்யேஷ்டம் த்ரிபாகாம்ஶம் து கநீயஸம் |
தயோர்மத்யேஷ்டதா பிந்நே து நவதா லிங்கமுத்தம || ௭௬ ||

ஸ்தம்பாயாமமானே து நவதா ஸவிபாஜிதே |
ஜ்யேஷ்டமத்யாதிபேதேந நவதா ப்ரோச்யதே த்விஜ || ௭௭ ||

பாதியளவு இருப்பது, மத்தியமலிங்கமாகும். இந்த இரண்டு அளவுகளின் மத்தியிலுள்ள அளவை, அதாவது, ஸரிபாதியிலிருந்து முழு அளவுவரையிலுள்ள (½-க்குமேல் 1 வரையில் உள்ள) மத்திய அளவை 9 பாகங்களாகச் செய்யவேண்டும். அவைகளில் ஒவ்வொரு அளவும் தனித்தனியே 9-வித லிங்கமானமாகும். இந்த 9 வித லிங்கமானங்களில் அதிக அளவுள்ள 3-ம் உத்தமமாகும். மத்தியிலுள்ள 3-ம் மத்தியமமாகும். குறைந்த அளவுள்ள 3-ம் அதமமாகும். இவ்விதமாக கர்பகிருஹத்தின் அளவினால் கிடைக்கும் லிங்கத்தின் உயரமானது 9-விதமாகும். (75)

லிங்கமானது (லிங்கத்தின் உயரமானது) கர்பகிருஹ துவாரத்திற்கு (உயரத்திற்கு) ஸமமாக இருப்பது உத்தம லிங்கமாகும். அதில் 3-ல் 2 பங்கு உயரமுள்ளது கனிஷ்டமாகும் (அதமமாகும்.) இவ்விரண்டு அளவுகளின் மத்தியிலுள்ள அளவை 8 பாகங்களாகச்செய்ய, துவாரமானத்தால் கிடைக்கும் லிங்கமானமானது 9 விதமாகும். (76)

ஸ்தம்பத்தின் முழு அளவை 9 பாகங்களாகச் செய்ய, அதன் ஒவ்வொரு பாகமும் தனித்தனியே, லிங்கத்தின் மானமாகும். எனவே ஸ்தம்பமானத்தால் கிடைக்கும் லிங்கமானமானது 9 விதமாகும். இவைகளில் மூன்று மூன்று

வ்யாஸாதெ ஙவாதிஸமெள து ஸ்தம்ஸாமஸஃஹிதக் ।
ஙயிஷ்டாநோடியெ விவ்ய ஸ்தம்ஸாநவஹாஅஸெக் ॥ எஅ ॥

ஹஸஹஸ்தம் ஸஉாஙஹ்ய ஸ்லாஷ்டாம்பாம்ப விவயூநாக் ।
நவஹஸ்தாவயிபூாவக் ஸஜூாஷஷிஃ ஸவணுகா ॥ எகூ ॥

வணுஹஸ்தவி(ஸ்தாஙி)ஊநாதி(நி)ஹஜெ்ஹ்ய ஹஸ்தவஸம்(ஸாக்) நயெக் ।
வணுஹஸ்தாடியொஹஜெ்ஹ்ய ஶிம்மம் ஹஸ்தவூஸம்விநா ॥ அ0 ॥

ஹஸ்தாதி ம்ணஹஸ்தாதும் * விகல்பாஹாஸஹஜ்யொஃ ।

கூறுகள், முறையே உத்தம – மத்தியம – அதமங்களாகும். கர்பகிருஹத்தின் ஆதிபூமியான உள்பக்கத்தில் தூண் மட்டத்திற்கு ஸமமான பகுதிக்கே ஸ்தம்பம் என்று பெயர். அதிஷ்டாநத்தின் உயரத்தில் ஸ்தம்பமாநத்தைப் போல கணக்கிட்டுக்கொள்ள வேண்டும். (78)

ஒரு ஹஸ்தம் முதல் 9 ஹஸ்தம் வரையில் ஹஸ்தத்தில் 8ல் ஒரு பங்கு வீதம் கூட்டிவர, ஹஸ்தமாநத்திலுல் கிடைக்கும் லிங்கமாநமானது 65 விதமாகும். (79)

5 ஹஸ்தத்திற்கு அதிகமாகயிருக்கும் கர்பகிருஹத்தில், லிங்கமாநத்தை, ஹஸ்தமாநத்தால் கணக்கிட வேண்டும். கர்பகிருஹமானது, 5 ஹஸ்தத்திற்கு உள்பட்டதாக இருந்தால், ஹஸ்தமாநத்திலுல் லிங்கமாநத்தைக் கணக்கிடக் கூடாது. (80)

*ஆலயமானது, விகல்பஹர்மியமாகவோ, ஆபாஸஹர்மியமாகவோ இருந்தால், அப்பொழுது 1 முதல் 3 ஹஸ்தம் வரையில் லிங்கமாநத்தைக் கொள்ள வேண்டும்.

---

* விகல்பாஹாஸஜாதிவிமாநலக்ஷணாநி உச வடிலெ மாநஸூத்ரலக்ஷணெ உக்ஷவ்யாநி ।

* விகல்பம்--ஆபாஸம்—சந்தம்--ஜாதி--எனப்படும் விமாந லக்ஷணங்களை 24-வது படலத்தில் மாநஸூத்ரலக்ஷணத்தில் பார்த்துக்கொள்ளவேண்டும்.

த்ரிஹஸ்தாத் ஷட்கராந்தம் து லிங்கம் ஸஞ்சிதாலயே ||

ஷட்கராதி நவாந்தம் து லிங்கம் ஜா(ஜா)திமுக்யாதிகே |

ஏவம் ஹஸ்தவசாத்ப்ரோக்தம் தாலமாநமதோச்யதே || ௮௨ ||

ஏகாதி நவதாலாந்தமேகைகதாலவர்த்தநாத் |

லிங்கே ஹி நவமாநாஸ்யு(ஸ்ஸ்யு) ஸ்யுஃ க்ஷுத்ர
ஜாதீதராலயே || ௮௩ ||

* த்ரயோதசாங்குலாத்ப்ராஹ்யம் யாவந்நவசதாங்குலம் |

தாவதேகோநபஞ்சாசல்லிங்கம் மாநாங்குலேந து || ௮௪ ||

த்ரிஹா ப்ரவிபக்தம் லிங்கம் ஹஸ்தக்ஷீணம் ந காரயேத் |

ஆலயமானது, சந்தவிமானமாக இருந்தால் 3 முதல் 6 ஹஸ்தம் வரையில் லிங்கமானத்தைக் கொள்ளவேண்டும். அதுவே, ஜாதிவிமானமாக இருந்தால் 6 முதல் 9 ஹஸ்தம் வரையில் லிங்கமானத்தைக் கொள்ளவேண்டும். இவ்விதமாக ஹஸ்தவசத்தாலே லிங்கமானம் கூறப்பட்டிருக்கின்றது. இனி தாலமானத்தைக் கூறுகிறேன். (82)

ஏகதாலம் முதல் ஒவ்வொரு தாலமாகக் கூட்டிவர, தாலபேதத்தினலே லிங்கமானம் 9 விதமாகும். இது ஜாதிஹர்மியமல்லாதவிடத்திற்குக் கூறப்பட்டதாகும். (83)

13 அங்குலம் முதல் 109 அங்குலம் வரையில் 2, 2, அங்குலமாகக் கூட்டிவர லிங்கமானம் 49 விதமாகும். இது மானாங்குலத்தால் கூறப்பட்டதாகும். (84)

சிவாம்சம், விஷ்ணுவம்சம், பிரஹ்மாம்சம், என்ற 3 பிரிவுகளுடன் கூடிய லிங்கத்தை, ஒரு முழ(உயர)த்திற்குக்

---

* த்ரயோதசாங்குலாத் ஹ்யாரப்ய து யாவந்நவசதாங்குலம் |

த்வி த்வி வ்ருத்த்யா ஹர்வ்யே |

ஹஸ்தாதூநாக்ஷயம் லிங்கம் வ்ருத்தாகாரமபேக்ஷத: || அரு ||

வேதம் நவாம்சகேநாப்தயே விஷ்டரே யோஜயேத் புத: |
சேஷம் து ஊர்த்வபாகம் ஸ்யாத் லக்ஷிகக்ருஹாபாஸக்ருஹயோ: ||

விஷ்டரே பஞ்சபாகம் லிங்கம் விகல்பாபாஸகம் விநா |
த்ரயோதசாங்குலம் லிங்கம் சைலஜம் து ந காரயேத் ||

ஏவம் ப்ரோக்தமேகேந ப்ராஹ்ருதே லிங்கமாநகம் |
நாகரம் த்ராவிடம் லிங்கம் வேஸரம் அ வக்ஷ்யஹம் || அஅ ||

குறைவாகச் செய்யக்கூடாது. ஒரு முழத்திற்குக் குறைவில்லாத லிங்கம் யாவும், விருத்தாகாரமாக (வட்டவடிவமாக)இருப்பதாகும். (85)

லிங்கத்தின் உயரத்தில் 9ல் 4 பாகத்தை பீடத்தினுள், பொருத்தவைக்கவேண்டும். அதன் மீதமான 5 பாகமானது மேலே (சிவாம்சமாக) தெரியவேண்டும். இவ்வித லக்ஷணமுடைய லிங்கத்தை, விகல்பகிருஹம், ஆபாஸகிருஹம், இவைகளில் வைத்துப் பிரதிஷ்டை செய்யவேண்டும். (86)

லிங்கத்திற்குக் கூறிய 5 பாகத்தை, பீடத்தினுள் வைத்து, பாக்கியுள்ள 4 பாகத்தை, மேலே சிவாம்சமாகத் தெரியும்படி செய்யப்பட்டிருந்தால், அந்த லிங்கத்தை விகல்பகிருஹத்திலோ, ஆபாஸகிருஹத்திலோ வைக்காமல், மற்ற ஜாதி கிருஹம், சந்தகிருஹத்தில் வைக்கவேண்டும். சிலையினாலே செய்யப்படும் லிங்கத்தை 13 அங்குலத்தில் செய்யக்கூடாது. (87)

லிங்கமானமானது இவ்விதம் அநேகவிதமாகக் கூறப்பட்டிருக்கிறது. இனி நாகரலிங்கம், திராவிடலிங்கம், வேஸரலிங்கம் இவைகளின் லக்ஷணத்தைக் கூறுகிறேன்.

ௐிஂகொாடியெ தூ வெடாஂஶெ ணகாஂஶஂ கநுூஸஹூக |
தூஂமதுூஂஶெ ஶிவாஂஶஂ தூ விஸூாரஂ ஶ்ரேஷ்டஉூஅூதெ ॥

தயொஉ-கிமெூஷஹாமெ தூ நவயா தாரஉூஅூதெ |
ஸ்வொடியெ கஞாஂஶெ தூ வஞாஂஶஂ ஶாதிகஂ ஹவெக ||

வெடாஂஶஂ வௌஷிகஂ வூாதஂ மூணாஂஶஂ ஜயடஂ ஹவெக |
ஆஹிசாரெ ஹிஹாமஂ ஸூாக வூாஸெவஂ அதூவி-கியக ||

ணவஂ தூயொடி(அதூடி-கி)ஶவூாஸஂ நாமமெ தூ
விகீயதெ |
ௐிஂகொமெஜூ ஹிநவாஂஶெ தூ ஶஸஹூதயூமாஂஶகஷ ||

லிங்கத்தின் உயரத்தில் 4-ல் 1 பங்கு அகலமுடைய லிங்கமானது அதமமாகும். உயரத்தில் 3-ல் 1 பங்கு அகலமுடையது ஶ்ரேஷ்டமாகும் (ஶ்ரேஷ்டம் – சிறந்தது அல்லது உத்தமம்) கீழே கூறப்பட்ட இரண்டுவித அளவுகளின் நடுவிலுள்ள அளவை, 8 பாகங்களாகச் செய்ய, லிங்கத்தின் அகலம் 9 விதமாகும்.

உயரத்தில் 16-ல் 5 பாகம் அகலமுள்ளது, சாந்திக லிங்கமாகும். (சாந்திகம் – தீமைகளை நீக்கக்கூடியது). உயரத்தில் 16-ல் 4 பாகம் அகலமுள்ளது, பௌஷ்டிக லிங்கமாகும். (பௌஷ்டிகம் – ஆரோக்யத்தைக் கொடுக்கக் கூடியது). 16-ல் 3 பங்கு அகலமுள்ளது, ஜயத்தைக் கொடுப்பதாகும்.

ஆபிசார கர்மாவில் 2 பாகம் அகலமுள்ளதாகும். இவ்விதமாக, லிங்கத்தின் அகலம் 4-விதமாகும். நாகர லிங்கமானது இவ்விதமாக 13 (14) வித அகலமுடையதாகும்.

லிங்கத்தின் உயரத்தில் 18 பாகங்களில் முறையே 6 பாகம், 5 பாகம், 4 பாகம், 3 பாகம், விஸ்தாரமுடைய

[illegible] 𑌶𑌾𑌨𑍍𑌤𑌿𑌕𑌾𑌦𑌿𑌃 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌦𑍍𑌰𑌾𑌵𑌿𑌡𑍇 𑌚
𑌚𑌤𑍁𑌰𑍍𑌵𑌿𑌧𑌮𑍍 ।
𑌵𑍇𑌸𑌰𑍇 𑌲𑌿𑌙𑍍𑌗𑌤𑍁𑌙𑍍𑌗𑍇 𑌤𑍁 𑌵𑌿𑌂𑌶𑌤𑍍𑌯𑌂𑌶𑌵𑌿𑌭𑌾𑌜𑌿𑌤𑍇 ॥ ௯௩ ॥

𑌅𑌷𑍍𑌟 𑌵𑌾 𑌸𑌪𑍍𑌤 𑌷𑌡𑍍𑌵𑌾𑌪𑌿 𑌪𑌞𑍍𑌚𑌭𑌾𑌗𑍈𑌰𑍍𑌵𑍍𑌯𑌾𑌸𑌸𑌂𑌪𑍍𑌰𑌕𑌲𑍍𑌪𑌿𑌤𑌮𑍍 ।
𑌶𑌾𑌨𑍍𑌤𑌿𑌕𑌂 𑌪𑍌𑌷𑍍𑌟𑌿𑌕𑌂 𑌚𑍈𑌵 𑌜𑌯𑌦𑌂 𑌚 𑌕𑍍𑌰𑌮𑍇𑌣 𑌤𑍁
(𑌆𑌭𑌿𑌚𑌾𑌰𑌕𑌮𑍍) ॥ ௯௪ ॥

𑌵𑍇𑌸𑌰𑌂 𑌚 𑌚𑌤𑍁𑌰𑍍𑌭𑍇𑌦𑌂 𑌹𑌰𑍍𑌮𑍍𑌯𑌲𑌿𑌙𑍍𑌗𑌂 𑌚 𑌪𑌿𑌣𑍍𑌡𑌿𑌕𑌾 ।
𑌪𑌾𑌦𑌾𑌧𑌾𑌰𑌶𑌿𑌲𑌾 𑌚𑍈𑌵 𑌏𑌕𑌜𑌾𑌤𑌿𑌷𑍍𑌵(𑌶)𑌸𑌂𑌕𑌰𑌮𑍍 ॥ ௯௫ ॥

𑌯𑌦𑍍𑌯𑍇𑌵𑌂 𑌕𑌲𑍍𑌪𑌿𑌤𑌂 𑌲𑌿𑌙𑍍𑌗𑌂 𑌵𑍃𑌦𑍍𑌧𑌿𑌹𑍇𑌤𑍁𑌰𑍍𑌭𑌵𑍇𑌦𑍍𑌧𑍍𑌰𑍁𑌵𑌮𑍍 ।
𑌅𑌨𑍍𑌯𑌥𑌾 𑌤𑍍𑌵𑌸𑌂𑌕𑌰𑌸𑍍𑌥𑌂 𑌤𑍁 𑌰𑌾𑌜𑍍𑌞𑌃 𑌦𑍁𑌃𑌖𑌭𑌯𑌾𑌵𑌹𑌮𑍍 ॥

𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 𑌸𑌰𑍍𑌵𑌪𑍍𑌰𑌯𑌤𑍍𑌨𑍇𑌨 𑌸𑌂𑌕𑌰𑌂 𑌨 𑌸𑌮𑌾𑌚𑌰𑍇𑌤𑍍 ।

---

4 வித லிங்கங்களும் திராவிட லிங்கங்களாம். இவைகள் முறையே, சாந்திகம் முதலிய லிங்கங்களாகும்.

லிங்கத்தின் உயரத்தில் 20-ல், 8 பாகம், 7 பாகம், 6 பாகம், 5 பாகம், விஸ்தாரமுள்ளதாகச் செய்யப்பட்ட லிங்கமானது, வேஸரலிங்கமாகும். இவைகள் முறையே, சாந்திகலிங்கம், பௌஷ்டிகலிங்கம், ஜயதலிங்கம், (ஆபிசாரம்) என்ற லிங்கங்களுமாம். இவ்விதமாக வேஸரலிங்கம் 4 விதமாகும். (94)

ஹர்மியம், லிங்கம், பிண்டிகை, பாதாதாரசிலை, இந்நான்கும் ஒரேஜாதிச் சிலையினால் செய்யப்படவேண்டும். இவைகளில், வேறு ஜாதிச் சிலையைக் கலக்கலாகாது. இவ்விதமாகச் செய்யப்பட்ட லிங்கமானது, ஸகலவிதமான நன்மைகளையும் விருத்தி செய்வதாகும். வேறு ஜாதிச் சிலையின் ஸம்பந்தமிருந்தால், அது அரசனுக்கு துக்கத்தையும் பயத்தையும் உண்டுபண்ணும். (96)

ஆகையால், ஸகலவிதமான முயற்சிகளாலும், சிலை

லிம்மாநாம் நாமநாங்஗ுலேநைவ விபஜேதாயாதிகம் ஸுதீ: ||

லிங்கஸ்யோச்சாதம் து மாநாங்குலேந ஹாஜயேத் |
மாத்ராஜீதம் ப்ருபூர்ணம் வா ஹாநம் வா பரிஹாரயேத் ||

ஶ்ரேஷ்டாதமாயயேஷ் லிங்கேஷு மாத்ராலோபம்
பரிஹரேத் |
உச்சாத்ஷோடஸிபர்திதே தக்ஷவஸ்யா || ௯௯ ||

ஹ்ருதே அசுவ்யாவஶிஷ்டம் ஸ்யாத்அஶ்விந்யாதி விஜோத்தம் |
நவபிர்குணிதே ஸப்தஹ்ருதே ஶேஷகாதி(ஶிஷ்டம் து)
வாரகம் || ௱ ||

க்ஷதநேத்ரகுணிதே அஷ்டஹ்ருதே யோநிர்ஆஹ்ருதம் |

களில் ஜாத்யந்தரஸங்கரம் (ஸங்கரம் — சேர்க்கை) ஏற்படாதபடி, லிங்க நிர்மாணம் செய்யவேண்டும். இவ்விதம் நாகராதி லிங்கங்களின் லக்ஷணம் கூறப்பட்டது. இனி ஆயாதிகளைக் கூறுகிறேன், கேட்பாயாக. (97)

லிங்கத்தின் உயரத்தை மாநாங்குலத்திலுலே வகுக்க வேண்டும். அப்படி அங்குலங்களாகக் கணக்கிடும் பொழுது, அரை குறையாக மிச்சப்பட்டால், அத்துடன் அவசியமான பாகத்தைக் கூட்டியாவது குறைத்தாவது அதை முழு அங்குலமாகச் செய்துகொள்ள வேண்டும். உத்தம லிங்கமானுலும், மத்தியம லிங்கமானுலும், அதம லிங்கமானுலும், அதில் ஏற்படும் அங்குலக் குறைவை, கீழே கூறியபடி, முழு அங்குலமாகச் செய்துகொள்ளவேண்டும்.

(லிங்கத்தின்) உயர அங்குலத்தை 8ஆல் பெருக்கி 27ஆல் வகுத்து மீதம்வரும் எண்ணுனது, அசுவதி முதலிய நக்ஷத்திரங்களாகும்.

லிங்கத்தின் உயர அங்குலத்தை 9ஆல் பெருக்கி 7ஆல் வகுத்து மீதம்வரும் எண்ணுனது, ஞாயிறு முதலிய வாரங்களாகும், (100)

வஸுபிர்வர்த்திதே பாநுஹ்ருதே ஶேஷமாயமுதாஹ்ருதம் ||

நவபிர்வர்த்திதே திக்ஹ்ருதே ஶேஷர்ணம் பவேத் |

வேதைர்வ்ருத்தே நவஹ்ருதே ஶேஷம் தாரகாதய: || ௱௨ ||

ஆயாதிகம் வ்யயக்ஷீணம் ஸம்பதாமாஸ்பதம் ஸதா |

1 த்வஜஸிம்ஹௌ வ்ருஷோ ஹஸ்தீ ஶுபயோநிருதாஹ்ருதா ||

ந்ருபஸ்ய கர்த்ருஜந்மர்க்ஷாத் த்ரிம்ஶதாவஸாநகம் |

3ஆல் பெருக்கி, 8 ஆல் வகுத்து மீதம்வரும் எண்ணனது யோநியாகும்.

8 ஆல் பெருக்கி, 12 ஆல் வகுத்து மீதம்வரும் எண்ணனது ஆதாயமாகும். (101)

9 ஆல் பெருக்கி, 10 ஆல் வகுத்து மீதம்வரும் எண்ணனது, கடனாகும்.

4 ஆல் பெருக்கி 9 ஆல் வகுத்து மீதம் வரும் எண்ணனது திருடர் முதலியவைகளாகும். (102)

ஆதாயம் அதிகமாகவும், கடன் குறைவாகவுமிருக்கும் அங்குலமாநம் சிறந்ததாகும். எப்பொழுதும் ஸகலவித ஸம்பத்திற்குமிருப்பிடமாகும். (ஸகல ஸம்பத்துக்களையும் கொடுக்கும் என்பது பொருள்.)

[2] யோநிகளில், துவஜம், ஸிம்ஹம், விருஷபம், யானை, இவைகள் சுப பலனைக்கொடுப்பவைகளாம். (103)

அரசன், யஜமானன், இவர்களின் ஜந்ம நக்ஷத்திரம்

---

1 த்வஜோ தூமஶ்ச ஸிம்ஹஶ்ச ஶ்வா வ்ருஷஶ்ச கரோ கஜ: |
காகஶ்சேதி க்ரமாத் யோநிநாமாநி கீர்த்திதாநி ச ||

2 துவஜம், தூமம், ஸிம்ஹம், நாய், விருஷபம், கழுதை, யானை, காக்கை, இவைகள் முறையே யோநிகளின் பெயர்களாம்.

ததைவ வாஸ்துநக்ஷத்ராத் கணயேச்சுபாவஹம் || ௱௪ ||

ஜந்மத்ரயம் ச ஸம்பச்ச க்ஷேமஸாதகமித்ரகா: |
ஸுபாவஹாஸ்து விஹிதா: சேஷகாஸ்த்வசுபாவஹா: ||

ஜந்மாஷ்டமம் ச வைநாசம் ததைவ நரராக்ஷஸம் |
வர்ஜிதாஸ்த்வசுபா ஹ்யேதே யத்நத: பரிவர்ஜயேத் || ௱௫ ||

முதல், லிங்கத்தின் நக்ஷத்திரம்வரையில் எண்ணவேண்டும். அவ்விதமே, தேவாலய நக்ஷத்திரம் முதல், லிங்கத்தின் நக்ஷத்திரம் வரையில் எண்ணவேண்டும். இவ்விதம் எண்ணி வரும் நக்ஷத்திரமானது சுப பலனைக்கொடுக்கக்கூடிய சுப நக்ஷத்திரமாக இருக்கவேண்டும். (104)

ஜந்மத்ரயம் (1—10—19வது நக்ஷத்திரங்கள்) ஜந்ம நக்ஷத்திரத்திற்கு 2வது நக்ஷத்திரம், 4வது நக்ஷத்திரம், 8வது நக்ஷத்திரம், 6வது நக்ஷத்திரம், 9வது நக்ஷத்திரம், இவைகள், சுப பலனைக் கொடுக்கக்கூடியவைகள் என்று கூறப்பட்டிருக்கின்றன. மற்ற (3–5–7வது) நக்ஷத்திரங்கள், அசுப பலனைக் கொடுக்கக்கூடியவைகளாம். (105)

யஜமானனுடைய ஜன்ம லக்கினம், சந்திர லக்கினம் இவைகளுக்கு 8-வது ராசிக்குரிய நக்ஷத்திரங்கள், வைநாசிக நக்ஷத்திரம், (3-வது நக்ஷத்திரம்) யஜமானனுடைய நக்ஷத்திரம், லிங்கத்தின் நக்ஷத்திரம், இவ்விரண்டு நக்ஷத்திரங்களில், ஒன்று நரகண நக்ஷத்திரமாகவும், மற்றொன்று ராக்ஷஸகண நக்ஷத்திரமாகவும், இருப்பதுமான நக்ஷத்திரம், இவைகள், அசுபபலனைக் கொடுக்கக்கூடியவைகள் ஆகையால், இவைகள் விலக்கப்பட்டவைகளாம். இந்த நக்ஷத்திரங்களை முயற்சியுடன் கவனித்து நீக்கிவிடவேண்டும். (106)

(இங்கு கூறப்பட்டிருக்கும் விஷயங்கள் யாவும், யஜமானன் லிங்கம் இரண்டிற்குமே கூறப்பட்டதாகும்.)

ஹஸ்தாத்யா வாராதிஸம்யுக்தா ஸப்தர்க்ஷாதிஷு தத்ஸ்ருதா: ।
[ஹஸ்தாத்யா வாராதிஸம்யுக்தம் ஸப்தர்க்ஷாதிஷு தத்ஷயம் ।]
ஶத்ருஶ்ச மரணம் நாஶமம்ருதம் ச யதாக்ரமம் ॥ ௱௭ ॥

*தஸ்கரம் ச க்லீபம் (நிதநம்) ஷண்டாம்ஶகம் பரிவர்ஜயேத் ।
ஶேஷாம்ஶகம் பரிக்ராஹ்யம் ஶுபதம் (அம்ஶம்) து ஸங்க்ரஹேத் ॥ ௱௮ ॥

ஸமலிங்கம் வர்த்தமானம் ஶைவாதிகம் ச ஸ்வஸ்திகம் ।
ஸர்வதோபத்ரலிங்கம் ச ஸார்வதேஶிகமேவ ச ॥ ௱௯ ॥

தாராலிங்கம் முகலிங்கம் லிங்கமஷ்டவிதம் பவேத் ।

ஞாயிற்றுக்கிழமை முதலிய கிழமைகளுடன் கூடிய ஹஸ்தம் முதலான நக்ஷத்திரங்கள், முறையே, சத்துரு, மரணம் நாசம், அமிருதம் எனப்படும். (107)

[2] அம்சங்களில், தஸ்கராம்சம், நிதநாம்சம், க்லீபாம்சம், இவைகளை விலக்கவேண்டும். (இவைகள் கெட்ட பலனைக் கொடுக்கக்கூடியவைகள். ஆதலால் இவைகளை விலக்கவேண்டும். மற்றவைகள் நல்ல பலனைக்கொடுக்கக் கூடியவைகள். ஆகையால்,) மற்ற அம்சங்களைக்கொள்ள வேண்டும். சுபகரமான மாநத்தை (அம்சத்தை)க்கொள்ள வேண்டும். (108)

லிங்கமானது, ஸமலிங்கம் 1, வர்த்தமாநம் 2, சைவாதிகம் 3, ஸ்வஸ்திகம் 4, ஸர்வதோபத்ரம் 5, ஸார்வதேசிகம் 6, தாராலிங்கம் 7, முகலிங்கம் 8, என்று 8 வித

---

1 சோரோ புக்தி: ஶக்திர் தந்யோ ராஜா ச ஷண்டக: ।
நிர்ப்ரீதி நிர்தநம் ப்ரேஷ்ய: நவாம்ஶாநி யதாக்ரமம் ॥

2 சோரன், புக்தி, சக்தி, தந்யம், ராஜா, நபும்ஸகன் (அலி), நிர்பீதி, நிர்தநம், ப்ரேஷ்யன், இவைகள் முறையே அம்சங்களின் பெயர்களாம்.

ஸமலிங்கம் து விப்ராணாம் ந்ருபாணாம் வர்த்தமானகம் ||
ஶைவாதிகம் து வைஶ்யானாம் ஶூத்ராணாம் ஸ்வஸ்திகம் பவேத் |
ஸர்வேஷாமிதரல்லிங்கம் ஸர்வகாமபலப்ரதம் || ௱௰௧ ||

ஏக ஏவ மஹாதேவ: லிங்கமூர்த்திர் ந்ருணாம் ஹித: |
பஹுதா ஸ்வவிபாகேந அனுக்ரஹகரஸ் ஸதா || ௱௰௨ ||

யதேஷ்டாயாமவிஸ்தாரம் சதுரஶ்ரம் (ஶிலாம்) க்ருத்வா விதினா பத: |
அதஸ்த்ரிதா விபஜ்யாத ப்ரஹ்மாம்ஶமிதி தத் ஸ்ம்ருதம் || ௱௰௩ ||

அதஸ்து சதுரஶ்ரம் ஸ்யாத் ஷட்வர்கம் தத்விதீயகம் |

மாகும். இவைகளில், ஸமலிங்கமானது பிராம்ஹணர்களுக்கும், வர்தமானலிங்கமானது க்ஷத்ரியர்களுக்கும், சைவாதிக லிங்கமானது வைசியர்களுக்கும், ஸ்வஸ்திக லிங்கமானது சூத்ரர்களுக்கும், சிலாக்கியமானவைகளாம். இவைகள் நீங்கிய மற்ற லிங்கங்கள் யாவும், எல்லா ஜாதியினருக்கும் விரும்பிய ஸகலவிதமான பலன்களையும் கொடுக்கக்கூடியவைகளாம். மஹாதேவன் ஒருவனேயாலும், அவர், பலவிதமான லிங்க ஸ்வரூபத்துடன், மனிதர்களுக்கு நன்மையயளித்து வருகிருர்.

முதலில் (லிங்கம் செய்யவேண்டியதற்காக எடுக்கப்பட்ட சிலையை) தான் விரும்பும் அகல நீளத்துடன் சதுரச்ரமாகச் செய்யவேண்டும் (சதுரிக்கவேண்டும்.) பிறகு, மேதாவியான சில்பியானவன், கூறப்போகும் விதிப்படி, அதை, 3 பாகங்களாகக் கணக்கிட்டுக்கொள்ள வேண்டும். அந்த 3 பாகங்களில், கீழேயுள்ள பாகத்தை, சதுரச்ரமாக (சச்சதுரமாக)ச் செய்யவேண்டும். இந்த கீழ்பாகத்திற்கு, பிரம்ஹாம்சம் என்று பெயர். (113)

ஊர்த்வே ஹாரம் து வ்ருத்தம் ஸ்யாத்தத்து ஶிவாம்ஶம் நிகத்யதே ||

அம்ஶம் ப்ரத்யேகநாம்நா து கதிதம் து ஶிவாம்ஶகம் |
ஶிவாத்மா சாபிஶிஷ்டம் ஸர்வம் ஸாதாரணம் ஸ்ம்ருதம் ||

வ்ருக்ஷஸ்ய மூலம் மூலாக்ரம் ஶாகாபத்ரம் பலம் க்ஷிதி |
ஶப்த: ஸ்பர்ஶஶ்ச ரூபம் ச ரஸோ கந்தஸ்ததைவ ச ||

யதேந்த்ரியகுணானேவ ஶரீரைகாம்ஶம் ப்ரகீர்த்திதம் |
யதாம்ஶஹேதோ லிங்கஸ்ய ப்ராணிஹேதோர்ந வித்யதே ||

(பிறகு,) அந்தச் சிலையின் நடுவிலுள்ள பாகத்தை அஷ்டாச்ரமாக (8 கோணமாக)ச் செய்யவேண்டும். இந்த மத்தியபாகத்திற்கு விஷ்ணு வம்சம் என்று பெயர்.

மேலேயுள்ள பாகத்தை, விருத்தாகாரமாக (வட்ட வடிவமாக)ச் செய்யவேண்டும். இந்த மேல்பாகத்திற்குச் சிவாம்சம் என்று பெயர். (114)

இவ்விதமாக 3 அம்சங்களைக்கூறி, அவைகளுக்கு, பிரம்ஹாம்சம், விஷ்ணுவம்சம், சிவாம்சம் என்று வெவ் வேறு பெயர்கள் கூறியிருப்பது, அந்தந்த பாகங்களைத் தனித்தனியே வியவஹரிப்பதற்காகக் கூறப்பட்டிருக் கிறது. எனவே அந்த 3 பாகமும் சிவஸ்வரூபமேயாகும்.

சிவலிங்கத்தின் பாகங்கள் எல்லாமே சிவஸ்வரூபந் தான் என்றால், அதன் பாகங்களை வெவ்வேறு வாசகங் களால் எதற்காகக் கூறவேண்டும் என்றால், —

மரத்தின் வெவ்வேறு பாகங்கள், வேரு–உச்சி–கிளை இலை–பழம்–என்று கூறப்படுகின்றன. ஆயினும் இவைகள் எல்லாம், மரம் என்னும் ஒரே பொருள்தான் அல்லவா.

சப்தம்–ஸ்பர்சம்–ரூபம்–ரஸம்–கந்தம்–இவைகள், இந் திரியங்களின் குணங்களாம். இத்தகைய இந்திரியங்கள் பலவாயினும், அந்த இந்திரியங்களையுடைய மனிதன் ஒருவன்தான் அல்லவா? அதைப்போல சிவலிங்கத்தின்

தவெவ பரிவஜிமஹ்ரு ஹாமம் ஷுத்ஹியாநகழ |
*ஜிம்மதாஙம் யாமாஸும் தா கூரகவா கணாயகம
மஜஹெக || ௱௧௯ ||

கொணாகெகொணம் தா ஸம்கஜூ தெந ஊநெந ஜெபரிகஃ |
(ஙஹிஹாமம் தா ஸம்தகெக்ஷக) சஷாமும் தஜூவெஷிதி ||

சயஂவா ஜிம்மதாஙம் தா ஸஷுஹாமம் விஹாஜிதெ |

பாகங்களைத் தனித்து வியவஹரிப்பதற்காக அவைகளுக்கு, யுக்தியாகத் தனித்தனியே பெயர்கள் கல்பிக்கப்பட்டிருக்கின்றவேயல்லாது, அதன் எல்லா பாகங்களுமே லிங்கஸ்வரூபந்தான்.

முதலில், லிங்கத்திற்காக கிரஹிக்கப்பட்ட சிலையின் அகலத்தைக் கணக்கிட்டு, அதை சதுரச்ரமாக (சச்சதுரமாகச்) செய்துகொள்ளவேண்டும். பிறகு அதன் கர்ணத்தின் பாதியில் பாதியைக் கணக்கிட்டுக் கொள்ளவேண்டும். (கர்ணம் குறுக்களவு) அந்த கர்ணத்தின் $\frac{1}{4}$ பங்கு அளவைக்கொண்டு, சிலையின் மூலையைக் கோணமாகச் செய்துகொள்ளவேண்டும். (கோணம்—முக்கோணம்) பிறகு, அந்தக் கோணத்தின் வெளிப்பக்கத்தைச் செதுக்கிவிடவேண்டும். (இவ்விதம் 4 மூலைகளிலும் செய்ய) சதுரச்ரமாக இருந்த சிலையானது அஷ்டாச்ரமாகும். (சதுரச்ரம்—4 பட்டை, அஷ்டாச்ரம்–8 பட்டை. இது சற்றேரக்குறைய ஸம அஷ்டாச்ரமாம்.) (119)

அல்லது, லிங்கத்தின் அகலத்தை (சதுரச்ரமாகச் செய்யப்பட்ட லிங்கார்தமான சிலையின் அகலத்தை)

---

*ஜிம்மதாஙம் யாமாஸும் தா கூரகவா கணாயகாயகழ |
ஸம்மூஹமூ கொணெ கொணம்தா தெந ஊநெந கஜூயெக॥
உதி வாஜெக ஹாவஜூழ |

शेषांशं मध्यपट्टं स्यात् कोणयोस्तु विवर्जयेत् ॥

अथवा वसुभागे तु मध्यपट्टं षडंशकम् ।
कोणयोस्तु विशेषांशं पूर्ववत् तु त्रिधैव हि ॥

चतुरश्रे वसुभागांश(शे) अष्टाश्र(श्रे)
कृते सति ।

तत्कोणार्धं(र्धे) तु पूर्वं(र्वे) कोणात्कोणं
तु भाग(गं)येत् ॥ ௱௨௨ ॥

बाह्यस्थे तु विनिक्षिप्य कुर्यात् वृत्तं तु षोडश ।

---

7 பாகங்களாகச் செய்து, அவைகளில் 4 பாகத்தை, மத்திய பட்டத்தின் (பட்டம்—பட்டை) அளவாக வைத்துக் கொண்டு, (பாக்கியுள்ள 3 பாகத்தில் 2 பக்கங்களிலும் இருக்கும் 1½ பாகத்திற்குச் சமமாக மறுபக்கத்திலும் கணக்கிட்டுக்கொண்டு, அந்த 2 பங்கிலுமுள்ள 1½, 1½, பங்கு அளவுகளையும் முக்கோணமாகச் செய்துகொண்டு) அதன் வெளியிலுள்ள பாகத்தைச் செதுக்கிவிடவேண்டும். அப்பொழுது அது அஷ்டாச்ரமாகும். (120)

அல்லது, 8 பாகங்களில் 6 பாகங்களை மத்திய பட்டமாகக் கணக்கிட்டு, அதன் மிகுதியை, மூலைகளில் முன்போல் கணக்கிட்டு, வெளியில் காணப்படும் பாகத்தைச் செதுக்க, அந்தச்சிலை அஷ்டாச்ரமாகும். இவ்விதம், அஷ்டாச்ரமாகச் செய்வது 3 விதமாகும். (121)

சதுரச்ரத்தை 8 பாகமாகக் கணக்கிட்டு, அஷ்டாச்ரமாகச் செய்துகொண்டு, அந்த அஷ்டாச்ரத்தின் கோணுச்ரங்களின் பாதியை, முன்போலவே கணக்கிட்டு, அதன் கோணங்களில் முக்கோணங்களை அடையாளம் செய்து கொள்ளவேண்டும். பிறகு அந்தக் கோணங்களின் வெளிப் பக்கங்களைச் செதுக்கிவிடவேண்டும். அப்பொழுது, அது,

கஜ்ஞாத்கோணா(கோண)து ஸம்ஸ்க்ருத்ய வ்ருத்தாகாரம் து
தத்பவேத் ॥ ௱௨௩ ॥

அஷ்டாச்ராதீநி வித்யாத்ஸம(ஸௌ)ஸமவஸேவஹி ததந்ய(ங)தே ।
ஶிம்மவா(ம்மாயா)ஜெ யாமாம்(த்ர்யாம்)ஶேது ஸகாம்ஶம்
அத்தூரஶ்ருக்ஷ ॥ ௱௨௪ ॥

உச்ச்ய வேஷ்டம் து வஸ்வச்ரமை வ்ருத்தம் ஶிவாம்ஶகம் ।
ஸமலிங்கமிதி வ்யாதம் விப்ராதீநாம் து வ்ருத்திக்ருத் ॥ ௱௨௫ ॥

ஹாத்ரூஷ்யம்ஶ(ஶே)தஜாயாஜெ ஸப்தாம்ஶம் அத்தூரஶ்ருக்ஷ ।
அஷ்டாம்ஶேம்ஸாஷ்டகோணம்த ...ஞவாஜ்ஜதஜாஅ்யதெ ॥
[அஷ்டாம்ஶஶஷ்டகோணம் அ நதாம்ஶம் வ்ருத்தஜாஅ்யதெ ।]

ஷோடசாச்ரமாகும். பிறகு, அவைகளின் கோணங்களை முன்போலவே முக்கோணமாகச் செய்து, அதன் வெளிப் பக்கங்களிலுள்ள பகுதிகளைச் செதுக்கிவிட வேண்டும். இவ்விதம் செய்ய, அந்தச்சிலையானது, விருத்தாகாரமாகும். (வட்டவடிவ முடையதாகும்) இங்கு கூறப்பட்டிருக்கும் முறையின்படியே, அஷ்டாச்ரம் முதலியவைகள் செய்யப் படுகின்றன.

லிங்கத்தின் உயரத்தை 3 பாகம்செய்து, அதில் 1 பாகம் (அடியில்) சதுரச்ரமாகவும், மத்தியிலுள்ள 1 பாகம் அஷ்டாச்ரமாகவும், மேலேயுள்ள 1பாகம் விருத்தாகாரமாகவும் இருப்பது, ஸமலிங்கமெனப்படும். இது பிராம்ஹணாதி ஜாதியினருக்கு விருத்தியைக் கொடுக்கும். (125)

லிங்கத்தின் உயரத்தை 24 பங்குகளாகச் செய்து கொண்டு, அந்தப் பங்குகளில் 7 பாகம் சதுரச்ரமாகவும், 8 பாகம் அஷ்டாச்ரமாகவும், 9 பாகம் விருத்தாகாரமாகவும் கொள்ளுவது, வர்தமான லிங்கமாகும்,

[illegible] |
[illegible] ||

[illegible] |
[illegible] ||
([illegible]
[illegible] |)

[illegible]
[illegible] |
[illegible] || ௱௨௯ ||

[illegible]
[illegible] |

இவ்விதமாகவே, லிங்கத்தின் உயரத்தில் 6 பாகம் சதுரச்ரம், 7 பாகம் அஷ்டாச்ரம், 8 பாகம் விருத்தமாகக் கொள்ளுவதும், வர்தமான லிங்கமாகும்.

லிங்கத்தின் உயரத்தில் 5 பாகம் சதுரச்ரம், 6 பாகம் அஷ்டாச்ரம், 7 பாகம் விருத்தமாகக்கொள்ளுவதும், வர்தமான லிங்கமாகும்

லிங்கத்தின் உயரத்தில் 4 பாகம் சதுரச்ரம், 5 பாகம் அஷ்டாச்ரம், 6 பாகம் விருத்தமாகக்கொள்ளுவதும் வர்தமான லிங்கமாகும். இவ்விதமாக, வர்தமான லிங்கம் 4 விதமாகும். (127)

லிங்கத்தின் உயரத்தை 10 பாகங்களாகச் செய்து கொண்டு, அவைகளில் 3 பாகம் சதுரச்ரமாகவும், 3 பாகம் அஷ்டாச்ரமாகவும், 4 பாகம் விருத்தமாகவும்கொண்டால், அது, சிவாதிக லிங்கமாகும். இதை வேறுவிதமாகவும் கொள்ளலாம்.

சதுரச்ரம், அஷ்டாச்ரம், வீருத்தம், இவைகளை முறையே, 4, 4, 5 பாகங்களாகவும், 5, 5, 6 பாகங்களாகவும், அல்லது 6, 6, 7 பாகங்களாகவும் கொள்ளலாம்.

லிங்காயாமே நவாம்ஶே து சதுரஶ்ரம் த்விபாகயா(கம்) ॥

அஷ்டாஶ்ரம் து குணாம்ஶேந வேதாம்ஶம் வ்ருத்தமுச்யதே ।
ஸ்வஸ்திகம் ஹ்யேவமாக்யாதம் ஸர்வதோபத்ரமுச்யதே ॥

ஆமூலாத(தா)ந்தம் ஸுவ்ருத்தம் து லிங்கமாத்ரம் த்ரிபாகிகே ।
பூமௌ வேஶ்யம் ததேகாம்ஶம் ஸ்யாதேகாம்ஶம் யோநிவேஶிதம் ॥

பூஜாம்ஶம் ததேகாம்ஶம் ஸர்வதோபத்ர ஏவ ஹி ।
ஸார்வ(ஸர்வ)தேஶிகலிங்கம் து வ்ருத்தாகாரமஶேஷத: ॥

பாணவேத குணாம்ஶம் வா லிங்கோச்சே து விபாஜிதே ।
* பீடே து வேதயேதம்ஶம் ஶேஷம் பூஜாம்ஶமுச்யதே ॥

எனவே, சைவாதிக லிங்கமானது, கீழே கூறப்பட்ட விதிகளின்படி நான்கு விதங்களாகும்.

லிங்கத்தின் உயரத்தை 9 பாகங்களாகச் செய்து, அந்த பாகங்களில், சதுரச்ரம் 2 பாகம், அஷ்டாச்ரம் 3 பாகம், விருத்தம் 4 பாகமிருப்பது, ஸ்வஸ்திக லிங்கமென்று கூறப்பட்டிருக்கிறது. இனி, ஸர்வதோபத்ர லிங்கத்தைக் கூறுகிறேன். (131)

அடியிலிருந்து நுனி வரையில் 3 பாகங்களும் விருத்தாகாரமாகவே இருப்பதாகும். அதன் உயரத்தில் 3ல் 1 பாகம் பூமிக்குள் பதிந்தும், 3ல் 1 பாகம் யோநி (ஆவடை)யில் பொருத்தப்பட்டும், 3ல் 1 பாகம் பூஜாம்சமாக (வெளியில் லிங்காகாரமாகத் தெரிந்துகொண்டும்)வும் இருப்பது, ஸர்வதோபத்ர லிங்கம் எனப்படும்.

ஸார்வதேசிக லிங்கமானது, எல்லா பாகங்களும் விருத்தாகாரமாக இருப்பதாகும். இதன் உயரத்தை, முறையே, 5–4–3 பாகங்களாகச் செய்யவேண்டும். (அவைகளில்

---

* அதோபாகம் து வஹ்ந்யம்ஶம் வேதாம்ஶம் மத்யமம் து தத் ।
இதி மத்யே ஶ்லோகார்தம் யோஜநீயமிதி பாதி ।

ஸார்வதேஶிகலிங்கம் ச ததைவ பரிகல்பயேத் |
ஸமலிங்கோச்ச்ர(ஜேத்ர)யம் நவபாகம் க்ருத்வா விசக்ஷண: ||

ஷடம்ஶே வர்த்துலம் பாகம் ஸப்தாம்ஶம் மத்யபாகத: |
வஸ்வம்ஶம் மூலயோர் பாகம் யத் த்ரைராஶிகம் பவேத் ||

ஸா(ஸ)ர்வஜாத்யர்ஹம் ஶ்ரு(ஶ்ரேஷ்டம்) ஶ்ரேஷ்டம் த்ரைராஶிகவிதிம் பரம் |
ஆமூலாக்ரம் சதுரஶ்ரம் தாராலிங்கம் ததுச்யதே ||

ஸமே து மூலம் சதுரஶ்ரம் ஶேஷம் வஸ்வஶ்ரமேவ ஹி |
அதஶ்சதுரஶ்ரமத்யோர்பாகமஷ்டாஶ்ரம் மத்யமம் பவேத் || ௩௮ ||

---

5 பாகம் அடியிலிருப்பதாகும் மத்தியிலுள்ள 4 பாகத்தை) பீடத்தில் வைக்கவேண்டும். பாக்கியுள்ள (3) பாகமானது பூஜாம்சமாகும். (சிவாம்சமாகும்) இவ்விதமாகவே, ஸார்வ தேசிக லிங்கத்தைக் கல்பிக்கவேண்டும்.

ஸமலிங்கத்தில், அதன் உயரத்தை 9 பாகமாகச்செய்து, 3 பாகங்களை ஸமபாகமாகக் கொள்ளவேண்டும். அதன் வட்டவடிவத்தின் (சிவாம்சமான மேல்பாகத்தின்) சுத்தளவானது, (உயரத்தில் 9ல்) 6 பங்கு இருக்கவேண்டும். மத்திய பாகத்தின் சுத்தளவானது, 9ல் 7 பாகம் இருக்கவேண்டும். கீழ்பாகத்தின் சுத்தளவானது, 9ல் 8 பாகம் இருக்கவேண்டும். இந்த த்ரைராசிக விதியானது எல்லா ஜாதியினருக்குமுகந்ததாகும். சிறந்ததுமாகும்.

அடிமுதல் நுனிவரையில் சதுரச்ரமாக இருப்பது தாராலிங்கமாகும்.

ஸமலிங்கத்தில், மூலபாகம் சதுரச்ரமாகவும், மற்ற இரண்டு பாகங்களும் அஷ்டாச்ரமாக இருப்பதும் தாரா லிங்கமாகும்.

கீழேயுள்ள பாகம் சதுரச்ரமாகவும், மத்திய பாகம்

𑌪𑍂𑌜𑌾𑌭𑌾𑌗𑌂 𑌕𑌲𑌾𑌶𑍍𑌰𑌂 𑌤𑍁 𑌧𑌾𑌰𑌾𑌲𑌿𑌙𑍍𑌗𑌂 𑌤𑍍𑌰𑌿𑌧𑌾 𑌭𑌵𑍇𑌤𑍍 ।
𑌤𑌦𑌗𑍍𑌰𑌂 𑌮𑍌𑌲𑌿𑌪𑌰𑍍𑌯𑌨𑍍𑌤𑌂 𑌯𑌵𑌾𑌰𑍍𑌧𑌂 𑌵𑌾 𑌯𑌵𑍋𑌨𑍍𑌨𑌤𑌮𑍍 ॥௧௯॥

𑌸𑌮𑌲𑌿𑌙𑍍𑌗𑌂 𑌤𑍁 𑌧𑌾𑌰𑌾𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌸𑌰𑍍𑌵𑌪𑍍𑌰𑌾𑌣𑌿𑌹𑌿𑌤𑌾𑌵𑌹𑌮𑍍 ।
𑌧𑌾𑌰𑌾𑌲𑌿𑌙𑍍𑌗𑌸𑌮𑌂 𑌖𑍍𑌯𑌾𑌤𑌂 𑌮𑍁𑌖𑌲𑌿𑌙𑍍𑌗𑌂 𑌵𑌿𑌶𑍇𑌷𑌤𑌃 ॥ ௨௦ ॥

𑌶𑌿𑌵𑌾𑌤𑍀𑌤(𑌶𑌿𑌵𑌾𑌂𑌶𑌾𑌧𑌿𑌕𑌲𑌿𑌙𑍍𑌗𑍇 𑌤𑍁 𑌮𑍁𑌖𑌲𑌿𑌙𑍍𑌗𑌂 𑌪𑍍𑌰𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌤𑌂) ।
𑌪𑍂𑌜𑌾𑌭𑌾𑌗𑌤𑍍𑌰𑌯𑌂(𑌪𑍂𑌜𑌾𑌂𑌶𑌂 𑌤𑍁 𑌤𑍍𑌰𑌿𑌧𑌾)𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌊𑌰𑍍𑌧𑍍𑌵𑌭𑌾𑌗𑌂 𑌮𑍁𑌖𑌂 𑌭𑌵𑍇𑌤𑍍 ॥ ௨௧ ॥

𑌪𑌞𑍍𑌚𑌮𑍌𑌲𑌿 𑌚𑌤𑍁𑌰𑍍𑌵𑌕𑍍𑌤𑍍𑌰𑌂 𑌗𑍍𑌰𑍀𑌵𑍈𑌕𑌸𑌮𑌾𑌯𑍁𑌤𑌮𑍍 (𑌕𑌾𑌂𑌶𑌸𑌂𑌯𑍁𑌤𑌾) ।

அஷ்டாச்ரமாகவும், பூஜாபாகம் (மேல்பாகம்) ஷோட சாச்ரமாக இருப்பதும் தாராலிங்கமாகும். இவ்விதம் தாராலிங்கம் 3 விதமாகும்.

இத்தகைய தாராலிங்கத்தின் அச்ரமானது, (அச்ரம்–பட்டை) லிங்கத்தின் சிரஸ்ஸு வரையிலிருப்பதாகும். ½ அல்லது 1 யவை உயர்ந்திருப்பதுமாகும்.

ஸமலிங்கமானது தாராலிங்கமாக இருந்தால், அது, ஸகல பிராணிகளுக்கும் நன்மையையுண்டுபண்ணும்.

முகலிங்கமானது, விசேஷித்து, தாராலிங்கத்தைப் போன்றதேயாம்.

சிவாம்சாதிக லிங்கத்தில், முகலிங்கம் கல்பிக்கப்பட வேண்டுமென்று கூறப்பட்டிருக்கிறது. அந்த லிங்கத்தின் பூஜாபாகத்தை 3 பாகங்களாகச் செய்து, அதன் மேல் பாகத்தில் முகம் இருக்கவேண்டும். அந்த மேல் பாகத்தை 10 பாகங்களாகச் செய்து, அவைகளில், 5 பாகம் சிரஸ்ஸாகவும், 4 பாகம் முகமாகவும், 1 பாகம் கழுத்தாகவும்

[illegible]
[illegible] ॥ ௪௨ ॥

[illegible] ।
[illegible] ॥ ௪௩ ॥

[illegible] ॥
[illegible] ॥ ௪௪ ॥

[illegible] ।
[illegible] ॥ ௪௫ ॥

[illegible] ।
[illegible] ॥ ௪௬ ॥

இருக்கவேண்டும். அதில், 2 காதுகள், 2 கண்கள், உதடு, இவைகள் ஸகலலக்ஷணங்களுடன் அமைந்திருக்கவேண்டும். அதன் கீழ்பாகமானது, லிங்காகாரமாக இருக்கவேண்டும். அதில் ஸரிபாதியளவு பீடத்துடனிருக்கவேண்டும். (இங்கு ஸரிபாதி என்பதற்கு பூஜாம்சத்தில் ஸரிபாதி என்றுவது, பூஜாம்சம் நீங்கிய பாகத்தில் ஸரிபாதி என்றுவது பொருள் கொள்ளவேண்டும். எனவே, லிங்கத்தின் முழு அளவில், ஸரிபாதியளவு கொண்டது பூஜாம்சம் என்பது கருத்து.)

அல்லது லிங்கத்தின் உயரத்தை 124 பாகங்களாகச் செய்துகொண்டு, அவைகளில் 11 பாகங்களை முகமானமாகக் கொள்ளவேண்டும். அது, கழுத்திற்குமேலே 11 பாகங்களாகும். முகத்திற்கு மேலே கேசாந்தபாகமான உச்சியி னுயரம் 3 அல்லது 4 பாகங்களாகும்.

முகத்தில், நேத்திராந்தம், புடாந்தம், ஹநுவந்தம், இம் மூன்று பாகங்களும், முறையே, 3 யவை அதிக அளவு உடையவைகளாம். 4 யவை அதிகமாகவும் இருக்கலாம்.

முகவாய்க்கட்டைக்குக் கீழே, கழுத்தின் உயரம், 4 பாகங்களாம். கண்டமானது, கேசாந்தத்தின் அளவே

𑌶𑍇𑌷𑌂 𑌲𑌿𑌙𑍍𑌗𑌾𑌕𑍃𑌤𑌿 𑌵𑍃𑌤𑍍𑌤𑌂 𑌕𑍁𑌰𑍍𑌯𑌾𑌤𑍍 𑌲𑌕𑍍𑌷𑌣𑌾𑌨𑍍𑌵𑌿𑌤𑌮𑍍 ।
𑌅𑌥𑌵𑍈𑌕𑌵𑌕𑍍𑌤𑍍𑌰𑌂 𑌵𑌾 𑌅𑌥𑌵𑌾 𑌬𑌹𑍁 𑌦𑍍𑌵𑌿𑌬𑌾𑌹𑍁 𑌵𑌾 ॥

𑌸𑍍𑌕𑌨𑍍𑌧𑌸𑍍𑌯𑍋𑌰𑍍𑌧𑍍𑌵𑌾𑌵𑌶𑌿𑌷𑍍𑌟𑌾𑌤𑍍 𑌬𑌿𑌮𑍍𑌬𑌲𑌕𑍍𑌷𑌣𑌸𑌂𑌯𑍁𑌤𑌮𑍍 ।
𑌹𑌿𑌕𑍍𑌕𑌾𑌸𑍍𑌯𑍋𑌰𑍍𑌧𑍍𑌵𑌾𑌵𑌶𑌿𑌷𑍍𑌟𑌾𑌚𑍍𑌚 𑌶𑍇𑌷𑌂 𑌲𑌿𑌙𑍍𑌗𑌾𑌕𑍃𑌤𑌿𑌰𑍍𑌭𑌵𑍇𑌤𑍍 ॥

𑌏𑌵𑌂 𑌲𑌿𑌙𑍍𑌗𑌮𑌿𑌤𑌿 𑌵𑍃𑌤𑍍𑌤𑌂 𑌨𑍃𑌪𑌾𑌣𑌾𑌮𑌭𑌿𑌵𑍃𑌦𑍍𑌧𑌿𑌕𑍃𑌤𑍍 ।
𑌵𑌿𑌷𑍍𑌕𑌮𑍍𑌭𑌮𑌷𑍍𑌟𑌧𑌾 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌮𑍂𑌲𑍇 𑌮𑌧𑍍𑌯𑍇 𑌤𑌥𑌾𑌗𑍍𑌰𑌕𑍇 ॥ ௱௪௯ ॥

𑌕𑍍𑌰𑌮𑌹𑍀𑌨𑌂 𑌤𑍁 𑌸𑌂𑌕𑍁𑌰𑍍𑌯𑌾𑌤𑍍 [illegible] ।

இருப்பதும் கூடும். இவைகள் நீங்கிய கீழேயுள்ள பாகங்கள் லிங்காகாரமாக இருக்கவேண்டும். இவைகள் லக்ஷணத்துடன் அமையப் பெற்றிருக்கவேண்டும்.

(முகலிங்கமானது, முன் பக்கத்தில் மட்டிலும்) ஒரே முகம் உடையதாக இருக்கலாம். அல்லது, (4 பக்கங்களிலும்) 4 முகங்கள் உடையதாகவும் இருக்கலாம். 2 கைகள், அல்லது 4 கைகள் உடையதாக இருக்கலாம். (கைகள் அமையப்பெற்றிருக்க வேண்டுமானல், அதில்) ஸ்தந மட்டத்திற்கு மேலே அமைந்திருக்கவேண்டும். அதுவும் லக்ஷணத்துடன் அமைந்திருக்கவேண்டும். முகம் மட்டிலுமுள்ளதானல், அது, கழுத்திற்குமேலே அமைந்திருக்க வேண்டும். இது நீங்கிய பாகமானது லிங்கவடிவமாக இருக்கவேண்டும். இவ்விதம் முகலிங்க லக்ஷணம் கூறப்பட்டுள்ளது. இத்தகைய முகலிங்கமானது, அரசர்களுக்கு அபிவிருத்தியை யுண்டுபண்ணும்.

லிங்கத்தின் விஷ்கம்பத்தை (சுத்தளவை) 8 பாகங்களாகக் கணக்கிட்டுக்கொள்ளவேண்டும். லிங்கத்தின் மூலம் (அடி) மத்தியம் (நடு) அக்ரம் (நுனி) இவைகள் முறையே ஒன்றுக்கொன்று 1 பாகம் குறைவாக அமையப் பெற்றிருக்கவேண்டும். அதாவது, மூலம் 8 பாகம்,

ஹ்ரஸ்வைச்ச ஶிவஸ்தானே ஶிரஸ்ஸ்தூலமுதாஹ்ருதம் ||

ஏததார்ஷலிங்கவிக்யாதம் ருஷிபி: பூஜிதம் ஸதா |
த்ர்யஶ்ரம் பஞ்சகோணம் ச ஷட்ஸப்தத்வாதஶாஶ்ரகம் ||

தஶாஶ்ரம் ச நவாஶ்ரம் சான்யதாஶ்ரம் மனோஹரம் |
பலகாதர்பணாகாரமேகரேகமரேககம் || ௱௫௨ ||

ஶிரோவர்தனஹீனம் ச மானோன்மானவிவர்ஜிதம் |
தை(தி)வ்யம் ஸ்வாயம்புவம் சேதி விக்யாதம் தைவதை:
ஸம்பூஜிதம் || ௱௫௩ ||

பாணேன பூஜிதாரோஹம் பாணலிங்கமுதாஹ்ருதம் |

மத்தியம் 7 பாகம், அக்ரம் 6 பாக சுத்தளவுள்ளதாக அடி பருத்து நுனி சிறுத்து அமைந்திருக்கவேண்டும். இதற்கு ஸ்தூலமூல லிங்கம் (அடி பருத்த லிங்கம்) என்று பெயர்.

இவ்விதம் இதேயளவில் நுனி—நடு—அடி இவைகள் முறையே 8-ல் 1 பாகம் சுத்தளவு குறைவாக இருந்தால் அது சிரஸ்தூலம் (நுனி பருத்தது) என்று கூறப்படும். இவ்விரண்டு லிங்கங்களும், ஆர்ஷலிங்கமெனப்படும். இது மஹர்ஷிகளால் பூஜிக்கப்பட்டதாகும். சிறந்ததுமாம்.

முக்கோண வடிவமானது 5 கோணமானது, 6 கோண மானது, 7 கோணமானது, 12 கோணமானது, 10 கோண மானது, 9 கோணமானது, வேறு விதமான கோணங் களுடன் மனோஹரமாக இருப்பது, பலகைபோலும் கண் ணாடிபோலும் இருப்பது, ஒரு ரேகையுள்ளது, ரேகையே இல்லாதது, சிரோவர்த்தநம் இல்லாதது, மாநம், உன்மாநம் முதலியவைகள் பொருத்தமாக இல்லாமலிருப்பது, ஆகிய லக்ஷணங்களுள்ள லிங்கமானது, ஸேவிக்கத்தக்கதென்றும் (திவ்ய லிங்கமென்றும்) ஸ்வாயம்புவ லிங்கமென்றும் கூறப் படுகிறது. இது, தேவர்களால் பூஜிக்கப்பட்ட லிங்கமாகும்.

ஸ்தூலம் ஸூக்ஷ்மம் ஶிரொமூலம் க்ரமெண பரிவக்ஷ்யதெ ||

உந்நதம் து ஶிரொஜ்ஞேயம் * மதுவர்ணம் ந துஷ்டிதம் |
விஷ்டரெ து ப்ரவெஶாம்ஶம் ஸார்வதெஶிகலிங்கவத் ||

லொஹஜம் ரத்நஜம் சைவ ஸார்வதெஶிகலிங்கவத் |
லிங்கபெதா: ஸமாக்யாதா: ஶிரொவர்தநம் ஶ்ருணு ||

லிங்கமூர்தாதி கொடாந்தம் ஶிரொவர்தநம் ஹிதம் |

பாணாஸுரனுலே பூஜிக்கப்பட்ட ஸ்வரூபத்தையுடைய லிங்கத்திற்கு பாணலிங்கம் என்று பெயர். அது ஸ்தூலமென்றும், ஸூக்ஷ்மமென்றும், சிரோலிங்கமென்றும், மூலலிங்கமென்றும் முறையே கூறப்படுகிறது. பாணலிங்கத்தில் உயர்ந்திருப்பது (எடுப்பாக உயர்ந்து காணப்படும் பக்கமானது) சிரஸ்ஸாகும். மது வர்ணமாக (தேன் நிறமாக) இருப்பது ஸந்தோஷத்தைக் கொடுக்காது. (அதைத் தொட்டால் சீதலமாக இருக்கும் என்பது மற்ருெரு பிரதியிலுள்ள பாடம்.) இந்த பாணலிங்கத்தை ஆஸநத்தில் வைக்கும்பொழுது, அது ஸார்வதேசிக லிங்கத்திற்குக் கூறியுள்ளபடி ஆஸநத்திலமர்ந்திருக்க வேண்டும்.

லோஹத்திஞல் செய்யப்பட்ட லிங்கம், ரத்நத்திஞல் செய்யப்பட்ட லிங்கம் ஆகிய இவைகளையும், ஸார்வதேசிக லிங்கத்திற்குக் கூறப்பட்ட விதியின்படியே, ஆஸநத்தில் வைக்கவேண்டும். இவ்விதமாக லிங்க பேதங்கள் கூறப்பட்டன. இனி சிரோவர்தநத்தைக் கூறுகிறேன். கேட்பாயாக.

லிங்கத்தின் தலையிலிருந்து உச்சிவரையில் சிரோவர்தநம் செய்யவேண்டும். (சிரோவர்தநம் லிங்கத்தின் உச்சியின் அமைப்பு) ஆகையால், லிங்கத்தின் உயரத்தைக் கணக்

---

* ஶைத்யெ ஸ்பர்ஶநெ நீதலம் இதி பாடாந்தர: |

𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 𑌶𑍍𑌰𑍀𑌮𑍋𑌢𑌯𑍇𑌤𑍍𑌕𑌾𑌰𑍍𑌯𑌾𑌤𑍍 𑌶𑌿𑌰𑍋𑌵𑌰𑍍𑌤𑌨𑌂 𑌬𑍁𑌧𑌃 ॥

𑌛𑌤𑍍𑌰𑌾𑌕𑌾𑌰𑌂 𑌭𑌵𑍇𑌤𑍍𑌪𑍂𑌰𑍍𑌵𑌂 𑌕𑍁𑌕𑍍𑌕𑍁𑌟𑌾𑌣𑍍𑌡𑌂 𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑌕𑌮𑍍 ।
𑌤𑍃𑌤𑍀𑌯𑌂 𑌤𑍍𑌰𑌪𑍁𑌷𑌾(𑌤𑍍𑌰𑌪𑍁𑌷𑌾)𑌕𑌾𑌰𑌮𑌰𑍍𑌧𑍇𑌨𑍍𑌦𑍁𑌂
𑌚𑌤𑍁𑌰𑍍𑌥𑌕𑌮𑍍 ॥ ௱௫௮ ॥

𑌲𑌿𑌙𑍍𑌗𑌸𑍍𑌯 𑌸𑍂𑌤𑍍𑌰𑌮𑌾𑌨𑌸𑍍𑌯 𑌵𑌿𑌷𑍍𑌕𑌂𑌭𑌮𑌷𑍍𑌟𑌧𑌾 𑌵𑌿𑌭𑌜𑍇𑌤𑍍 𑌬𑍁𑌧𑌃 ।
𑌊𑌰𑍍𑌧𑍍𑌵𑌾𑌰𑍍𑌧𑌾𑌂𑌶𑌂 𑌸𑌂𑌗𑍃𑌹𑍍𑌯 𑌛𑌤𑍍𑌰𑌶𑍀𑌰𑍍𑌷𑌕𑌮𑍍 ॥
𑌦𑍍𑌵𑌾𑌤𑍍𑌰𑌿𑌂𑌶𑌦𑍍𑌵𑌿𑌭𑌜𑍇𑌤𑍍𑌤𑌾𑌰𑌂 𑌊𑌰𑍍𑌧𑍍𑌵𑌾𑌤𑍍(𑌊𑌰𑍍𑌧𑍍𑌵𑌾𑌤𑍍) 𑌪𑌞𑍍𑌚𑌾𑌂𑌶𑌸𑌂𑌮𑌿𑌤𑌂 ।
𑌛𑌤𑍍𑌰𑌾𑌭𑌂 𑌤𑌤𑍍 𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑌂 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌸𑌪𑍍𑌤𑌾𑌂𑌶𑌂 𑌤𑌤𑍍
𑌤𑍃𑌤𑍀𑌯𑌕𑌮𑍍 ॥ ௱௫௯ ॥

கிட்டு, அதற்கேற்றபடி சிரோவர்தநத்தை அமைக்க வேண்டும். அந்த சிரோவர்தநமானது, குடைபோலிருப்பது (தாழங்குடையின் மேல் பாகத்தைப்போலிருப்பது.) 1, கோழி முட்டைபோல இருப்பது 2, திரிபுரம்போல் *(மூதுக்கன் காயைப்போல்) இருப்பது 3, அரைவட்டமான சந்திரபிம்பத்தைப்போல இருப்பது 4, என்று 4 விதமாகும்.

புத்திமானாக இருப்பவன், லிங்கத்தின் சுத்தளவை 8 பாகமாகச் செய்துகொண்டு, அவைகளில், ½ பங்கை உச்சியிலிருந்து அளந்துகொண்டு, அதை, குடையின் உச்சியைப்போல, சிரோவர்தநத்தை அமைக்கவேண்டும். இது ஒருவிதமாகும்.

லிங்கத்தின் அகலத்தைக் கணக்கிட்டு, அதை 32 பாகங்களாகச்செய்து, அவைகளில், 5 பாகத்தை, உச்சியிலிருந்து, குடையின் உச்சியைப்போல, சிரோவர்த்தநத்தை

---

* த்ரபுஷம் என்பதற்கு முதுக்கன்காய் என்றும், மெதுக்கன்காய் என்றும், சுக்காங்காய் என்றும் பெயர். சிலர் வெள்ளரிக்காய் என்றும், சிலர் கக்கரிக்காய் என்றும் கூறுகின்றனர்,

அத² யதி³ம் து நவாம்ஶம் ஸ்யாச்ச²த்ராகாரம் து
அத²வா விதீ⁴யதே |
விஜாநீயாத் ந்ருபாணாம் ச²த்ராகாரம் ஸர்வகாமத³ம் ||

ஸர்வேஷாமபி லிங்கா³நாம் ச²த்ராகாரம் து ப்ரஶஸ்தகம் |
வ்யாஸே த்³வாத்ரிம்ஶத³ம்ஶே து சதுர்த³ஶகலாம்ஶகை: ||

ஸப்தத³ஶாம்ஶகைரேவ குக்குடாண்ட³ம் விதீ⁴யதே |
வர்த⁴மாநம் லிங்க³ம் து ப்ரஶஸ்தம் க்ஷத்ரியாதி³கே ||

யமைக்கவேண்டும். இது இரண்டாவது விதமாகும்.

இவ்விதமே, லிங்கத்தின் அகலத்தில் 32-ல் 7 பாகங்களால் சிரோவர்த்தநத்தையமைப்பது மூன்ருவது விதமாகும்.

இவ்விதமே, லிங்கத்தின் அகலத்தில் 32-ல் 9 பாகங்களாலே சத்ராகாரமாக சிரோவர்தநத்தை அமைப்பது நான்காவது விதமாகும்.

இவ்விதம் சத்ராகாரமான சிரோவர்தநம் நான்கு விதமாகும்.

சத்ராகாரமான சிரோவர்தநமானது, பிராம்ஹணர்களுக்கும், க்ஷத்திரியர்களுக்கும், ஸர்வாபீஷ்டங்களையும் கொடுக்கக்கூடியதாகும். லிங்கங்கள் எல்லாவற்றிலும் சத்ராகாரமான சிரோவர்தநமுடையது சிறந்ததாகும்.

லிங்கத்தின் அகலத்தை 32 பாகங்களாகச் செய்து, அவைகளில், முறையே, 14 – 15 – 16 – 17 பாகங்களாலே குக்குடாண்டம்போன்ற சிரோவர்த்தநமானது, 4 விதமாகும். (குக்குடம் — கோழி. அண்டம் — முட்டை.) இந்த 4 வித சிரோவர்தநங்களுக்கும், குக்குடாண்டாகார சிரோவர்த்தநம் என்று பெயர். இவ்வித சிரோவர்த்தநமுடைய லிங்கமானது, வர்தமாந லிங்கமாக இருக்க

அர்த்தசந்த்ரஸமம் சிரஸ்த்ரிபாகே முகேமுகோபரி ஸ்யாதுபத்ராஸம் ஸ்ருஷ்டி-
ஸ்த்ரியா ।

ஸாந்தர்ஸ்திரபஸ்ரம்சேஷத் த்ரஸமாஸம்

(த்ரஸமாஸம்) அதத்தவிதியு ॥ ௱௬௪ ॥

சிவாதிகம் அ ஸிம்ஹம் த ஸஹ்ஸ்ரம் வைஸ்யாஸகம் உத்தம் ।

த்ரிம்ஸத்ரிம்ஸே சிரஸ்ரே ஆகிம்ஸததஸகம்ஸதி: ॥

(ஆத்ரிம்ஸத்ம்ஸே ஸ்ரே ஆகிம்ஸதத்ஸக கிம்ஸகை: ।)

லிம்ஸகைத்ஸகிம்ஸம்ஸரமஸ அர்த்ரம் அதத்தவிதியு ।

ஸ்வஸ்திகாவ்யம் அ ஸிம்ஹம் த வ்யஸஹ்ஸ்ரம் ஸ்ருத்ரவ்ருத்திதம் ॥

ஸாவஸ்தை பகஸிம்மாநாஸநேத்ரஷாம் அ விசேஷத: ।

(அ)த்ராதிசீஷகாகாரே(ஸ) த கதர்ஜாதி-

வஸாஸயேஷ ॥ ௱௬௫ ॥

ஜிநாங்குலமாநம் து விஸ்தாரம் கடிபந்தகம் ।

பெருவிரல் முதல் சிறுவிரல் வரையில் (கால்) விரல்களின் அகலம் முறையே 16, 8, 7½, 7, 6 யவையாகும். நகங்களின் அகலமானது, (விரல்களின் அகலத்தில்) 3ல் 2 பங்காகும். அதன் நீளமானது, அகலத்தில் ¾ பங்கு உடையதாய் நீண்டு வட்டமாக இருப்பதாகும். விரல்களின் முகத்தின் உயரமானது, நகத்தின் அகலத்திற்கு ஸமமானதாகும்.

பாததலத்தின் நுனியின் விஸ்தாரம் 6 அங்குலமாகும். நடுவின் அகலம் 5 அங்குலமாகும், குதிகாலின் அகலம் 4 அங்குலமாகும். கால் மணிக்கட்டு மத்தியின் அகலம் 5 அங்குலமாகும். அதற்குமேலே கண்டைக்கால் நுனியின் (சிறுத்திருக்குமிடத்தின்) அகலம் 4 அங்குலமாகும். ஜங்கை மத்தியின் (கண்டைக்கால் நடுவின்) அகலம் 6 அங்குலமாகும். முழங்கால்களின் விஸ்தாரம் 7 அங்குலமாகும். அடித்துடையின் அகலம் 12 அங்குலமாகும். கடிபந்தத்தின் (இடுப்பின்) விஸ்தாரம் 24 அங்குலமாகும்.

யோநிபீடவிஸ்தாரம் து ஸப்தாங்குலமுதாஹ்ருதம் ॥ ௨௩ ॥

யோநிமாநம் சதுர்மாத்ரமதோமுகாஸ்வத்தபத்ரவத் ।
விஸ்தாரஸத்ருசோத்ஸேதம் யோநிம் குர்யாத்ஸமாம்ஸலம்
(ஸமாம்ஸகம்) ॥ ௨௪ ॥

ச்ரோணிஸ்தாநே து விஸ்தாரம் ஸயவம் விம்சதங்குலம் ।
நாபிஸ்தாநே து விஸ்தாரம் ஷட்யவம் பரிகீர்த்திதம் ॥ ௨௫ ॥

மத்யமஸ்ய விஸ்தாரம் து ருத்ராங்குலமுதாஹ்ருதம் ।
ஸ்தநாதஸ்தாத் விஸ்தாரம் ஸார்த்தத்ரயோதசாங்குலம் ॥

ஸ்தநாந்தரம் நவாம்சம் ஸ்யாத் சூசுகம் (த்வ்யங்குலம்)
ஸ்தநமண்டலகம் ।
ஸ்தநோச்சம் ஸார்த்தவேதாம்சம் சூசுகோச்சம் அர்த்தாங்குலம் ॥

ஸ்தநாக்ஷம் ச ஸ்தநம் சைவ வ்ருத்தம் குர்யாத்து ஸுந்தரம் ।

யோநி பீடத்தின் அகலம் 7 அங்குலமாகும். யோநியானது (அகலம்) 4 அங்குலமாகும். அது, கீழ்நோக்கான அரச இலைபோன்று இருப்பதாம். விஸ்தாரத்திற்கு ஏற்ற உயரத்துடன் மாம்ஸலமாக (சதைப்பற்றுள்ளதாக) இருக்கும்படி யோனியை அமைக்கவேண்டும்.

ச்ரோணியின் (அடிவயிற்றின்) விஸ்தாரம் 20 அங்குலம் 1 யவையாகும். தொப்புள் குழியின் அகலம் 6 யவையாகும். இடுப்பின் அகலம் 11 அங்குலமாகும். ஸ்தநத்திற்குக்கீழே (ஹ்ருதய) விஸ்தாரம் 13½ அங்குலமாகும். ஸ்தநத்தின் விஸ்தாரம் 9 அங்குலமாகும். ஸ்தநத்தின் சூசுகம் (கருப்பான அக்ரபாகம்) 2 அங்குலமாகும். ஸ்தநத்தின் உயரம் 4½ அங்குலமாகும். அதன் கண் (காம்பு)ணின் உயரம் ½ அங்குலமாகும். ஸ்தநாக்ஷமும் ஸ்தநமும் வட்ட வடிவமாகவும் அழகாகவும் இருக்கும்படி அமைக்கப்பெற வேண்டும்.

ஸ்தநாந்தரம் யவாஷ்டாம்ஶம் *ஹிக்காவீரம் து தத்ரவை ||௧௮||

கக்ஷயோரந்தரம் வித்யாத் ஸப்ததஶாங்குலம் ஸ்ம்ருதம் |
பாஹ்வோர்மத்யவிஸ்தாரமேகத்ரிம்ஶாங்குலம் பவேத் ||

ஹிக்காயா பாஹுதீர்க்கம் து ஷட்விம்ஶத்யங்குலம் (பவேத் |
கூர்பரோத்ஸேதம் த்விமாத்ரம் ஸ்யாத் ப்ரகோஷ்டம் த்வஷ்டாதஶாங்குலம் ||௨௦||

மணிபந்தாத் தலாயாமம் ஸப்தாங்குலமுதாஹ்ருதம் |
தந்மத்யமா(தந்மத்யமா)ங்குலி: ஷட் பஞ்சாநாமிகாதர்ஜநீ பவேத் ||௨௧||

அநாமிகாதர்ஜந்யோ:†பஞ்சமாத்ரம் அங்குஷ்டகநிஷ்டயோ: |
சதுர்மாத்ரம் தீர்க்கமேவம் ஸர்வயோரங்குல்யோரபி ||௨௨||

இரு ஸ்தநங்களின் மத்தியின் ஒதுக்கம் 8 யவை. இந்த இடமே சந்நவீரம் அணியுமிடமாகும். ஸ்தநாக்ஷங்களின் மத்தியின் ஒதுக்கம் 17 அங்குலமாகும். புஜங்களின் மத்திய விஸ்தாரம் 31 அங்குலமாகும். கழுத்து மட்டத்திற்குக் கீழே புஜத்தின் (மேல்க்கையின்) நீளம் 26 அங்குலமாகும். முழங்கையின் உயரம் 2 அங்குலமாகும். ப்ரகோஷ்டத்தின் (முன்கையின்) நீளம் 18 அங்குலமாகும். மணிக்கட்டிலிருந்து உள்ளங்கையின் நீளம் 7 அங்குலமாகும். அங்கிருந்து நடுவிரலின் நீளம் 6 அங்குலமாகும். சுட்டு விரல் அணி விரல்களின் நீளம் 5 அங்குலமாகும். பெருவிரல், சிறுவிரல்களின் நீளம் 4 அங்குலமாகும். பெருவிரல்முதல்

---

* ஹிக்காவீரம் து இதி ஸாரஸ்வதீயஹாரயஷ்டிகாபாட: |
ஹிக்காவீரம் து இதி பாடே ஸம்யகேவ ஸங்கதிரஸ்தி |

† அங்குஷ்டகநிஷ்டயோ: பஞ்சமம் இதி ஸம்பந்தாத் ஸமாந பாவ்யம் |

நவஸப்தாஷ்டஸப்தஷட்யவாம்ஸ்சாங்குலிவிஸ்தரம் (யவ
ஸம்க்யாக்ரமதஸ்ததா) |

தஸ்ய வேதாம்ஸமம்ஸம் து (அங்குலாம்ஸம்) நகதார
விஸேஷதஸ்ததே || ௩௩ ||

யவத்வயாதிகம் தாரம் நகாயாமம் து தீக்ஷ்ணகம் |
ஹஸ்தஸ்ய தலவிஸ்தாரம் பஞ்சாங்குலம் விதீயதே || ௩௪ ||

மணிபந்தவிஸாலோ(ஸ்)த்ரிமாத்ராம்ஸம் கூர்பரஸ்ய து |
ஷடம்ஸம் பாஹுவிஸ்தாரம் ஸப்தாம்ஸம் பாஹுமூலகம் ||

தஸ்மாதாமணிபந்தாந்தம் க்ரமாத்வேணுவத் க்ருஸம் |
ஹஸ்தவிஸ்தாரமேவம் ஸ்யாத் ஸப்தாம்ஸம் ஸ்ரீவவிஸ்தரம் ||

க்ரீவாக்ரே து விஸ்தாரம் *வஸ்வம்ஸம் ஸ்யாததிகம் |
மூலாம்ஸம் மூலவிஸ்தாரம் கர்ணகாத்ஸமாகரே || ௩௭ ||

சிறுவிரல் வரையில் விரல்களின் அகலம் முறையே 9,7,8,7,6 யவைகளாம். விரல்களின் அகலத்தில் 4ல் 1 பங்கு நகங்களின் அகலமாகும். நகங்கள், அகலத்தைவிட 2யவை நீளமுள்ளவைகளாகும். நகமானது கூர்மையாக இருப்பதாகும்.

உள்ளங்கையின் அகலம் 5 அங்குலமாகும். மணிக்கட்டின் அகலம் 3 அங்குலமாகும் முழங்கையின் அகலம் 5 அங்குலமாகும். பாஹுவின் (மேல்கையின்) அகலம் 6 அங்குலமாகும். பாஹு மூலத்தின் (அடிக்கையின்) அகலம் 7 அங்குலமாகும். பாஹுமூலத்திலிருந்து மணிக்கட்டு வரையில் கொழுத்த மூங்கிலைப்போல் முறையே சிறுத்திருக்கவேண்டும். கையின் அகலம் இவ்விதமாகும்.

கழுத்து நுனியின் அகலம் 7 அங்குலமாகும். அடிக்

---

*ஸப்தாம்ஸம் ஸ்யாததிகம் இதி ஸாஸ்வதீமஹாமுயஸ்
தரகா வார: |

𑌭𑍍𑌰𑍁𑌵𑌃 𑌕𑍇𑌶𑌾𑌨𑍍𑌤𑌸𑍍𑌯 𑌮𑌧𑍍𑌯𑌂 𑌸𑌾𑌰𑍍𑌧𑌂 𑌤𑍁 𑌦𑍍𑌵𑍍𑌯𑌙𑍍𑌗𑍁𑌲𑌂
𑌭𑌵𑍇𑌤𑍍 ।
𑌭𑍍𑌰𑍂𑌮𑌧𑍍𑌯𑌾𑌨𑍍𑌨𑍇𑌤𑍍𑌰𑌸𑍂𑌤𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌂 𑌸𑌪𑌾𑌦𑌦𑍍𑌵𑍍𑌯𑌙𑍍𑌗𑍁𑌲𑌂
𑌭𑌵𑍇𑌤𑍍 ॥ ௫௮ ॥

𑌪𑍁𑌟𑌾𑌦𑌾𑌸𑍍𑌯𑌾𑌵𑌸𑌾𑌨𑌂 𑌤𑍁 𑌸𑌯𑌵𑍈𑌕𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑌂 𑌭𑌵𑍇𑌤𑍍 ।
𑌤𑌦𑌰𑍍𑌧𑌂 𑌗𑍋𑌜𑍀𑌦𑍈𑌰𑍍𑌘𑍍𑌯𑌂 𑌤𑍁 𑌤𑌦𑌰𑍍𑌧𑌂 𑌤𑌸𑍍𑌯 𑌵𑌿𑌸𑍍𑌤𑍃𑌤𑌮𑍍 ॥

*𑌤𑍍𑌰𑌿𑌮𑌾𑌤𑍍𑌰𑌂 𑌕𑌰𑍍𑌣𑌵𑌿𑌸𑍍𑌤𑌾𑌰𑌂 𑌸𑌪𑌾𑌦𑌚𑌤𑍁𑌰𑌂𑌶𑌕𑌮𑍍 ।
𑌕𑌰𑍍𑌣𑌦𑍈𑌰𑍍𑌘𑍍𑌯𑌮𑌿𑌤𑌿 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌂 𑌤𑌨𑍍𑌨𑌾𑌳𑌂 𑌪𑍍𑌰𑌲𑌮𑍍𑌬𑌯𑍇𑌤𑍍 ॥

𑌹𑌸𑍍𑌤𑌿𑌹𑌸𑍍𑌤𑍋𑌪𑌮𑌂 𑌪𑌾𑌦𑌂(𑌨𑌤𑌂) 𑌹𑌾𑌨𑌿𑌕𑍍𑌰𑌮𑌂 𑌭𑌵𑍇𑌤𑍍 ।

கழுத்தின் அகலம் 8 ¶(7½) யவையாகும். முகத்தின் அகலம் 11 அங்குலமாகும். முகமானது கோழிமுட்டை வடிவத்திலிருப்பதாகும்.

புருவத்திற்கும் கேசாந்தத்திற்கும் மத்தியிலுள்ள அளவு, 2½ அங்குலமாகும். ப்ரூமத்தியத்திலிருந்து நேத்திர ஸூத்திராந்தம் வரையில் மத்திய அளவு 2¼ அங்குலமாகும். நாஸாபுடத்திலிருந்து வாய் வரையில் மத்திய அளவு 1⅛ அங்குலமாகும் கோஜி (மேலுதட்டிலுள்ள பள்ளம்) யின் நீளம் 4½ யவையாகும். அதன் அகலம் நீளத்தில் ஸரிபாதி 2¼ யவையாகும். §காதின் அகலம் 3 அங்குலமாகும், காதின் நீளம் 4¼ அங்குலமாகும். காதிலிருந்து அதன் நாளமானது தொங்குதலாக இருக்குப்படி கல்பிக்கவேண்டும். காலானது யானையின் துதிக்கையைப் போல முறையே கரவு சிறை

---

*𑌦𑍍𑌵𑌿𑌮𑌾𑌤𑍍𑌰𑌂 𑌇𑌤𑌿 𑌪𑌾𑌠𑍇𑌨 𑌸𑌾𑌧𑍍𑌵𑌿𑌤𑌿 𑌭𑌾𑌤𑌿 ।

¶7½அங்குலம் அடிக்கழுத்தின் அகலம் என்பது ஸரஸ்வதி மஹாலிலுள்ள நூலின் பாடம்

§காதின் அகலம் 2 அங்குலம் என்று இருக்கவேண்டுமென்று தோன்றுகிறது.

𑌶𑍇𑌷𑌮𑍁𑌕𑍍𑌤𑌂 𑌤𑍁(𑌤𑌤𑍍)𑌤𑌾𑌲𑍋𑌕𑍍𑌤𑌮𑍇𑌵𑌚𑍈𑌵
𑌸𑌮𑌾𑌚𑌰𑍇𑌤𑍍 ॥ ௪௧ ॥

𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌣𑌾𑌂 𑌸𑌾𑌧𑌾𑌰𑌣𑌂 𑌹𑍍𑌯𑍇𑌤𑌤𑍍 𑌵𑌿𑌶𑍇𑌷𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 𑌶𑍃𑌣𑍁 ।

𑌅𑌥 𑌗𑍌𑌰𑍀𑌲𑌕𑍍𑌷𑌣𑌮𑍍 ॥

𑌗𑍌𑌰𑍀 𑌚𑍈𑌵 𑌦𑍍𑌵𑌿𑌭𑍁𑌜𑌾 𑌶𑌾𑌨𑍍𑌤𑌾 𑌦𑍍𑌵𑌿𑌨𑍇𑌤𑍍𑌰𑌾 𑌷𑌟𑍍𑌸𑍍𑌥𑌾𑌨𑌶𑍋𑌭𑌿
(𑌭𑌾𑌸𑌿)𑌤𑌾 ॥ ௪௨ ॥

𑌕𑌰𑌣𑍍𑌡𑌮𑌕𑍁𑌟𑌾 𑌵𑌾𑌥 𑌕𑌿𑌰𑍀𑌟𑌮𑌕𑍁𑌟𑌾𑌨𑍍𑌵𑌿𑌤𑌾 ।
𑌮𑌕𑍁𑌟𑌂 𑌕𑍇𑌶𑌬𑌨𑍍𑌧𑌂 𑌵𑌾 𑌤𑍇𑌷𑍁 𑌚𑍈𑌕𑌤𑌰𑌂 𑌕𑌾𑌰𑌯𑍇𑌤𑍍 ॥

𑌕𑍇𑌶𑌾𑌨𑍍𑌤(𑌕𑌿𑌰𑍀𑌟)𑌮𑌕𑍁𑌟𑍋𑌚𑍍𑌚𑍍𑌯𑌮𑌷𑍍𑌟𑌾𑌦𑌶𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑌾𑌧𑌮𑌮𑍍 ।
𑌏𑌕𑌵𑌿𑌂𑌶𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑌂 𑌮𑌧𑍍𑌯𑌂 𑌶𑍍𑌰𑍇𑌷𑍍𑌠𑌂 𑌚𑌤𑍁𑌰𑍍𑌵𑌿𑌂𑌶𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑌮𑍍 ॥

வாக இருக்கவேண்டும். (அடித்துடையின் அகலம்) 12 அங்குலமாகும். மற்ற லக்ஷணங்களை உத்தமதசதாலத்திற்குக் கூறப்பட்டிருக்கும் கணக்குடனேயே அமைத்துக் கொள்ள வேண்டும். இதுவே ஸ்திரீபிம்பங்களின் ஸாதாரணமான (பொதுவான) லக்ஷணமாகும். இனி விசேஷ லக்ஷணத்தைக் கூறுகிறேன். கேட்பாயாக.

கௌரீ லக்ஷணம்

கௌரீதேவியானவள், இரண்டு கைகளும், சாந்தமான ஆகிருதியும், இரண்டு கண்களும் நீண்டு (சிறப்பாக) பிரகாசிக்கும் ஆறு ஸ்தானங்களுமுடையவளாக இருப்பவளாவாள். கரண்ட மகுடம், அல்லது கிரீடமகுடம், அல்லது கேசபந்தமகுடம் இவைகளில் ஏதாவது ஒன்றை அழகாக அமைக்கவேண்டும்.

கிரீடமகுடமானது, கேசாந்தத்திலிருந்து 18 அங்குலம் உயரமுள்ளதாக இருப்பது அதமமாகும். 21 அங்குலம் உயரமுள்ளதாக இருப்பது மத்தியமமாகும். 24 அங்குலம் உயரமுள்ளதாக இருப்பது உத்தமமாகும். அந்த முகுடத்

𑌯𑌵𑌾𑌧𑌿𑌕𑌂 𑌶𑌿𑌰𑍋𑌨𑌾𑌹𑌾𑌤𑍍 𑌮𑌕𑍁𑌟𑌮𑍂𑌲𑌵𑌿𑌸𑍍𑌤𑍃𑌤𑌮𑍍 |
𑌮𑍂𑌲𑌂 𑌸𑌪𑍍𑌤𑌾𑌷𑍍𑌟𑌭𑌾𑌗𑌸𑍍𑌯 𑌹𑌾𑌨𑍇𑌨𑌾𑌗𑍍𑌰𑌵𑌿𑌶𑌾𑌲𑌕𑌮𑍍 || ௪௫ ||

𑌕𑌿𑌰𑍀𑌟𑌮𑌕𑍁𑌟𑌂 𑌚𑍈𑌵𑌂 *𑌕𑍇𑌶𑌬𑌨𑍍𑌧𑍇𑌵𑌮𑌾𑌚𑌰𑍇𑌤𑍍 |
𑌮𑍂𑌲𑌾𑌦𑌾𑌰𑌭𑍍𑌯 𑌕𑍍𑌰𑌮𑌾𑌤𑍍 𑌕𑍍𑌷𑍀𑌣𑌂 𑌕𑌰𑌣𑍍𑌡𑌮𑌕𑍁𑌟𑌸𑍍𑌯 𑌤𑍁 ||௪௬||

𑌪𑌦𑍍𑌮𑌸𑍍𑌯 𑌮𑍁𑌕𑍁𑌲𑌾𑌕𑌾𑌰𑌂 𑌮𑍁𑌕𑍁𑌟𑌾𑌗𑍍𑌰𑌂 𑌪𑍍𑌰𑌕𑌲𑍍𑌪𑌯𑍇𑌤𑍍 |
𑌤𑍍𑌰𑌿𑌪𑌞𑍍𑌚𑌸𑌪𑍍𑌤𑌨𑌨𑍍𑌦𑍈𑌰𑍍𑌵𑌾 𑌕𑌰𑌣𑍍𑌡𑍈𑌶𑍍𑌚 𑌵𑌿𑌰𑌾𑌜𑌿𑌤𑌮𑍍 ||௪௭||

தின் அடியானது, சிரஸ்ஸின் அகலத்தைக்காட்டிலும், 1 யவை, அகலத்தில் கூடுதலாக இருக்கவேண்டும். மகுடத்தின் நுனியின் அகலமானது, அதன் அடியின் அகலத்தை 7 அல்லது 8 பாகங்களாகச் செய்து, அந்த பாகங்களில் 1 பாகம் குறைவான அகலமுடையதாக இருக்கவேண்டும். இவ்விதமாக கிரீட மகுடத்தின் லக்ஷணம் கூறப்பட்டிருக்கிறது. * கேசபந்தத்தை இவ்விதம் செய்யவேண்டும்.

கரண்ட மகுடமானது அடியிலிருந்து நுனிவரையில் முறையே சிறுத்திருக்கவேண்டும். முகுடத்தின் அக்கிர பாகத்தை, தாமரை மொட்டைப்போன்ற வடிவமுள்ளதாக அமைக்கவேண்டும். (கரண்டமகுடமானது தாமரை மொட்டைப்போல, அடி சிறுத்து, மத்தியில் அகண்டு, அதற்குமேலே முறையே சிறுத்து இருக்கவேண்டும் என்றும் பொருள் கொள்ளலாம்) கரண்ட மகுடமானது, 3, 5, 7 அல்லது 9, கரண்டங்களுடன் (அடுக்குகளுடன்) அழகாக அமைந்திருக்க வேண்டும். (கரண்டம்—தேன்கூடு தேன் கூடானது, அடியில் அகண்டபத்தையும், அதற்குக் கீழே முறையே குறைந்த அகலமுள்ள பலபத்தைகளாலுமமைந்த

---

*𑌕𑌰𑌣𑍍𑌡𑌮𑌕𑍁𑌟𑌂 𑌶𑍃𑌣𑍁 𑌇𑌤𑌿 𑌪𑌾𑌠𑌃 𑌸𑌾𑌧𑍁𑌰𑌿𑌤𑌿 𑌭𑌾𑌤𑌿 |

* இனி கரண்ட மகுடத்தின் லக்ஷணத்தைக் கூறுகிறேன். கேழ்ப்பாயாக என்று இருக்கவேண்டுமென்று தோன்றுகிறது.

சதுஷ்பூரிகஸம்யுக்தம் நாநாபுஷ்பவிராஜிதம் |
ஹாரோபக்ரீவஸம்யுக்தம் முக்தாதாமைரலங்க்ருதம் ||௪௮||

கர்ணௌ குண்டலஸம்யுக்தௌ அங்குலைச்சதுராயதௌ
(தௌ ததா) |
முகுடம் குண்டலம் வாபி வ்ருத்தம் குண்டலமேவ வா || ௪௯ ||

கடகை: கடிஸூத்ரம் ச ஹாரோபக்ரீவஸம்யுதம் |
பாஹுபூரிகஸம்யுக்தம் சந்நவீரஸமந்விதம் || ௫௰ ||

யஜ்ஞோபவீதஸம்யுக்தா கேயூராட்யா ஸுசோபநா |
துகூலவஸநா தேவீ ஸ்யாமவர்ணா ச ஸுஸ்தநீ ||௫௧||

தாகும். இவ்விதமே அடியின் அகலத்தைவிட குறைவான அகலமுள்ள பல அடுக்குகளுடனமைந்திருக்கவேண்டுமென்பது கருத்து)

மேலும், (கிரீடமகுடம், கரண்டமகுடம் இரண்டிலும் 4 பக்கங்களிலும்) 4 பூரிமங்களுடனும் (பூரிமம்—இலைகள் புஷபங்கள் போன்ற விசித்திரமான அமைப்பு) பலவித புஷ்பங்களுடனும் அழகாக இருக்கவேண்டும்.

பார்வதியின் மூர்த்தியானது, ஹாரம், உபக்ரீவம், முத்துமாலை, இவைகளாலே அலங்கரிக்கப்பட்டிருப்பதாகும்.

காதுகள் குண்டலங்களாலே அலங்கரிக்கப்பட்டு, 4 அங்குலம் நீண்டிருப்பவைகளாம். முகுடம், குண்டலம், இவைகள் வட்டவடிவமாக இருக்கவேண்டும். குண்டலம் மட்டுமாவது வட்டமாக இருக்கவேண்டும்.

கடகம், கடிஸூத்திரம், ஹாரம், உபக்ரீவம், பாஹு பூரிமம், சந்நவீரம், இவைகளாலே அலங்கரிக்கப்பட்டிருப்பதாகும்.

தேவியானவள், யஜ்ஞோபவீதம், கேயூரம், வெண்

உத்ஃபுரும் ஒக்ஷிணெ ஹஸெ்தெ வாஊஹஸ்தம் வபுரும்ஸி தழ |
சூஹம்ஹம் ஸஊஹம்ஹம் வா கூலுயெ ஒதிவஸாஹரழ || ருஉ ||

ஒக்ஷிணம் ஸாஸ்திதம் வாஒம் வாஊவாஒம் தா கஞ்ஞிதழ |
சூஹம்மெ தா ஹாணாம்ஸம் தா *வ(வெ)ஒாம்ஸம் ஸஊ
ஹம்ஹகெ || ருங ||

பட்டாடை, இவைகளையணிந்து, பச்சைநிறமும், அழகிய ஸ்தநங்களும் உடையவளாய், மனோஹரமான அழகின் உருவமாக அமைந்திருக்கவேண்டும்.

[ஹாரம் மார்வரையில் தொங்கும் மாலை. உபக்ரீவம்—மார்மட்டத்திற்குமேலே தொங்கும் ஹாரம். முக்தாதாம—முத்துமாலை, கர்ண குண்டலம்—வட்ட வடிவமான கர்ணு பரணம். கடகம்—புஜமத்தியிலணியும் ஆபரணம். கடி ஸூத்திரம் — அரைஞாண். பாஹுபூரிமம் — பாஹுவலயத்திலிருக்கும் இலைகள் புஷ்பங்கள் போன்ற அலங்காரம். சந்நவீரம்—ஊர்த்துவகாயத்தில் தொங்கும் ஹாரம் முதலியவைகள், பக்கங்களில் தொங்கும் குஞ்சம் முதலியவைகள், கேயூரம், கடகம், பத்திரபூரிமம், முதலியவைகள் இவைகளின் நடுவில் தொங்கும் ஹாரங்கள். இவைகள் எல்லாவற்றிற்கும் பொதுவாக சந்நவீரம் என்று பெயர். —மாநஸாரம்)

தேவியின் வலதுகையில் நீலோத்பல புஷ்பம் இருக்க வேண்டும். இடதுகை தொங்கவிட்டிருக்க வேண்டும். அம்பாளின் ஸ்வரூபத்தை ஆபங்கலக்ஷணத்துடனாவது, ஸமபங்க லக்ஷணத்துடனாவது மிகவும் அழகாக இருக்கும்படி கல்பிக்கவேண்டும்.

தேவியின் வலது கால் ஸுஸ்திதமாகவும், இடது கால் குஞ்சிதமாகவும் இருப்பதாகும்.

---

*வெஒாம்ஸம் ஊதி ஸாஸ்ஷ தீஊஷாருயஷூஊாதுகாவாஃ |

நதமானம் ஸமாக்யாதம் ஸூத்ரம் வக்ஷ்யே யதாக்ரமம் |
லலாடமத்யாத் வாமே து நேத்ராந்த(ந்தே)ச வாமகே ||

ஹநௌ வாமே ஸமாங்கஸ்ய ஸ்தநயோர்மத்யமே ததா |
நாபேர்தக்ஷிணபார்ச்வே து வாமோரோர்தக்ஷிணம் ஸ்ப்ருசந் || ௫௫ ||

தக்ஷபார்ஷ்ணேர்வாமபார்ச்வே து லம்பயேத் |
பாதாங்குஷ்டத்வயோர்மத்யே நிர்கமம் ஷோடசாங்குலம் ||

*தத்(தச்சி)ராம்சகமாநம் து பார்ஷ்ணியோர்நிர்கமாந்தரம் |
ஏவமாபங்கமாக்யாதம் ஸமபங்கமதச்ச்ருணு || ௫௭ ||

ஆபங்க லக்ஷணத்தில், நதமானம் (வணக்கத்தால் குறையும் அளவு) 3 அங்குலமாகும். ஸமபங்கத்தில் நதமானம் 2 [1](4) அங்குலமாகும். இனி ஸூத்திரத்தை முறையுடன் கூறுகிறேன்.

நடுநெற்றியிலிருந்து, இடது நேத்திராந்தம், இடது நாஸாபுடாந்தம், இடது தாடை, ஸ்தநங்களின் மத்தியம், நாபியின் வலது பக்கம், இடது துடையின் வலது பக்கம், வலது குதிகாலின் இடது பக்கம், இவைகளில் மத்திய ஸூத்திரம் தொங்கவேண்டும். பாதாங்குஷ்டங்களின் மத்திய ஒதுக்கம் 16 அங்குலமாகும். அதில், 4ல் 1 பாகம் [2](3ல் 1 பாகம்) குதிகால்களின் மத்தியின் ஒதுக்கமாகும். இவ்விதமாக ஆபங்கஸூத்திர லக்ஷணம் கூறப்பட்டிருக்கிறது. இனி ஸமபங்க லக்ஷணத்தைக் கூறுகிறேன்.

---

* தச்சிராம்சகமாநம் இதி ஸரஸ்வதீமஹாலயஸ்தகோசபாட: |

1. ஸமபங்கத்தில் நதமானம் 4 அங்குலம் என்பது ஸரஸ்வதிமஹால் நூலிலுள்ள பாடம்

2. 3ல் 1 பாகம் என்பது ஸரஸ்வதி மஹால் நூலிலுள்ள பாடம்.

லலாடமத்யே நாஸாமத்யே பாதபார்ஷ்ண்யோஶ்ச மத்யமே |
ப்ரலம்பம் ப்ரஹ்மஸூத்ரம் து அதோ நீவ்ரம் து
ப்ரவக்ஷ்யதே || ௫௮ ||

தத்ஸூத்ராத் ஸ்தனயோர்மத்யம் தக்ஷிணே து
குணாம்ஶமாத்ரகம் |
தத்ஸூத்ராத் வாமதோ (தக்ஷிணே) நாபிநீவ்ரம்
த்வ்யம்ஶமாத்ரகம் பவேத் || ௫௯ ||

தத்ஸூத்ராத் வாமதோ (தக்ஷிணே) யோனிமூலமத்யம்
யுகாம்ஶமாத்ரகம் |
தத்ஸூத்ராத் தக்ஷிணே ஜானுநீவ்ரம் குணாம்ஶமாத்ரகம்
பவேத் || ௬௦ ||

ஶேஷம் ஸர்வம் விஶேஷேண கௌரீலக்ஷணமேவ ஹி |
ஸர்வஸ்வதந்த்ராதிபஸ்தாநாம் பூர்வமேவ ப்ரகீர்திதம் தவ
(உக்தம் து லக்ஷணம்) || ௬௧ ||

இதி காமிகாக்யே மஹாதந்த்ரே ஸ்ரீகௌரீலக்ஷணம் நாம
ஷட்பஞ்சாஶத்தம: படல: ஸமாப்த: ||

நடுநெற்றி, நுனிமூக்கு, புறங்கால்களின் மத்தியபாகம், இவைகளில் பிரம்ஹஸூத்திரத்தைத் தொங்கவிட வேண்டும். இனி ஒதுக்கத்தைக் கூறுகிறேன். (58)

பிரம்ஹஸூத்திரத்திலிருந்து வலதுபக்கத்தில் ஸ்தநங்களின் மத்தியபாகம் 3 அங்குலமாகும். ஸூத்திரத்திலிருந்து இடது (வலது) பக்கத்தில் நாபிவரையில் ஒதுக்கம் 2 அங்குலமாகும். ஸூத்திரத்திலிருந்து இடது (வலது) பக்கத்தில் யோநிமூலமத்தியம் வரையில் ஒதுக்கம் 4 அங்குலமாகும். ஸூத்திரத்திலிருந்து வலதுபக்கத்தில் மூழங்கால் வரையில் ஒதுக்கம் 3 அங்குலமாகும். மற்றபடி இதில் கூறப்படாத கௌரீ லக்ஷணங்கள்யாவும் முன்னமேயே

|| அத ஸப்தபஞ்சாசத்தம: படல: ||

அதாதமதசதாலம் ||

கநிஷ்டம் தசதாலேந ப்ரவக்ஷ்யே விசேஷத: |
சந்த்ராதித்யாச்விநௌ ச ருஷீம்ஶ்சைவ குஹம் ததா || 1 ||

ஶாஸ்தாரம் சக்ரம் சைவ சண்டேசம் க்ஷேத்ரபாலகம் |
கநிஷ்டதசதாலேந காரயேத்து விசக்ஷண: || 2 ||

ஷோடசாதிகசதாம்சம் ஸ்யாத் அதமம் தசதாலகம் |
உஷ்ணீஷம் மாத்ரம் வேதாம்சம் கேசாந்தம் து மாத்ரம் மாத்ரம் ||

கேசாந்தாத் ஹனுபர்யந்தம் ஸார்த்தத்வாதசமாத்ரம் ஸவேத் |
ஹன்வாந்தம் மாத்ரம் ஸார்த்தம் கண்டோதயம் விசேஷத: || 4 ||

கூறப்பட்டிருக்கின்றன. ஸரஸ்வதீ முதலிய ஸ்திரீ தேவதைகளின் லக்ஷணங்கள் முன்னமே கூறப்பட்டிருக்கின்றன. (61)

காசியபீய சில்பசாஸ்திரத்தில் மத்யம தசதாலத்தில் ஸ்திரீமாநம் என்னும் ஐம்பத்தாறுவது படலம் முற்றும்.

ஐம்பத்தேழாவது படலம்.

அதம தசதாலம்.

ஹே அந்தணனே! இனி அதம தசதாலத்தைக் கூறுகிறேன். கேட்ப்பாயாக. ஸமர்த்தனான சில்பியானவன், சந்திரன், சூரியன், அசுவினீ தேவர்கள், இருடிகள், குகன், ஐய்யனார், இந்திரன், சண்டிகேசர், க்ஷேத்திரபாலகர், இவர்களை கநிஷ்ட தசதாலத்தாலே செய்யவேண்டும். அதம தசதாலமானது 116 அங்குலமாகும்.

உஷ்ணீஷத்தின் உயரம் 1 அங்குலமாகும். அங்கிருந்து கேசாந்தம் வரையில் 3 அங்குலமாகும். கேசாந்தத்திலிருந்து ஹந்வந்தம் 12½ அங்குலமாகும் ஹநுவிலிருந்து

𑌹𑌿𑌕𑍍𑌕𑌾𑌤𑍍𑌸𑍍𑌤𑌨𑌮𑌧𑍍𑌯𑌾(𑌨𑍍𑌤𑍍𑌯𑌾)𑌨𑍍𑌤𑌂 𑌸𑌾𑌰𑍍𑌧𑌦𑍍𑌵𑌾𑌦𑌶𑌮𑌾𑌤𑍍𑌰(𑌭𑌾𑌗)𑌕𑌂 𑌭𑌵𑍇𑌤𑍍 ।
𑌸𑍍𑌤𑌨𑌾𑌨𑍍𑌤𑌾(𑌨𑍍𑌤𑌾)𑌨𑍍𑌨𑌾𑌭𑌿𑌪𑌰𑍍𑌯𑌨𑍍𑌤𑌂 𑌤𑌤𑍍𑌸𑌮𑌂 𑌪𑌰𑌿𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌤𑌮𑍍 ॥
𑌨𑌾𑌭𑍇𑌰𑍍𑌮𑍇𑌢𑍍𑌰𑌮𑍂𑌲𑌾𑌨𑍍𑌤𑌂 𑌸𑌾𑌰𑍍𑌧𑌦𑍍𑌵𑌾𑌦𑌶𑌮𑌾𑌤𑍍𑌰𑌕𑌮𑍍 ।
𑌮𑍇𑌢𑍍𑌰𑌮𑍂𑌲𑌾𑌤𑍍𑌤𑍁 𑌜𑌾𑌨𑍍𑌵𑌨𑍍𑌤𑌂 𑌪𑌞𑍍𑌚𑌵𑌿𑌂𑌶𑌤𑌿𑌮𑌾𑌤𑍍𑌰𑌕𑌮𑍍 ॥ ௬ ॥
𑌵𑍇𑌦𑌮𑌾𑌤𑍍𑌰𑌂 𑌤𑍁 𑌜𑌾𑌨𑍍𑌵𑍋𑌸𑍍𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌜𑌙𑍍𑌘𑌾𑌯𑌾𑌂 𑌪𑌞𑍍𑌚𑌵𑌿𑌂𑌶𑌂 𑌭𑌵𑍇𑌤𑍍 ।
𑌵𑍇𑌦𑌾𑌂𑌶𑌂 𑌪𑌾𑌦𑌗𑍋𑌤𑍍𑌸𑍇𑌧𑌂 𑌤𑌤𑍍𑌸𑌮𑍇𑌵𑌂 𑌵𑌿𑌧𑍀𑌯𑌤𑍇 ॥௭॥
𑌉𑌷𑍍𑌣𑍀𑌷𑌾𑌤𑍍 𑌪𑍃𑌷𑍍𑌠𑌕𑍇𑌶𑌾𑌨𑍍𑌤𑌂 𑌸𑌾𑌰𑍍𑌧𑌦𑍍𑌵𑌾𑌦𑌶𑌮𑌾𑌤𑍍𑌰𑌂 𑌭𑌵𑍇𑌤𑍍 ।
𑌉𑌷𑍍𑌣𑍀𑌷(𑌾𑌤𑍍) 𑌪𑌾𑌰𑍍𑌶𑍍𑌵𑌕𑍇𑌶𑌾𑌨𑍍𑌤𑌂 𑌪𑌞𑍍𑌚𑌮𑌾𑌤𑍍𑌰𑌮𑍁𑌦𑌾𑌹𑍃𑌤𑌮𑍍 ॥
𑌕𑍇𑌶𑌾𑌨𑍍𑌤𑌾𑌦𑌾𑌨𑌨𑌾𑌨𑍍𑌤𑌂 𑌤𑌂 𑌤𑍍𑌰𑌿𑌧𑌾 𑌭𑌾𑌜𑌿𑌤𑍇 ।
𑌕𑍇𑌶𑌾𑌨𑍍𑌤𑌾𑌦𑌕𑍍𑌷𑌿𑌸𑍂𑌤𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌂 𑌭𑌾𑌗𑍈𑌕𑌂 𑌸𑌮𑌨𑍍𑌤𑌤𑌃 ॥

கழுத்தின் உயரம் 4 அங்குலமாகும். கழுத்திலிருந்து ஸ்தந மத்தியம் வரையில் 12½ அங்குலமாகும். ஸ்தநமத்தியத்திலிருந்து நாபிவரையில் 12½ அங்குலமாகும் நாபியிலிருந்து மேட்ரமூலம் வரையில் 12½ அங்குலமாகும். மேட்ரமூலத்திலிருந்து முழங்கால் வரையில் 25 அங்குலமாகும். முழங்காலின் உயரம் 4 அங்குலமாகும். கண்டைக்காலின் உயரம் 25 அங்குலமாகும். பாதத்தின் உயரம் 4 அங்குலமாகும். இவ்விதமாக உயரம் விதிக்கப்பட்டிருக்கிறது. (7)

உஷ்ணீஷத்திலிருந்து பின்பக்கம் கேசாந்தம் வரையில் 12½ அங்குலமாகும். உஷ்ணீஷத்திலிருந்து பார்சுவ கேசாந்தம் 5 அங்குலமாகும். (8)

கேசாந்தத்திலிருந்து முகவாய்க் கட்டை வரையிலுள்ள அளவை, 3 பாகங்களாகச் செய்து, அவைகளில் 1 பாகம், கேசாந்தத்திலிருந்து அக்ஷிஸூத்திரம் வரையில், 1

[illegible]
[illegible]

[illegible]
[illegible]

[illegible]
[illegible]

[illegible]
[illegible]

[illegible]
[illegible]

பாகம் புடாந்தம் வரையில், 1 பாகம் ஹநுவந்தம் வரையில், என்று கணக்கிட்டுக் கொள்ளவேண்டும் (9)

நேத்திரங்களின் மத்தியபாகமானது 2½ அங்குலமாகும். அதற்கு ஸமமான அளவே கண்ணின் நீளமாகும். இரு கண்களின் நீளம் 5 அங்குலம் இருப்பதாகும். (10)

ப்ரூமத்தியத்திலிருந்து ஊர்தவ கேசாந்தம் வரையில் மத்திய அளவு 17 அங்குலமாகும். நடுப் புருவத்தின் அகலம் 1 யவையாகும்? புருவமானது நடுவிலிருந்து நுனிவரையில் முறையே, சிறுத்திருப்பதாகும. (11)

நேத்திரத்தின் (கருவிழியின்) அகலம் 6 யவையாகும். மேலிமையின் விஸ்தாரம் (உயரம்) 7 யவையாகும். கீழிமையின் அகலமும் அவ்விதமே 7 யவையாகும். (12)

நேத்திரத்தின் நீளத்தை 3 பாகமாகச் செய்ய வேண்டும். அதில் 1 பாகம் கிருஷ்ணமண்டலமாகும். (நடுவிலிருக்கும் கருவிழியாகும்) கிருஷ்ணமண்டலத்தின் நடுவில், ஜ்யோதிஸ் (ஒளி) 1 யவையாகும், ஜ்யோதிர் மண்டலத்தின் நடுவில் திருஷ்டி (பார்வை) 1 யவை (யூகை)

தஸ்ய கேஶாந்தயோர்மத்யே ஹ்யர்த்தசந்த்ரஸமௌ ப்ருவௌ ।
கர்ணாந்தராளம் ச கர்ணம் ச உத்தமே தஶதாலவத் ॥ ௧௫ ॥

க்ராணமூலஸ்ய விஸ்தாரம் உத்தமே தஶதாலவத் ।
நாஸிகாக்ரவிஸ்தாரம் து வ்யோமாங்குலமுதாஹ்ருதம் ॥

அதரோஷ்டஸ்ய ஆயாமம் பக்ஷாங்குலமுதாஹ்ருதம் ।
ததுச்சம் தஸ்ய விஸ்தாரம் த்விபாகம் ச யவாங்குலம் ॥

விஸ்தாரம் தத்ஸமம் வித்யாத் நிம்நமர்த்தயவம் பவேத் ।
தஸ்மாதுபரி நிஷ்க்ராந்தம் யவோநவ்யோமமாத்ரகம் ॥ ௧௮ ॥

க்ரீவாமூலவிஸ்தாரம் து வஸ்வங்குலமுதாஹ்ருதம் ।
க்ரீவாக்ரஸ்ய து விஸ்தாரம் ஸார்த்தஸப்தாங்குலம் பவேத் ॥

வக்ஷஸ்ஸ்தலஸ்ய விஸ்தாரம் ஸப்தத்ரிம்(ஶம்)ஶதிமாத்ரகம் ।
பஞ்சவிம்ஶதிமாத்ரம் து பாஹ்வந்தரமுதாஹ்ருதம் ॥ ௨௦ ॥

யாகும். கீழேயுள்ள இமையிருக்குமிடத்தில் (நேத்திர மத்தியில்) விசேஷித்து நேத்திர ஸூத்திரம் கூறப் பட்டிருக்கிறது. (14)

புருவத்தின் கேசாந்தங்களின் நடுவில் பாலசந்திரனைப் போல புருவம் இருப்பதாகும். காதின் இடமும், காதும், உத்தம தசதாலத்தில் கூறப்பட்டிருப்பதுபோலவேயாகும். மூக்கினடியின் அகலம் உத்தம தசதாலத்தில் கூறப் பட்டதேயாகும். நாஸாக்ரத்தின் விஸ்தாரம் 1 அங்குல மாகும். கீழுதட்டின் உயரம் 2 அங்குலமாகும். உதட்டின் விஸ்தாரம் அதில் ஸரிபாதி 1 அங்குலமாகும். சுபுகத்தின் (முகவாய்க் கட்டையின்) உயரம் 2 அங்குலமாகும். அதன் விஸ்தாரமும் அதைப்போலவே 2 அங்குலமாகும். (அதன் மத்தியில்) பள்ளம் ½ யவையாகும். (18)

அடிக்கழுத்தின் அகலம் 8 அங்குலமாகும். நுனிக் கழுத்தின் அகலம் 7½ அங்குலமாகும், மார்பின் அகலம்

தைர்க்யம் து ப்ரகோஷ்டஸ்ய பஞ்சவிம்ஶாங்குலம் பவேத் ।
தஸ்மான்மத்யாங்குல்யக்ராந்தம் ஸார்த்தத்வாதஶகம் பவேத் ॥ ௨௧ ॥

தத³ர்த்தம் து தலாயாமம் ஶேஷம் மத்யாங்குலாயதம் ।
அங்குஷ்டஸ்ய து தீர்கம் து *அஷ்டாதஶயவாஃ ஸ்ம்ருதாஃ ॥

ஸார்த்தவேதாங்குலம் ப்ரோக்தம் அநாமிகாயாஸ்து தீர்ககம் ।
ததைவ தர்ஜநீதீர்கம் கநிஷ்டாயா யுகாங்குலகம் ॥ ௨௩ ॥

யவைரங்குலிவிஸ்தாரம் (ஷட்) நவஸப்தாஷ்டஷட்கம் யவம் ।
தத³க்ரேऽஷ்டாம்ஶஹீநம் து ஶேஷம் மூலவிஸ்தரகம் ॥ ௨௪ ॥

அக்ரவ்யாஸே து பஞ்சாம்ஶே வேதாம்ஶம் நகவிஸ்த்ருதம் ।
விஸ்தாரார்த்தாதிகம் நகாயாமம் து ஶாஸ்த்ரதஃ ॥ ௨௫ ॥

37 (27) அங்குலமாகும் பாஹுவின் (மேல்கையின்) நீளம் 25 அங்குலமாகும். ப்ரகோஷ்டத்தின் (முன்கையின்) நீளம் 19 அங்குலமாகும். அதிலிருந்து நடுவிரல் வரையில் நீளம் 12½ அங்குலமாகும் அந்த நீளத்தில் ஸரிபாதியளவு உள்ளங்கையின் நீளமாகும். பாக்கியுள்ள ஸரிபாதியளவு நடுவிரலின் நீளமாகும்.

பெருவிரலின் நீளம் [2] 18 யவையாகும். அணிவிரலின் நீளம் 4½ அங்குலமாகும். சுட்டு விரலின் நீளமும் அதுவே யாகும். (4½ அங்குலமாகும்) சிறுவிரலின் நீளம் 4 அங்குல மாகும். பெருவிரல் முதலிய விரல்களின் அகலம் முறையே, 9, 7, 8, 6, 5, யவையாகும். விரல்களின் நுனி யானது அடிப்பக்கத்தின் அகலத்தில் 8ல் 1 பங்கு குறைந் திருப்பதாகும் விரல்களின் நுனியின் அகலத்தில் 5ல் 4 பங்கு, நகங்களின் அகலமாகும். நகத்தின் நீளமானது,

*அத்ராஷ்டாதஶ ஶாஸ்த்ரதம் இதி பாடே ஸ்யாதிதி பாதி ।

2. பெருவிரல் நீளம் 4 அங்குலம் என்று இருக்கவேண்டும் என்று தோன்றுகிறது.

ஸம்ஹாரெஷு து விவரே வ்யாஸதெய்ஷாம் து த்ரி வவரேகம் |
*தலமத்யமரேவாஹி: ஸமெளமாஹம் வாஸ்ரேவதரெ || ௨௬ ||

(தல)மெளம் வ்ரவெஸஸ்ய வந்நம் கொளுகமாஹ்யதெ |
ஷஷ்டாம்ஸ(தஸ்யே)ஹீநமஞ்சம் து வந்நித்யுஹியெதெ ||

தலாயாமஸமம் ஜ்ஞேயம் தலஸ்யைவ து விஸ்தரம் |
மணிபந்தஸ்ய விஸ்தாரம் த்ரயம்ஸம் த்ரிபவாயிகம் || ௨௮ ||

வ்ரகோஷ்டமூலவிஸ்தாரம் ஸார்தஹஸ்தாங்குலமுச்யதெ |
பாஹுமத்யஸ்ய து விஸ்தாரம் ஸார்தஷஷ்டாங்குலமுச்யதெ ||

பாஹ்வக்ரவிஸ்தாரம் து ஸப்தாங்குலமுச்யதெ |
ஹிக்காஸந்தம் து கக்ஷாந்தம் வஸ்வங்குலமுச்யதெ ||

அதன் அகலத்தைக் காட்டிலும் 1/4 பங்கு அதிகமாகும். பெருவிரல் 2 கணுக்களுடையதாகும். மற்ற விரல்கள் 3 கணுக்களுடையவைகளாகும்.

* உள்ளங்கையின் பார்சுவங்களில், தலமத்தியரேகை யானது, சூலத்தைப்போல இருப்பதாகும். உள்ளங்கையின் அடியின் கனம் 2 அங்குலமாகும். அதன் நுனியின் கனம் 8ல் 1 பாகம் குறைந்திருப்பதாம். (உள்ளங்கையின் நுனி யானது, அடியின் கனத்தில் ஸரிபாதி கனம் இருப்பதாம்) உள்ளங்கையின் அகலமானது நீளத்திற்கு ஸமமானதாகும். மணிக்கட்டின் விஸ்தாரமானது, 3¼ அங்குலமாகும். முன் கை அடிப்பக்கத்தின் அகலம் 5½ அங்குலமாகும். மேல்க் கை நுனியின் அகலம் 6½ அங்குலமாகும். மேல்க்கை நடுவின் அகலம் 7 அங்குலமாகும். கக்ஷாந்தமானது,

---

* தலமத்யே து ரேகா: ஸ்யு: ஸூலபத்மாதி ஸம்ஹிதா: |
இதி வா பாடஸ்ஸ்யாத் இதி பாதி |

* உள்ளங்கையில் சூலம் பத்மம் முதலிய ரேகைகள் இருப்பதாம் என்று இருக்கவேண்டும் என்று தோன்றுகிறது.

ஆவிம்சதங்குலம் ப்ரோக்தம் கக்ஷயோரந்தரம் பவேத் ।
ஹ்ருதயாவதிவிஸ்தாரமஷ்டாதஶாங்குலம் பவேத் ॥ ௩௧ ॥

உதரஸ்ய விஶாலம் து ஸப்ததஶாங்குலம் பவேத் ।
ஶ்ரோணிவ்ருத்தவிஸ்தாரம் 1தஶாங்குலமுதாஹ்ருதம் ॥

ஷட்யவம் நாபிவிஸ்தாரம் நிம்நமர்தயவம் (ந்நம் அ ஷட்யவம்) பவேத் ।
ஸ்தநயோரந்தரஞ்ச ஸார்தத்வாதஶாங்குலம் ॥ ௩௨ ॥

ஆமூலாத்காண்டஸ்ய விஸ்தாரஶ்சோச்ச்ரயம் ததைவ ச (த்வியவம்) பவேத் ।
2 முஷ்காயாமம் து வேதாம்ஶம் விஸ்தாரம் சைவ ததைவ ச ॥

ஹிக்காஸூத்திரஸ்தாநமாகும். கக்ஷாந்தத்தின் அகலம் 8 அங்குலமாகும். (கக்ஷாந்தம்—கமுக்கட்டை வரையிலுள்ள கையின் அகலம் 8 அங்குலம்.) (30)

கக்ஷங்களின் மத்தியமானது 22 அங்குலமாகும், ஹிருதயத்தின் எல்லையின் விஸ்தாரம், 18 அங்குலமாகும். வயிற்றின் விஸ்தாரம், 17 அங்குலமாகும். [3]ச்ரோணியின் விஸ்தாரம் 10 அங்குலமாகும். நாபியின் அகலம் 6 யவையாகும். அதன் தாழம் ½ (6) யவையாகும். இரு ஸ்தநங்களின் மத்தியின் அகலம் $12\frac{1}{2}$ அங்குலமாகும். (33)

மூலக்காம்பின் அகலமும் உயரமும் 2 யவையாகும். [4] பீஜகோசத்தின் உயரமும் அகலமும் 4 அங்குலமாகும்.

---

1. அஷ்டாதஶாங்குலம் பவேத் । இதி ஸரஸ்வதீமஹாலய மாத்ருகாபாட: ।

2. இத: ஶ்லோகத்வயாத் பாக: ஸரஸ்வதீமஹாலய மாத்ருகாமத: பாட: ।

3. ச்ரோணி விசாலம் 18 அங்குலம் என்பது ஸரஸ்வதி மஹால் நூலிலுள்ள பாடம்.

4 இதிலிருந்து முழங்காலளவு வரையில் ஸரஸ்வதி மஹால் நூலிலுள்ள பாடம்

ஶிஶ்நம் பஞ்சாங்கு³லாயாமம் தஸ்ய முக²ம் து குட்³மலாகாரவத் |
கடிப்ரதே³ஶவிஸ்தாரம் ஷட்³பா⁴கா³ஷ்டாத³ஶமாத்ரகம் || ௫௫ ||

ஊருமூலவிஸ்தாரம் து ஸார்த⁴மஷ்டாங்கு³லமுச்யதே |
ஜாநுமத்⁴யவிஸ்தாரம் து ஸார்த⁴ஷண்ணாங்கு³லமுச்யதே || ௫௬ ||

நலகாயாஸ்து விஸ்தாரம் ஸார்த⁴வேதா³ங்கு³லம் ப⁴வேத் |
ஸம்வ்ருத்³த⁴மக்³ரவிஸ்தாரம் காலஸ்ரிகாங்கு³லமுச்யதே || ௫௭ ||

தந்மத்⁴யவிஸ்தாரம் து ஹேதாங்கு³லமுதா³ஹ்ருதம் |
பாதா³ங்கு³ஷ்டா²யாமம் அதா⁴ங்கு³லமுதா³ஹ்ருதம் || ௫௮ ||

தஸ்யாக்³ராத் கு³ல்ப²பர்யந்தம் ஸார்த⁴த்³வாத³ஶமாத்ரகம் |
ப்ரதே³ஶிகாயா தீ³ர்க⁴ம் து த்ரயஸ்த்ரிம்ஶத்³யவம் ப⁴வேத் || ௫௯ ||

*மத்⁴யமாங்கு³லிஸ்து தத்துல்யம் வேதா³ங்க³ம் தத³நாமிகா |
கநிஷ்டி²காயா தீ³ர்க⁴ம் து ஸார்தே⁴நம் (ஸார்த⁴ம் து)
த்³வ்யங்கு³லம் ப⁴வேத் || ௬௰ ||

லிங்கத்தின் நீளம் 5 அங்குலமாகும். அதன் நுனி (தாமரை) மொட்டுபோன்றதாகும். இடுப்பின் அகலம் 18¾ அங்குலமாகும். அடித்துடையின் அகலம் 8½ அங்குலமாகும். நடு முழங்காலின் அகலம் 6½ அங்குலம். நளகையின் அகலம் 4½ அங்குலமாகும் முன் பாதத்தின் அகலம் 6 அங்குலமாகும். நடுப்பாதத்தின் அகலம் 5 அங்குலமாகும்.

கால் பெருவிரலின் நீளம் 4 அங்குலமாகும். பெருவிரல் நுனியிலிருந்து கணுக்கால் முண்டுவரையில் 12½ அங்குலமாகும். சுட்டுவிரலின் நீளம் 33 யவையாகும். நடுவிரலின் நீளம் அதேபோன்றதாம். அணிவிரலின நீளம் 4 அங்குலமாகும். [நடுவிரலின் நீளம் 3½ அங்குலமும், அணிவிரலின் நீளம் 3 அங்குலமுமாகும்.] சிறு விரலின்

*மத்⁴யமாங்கு³லிஸ்ஸ்யாத் மாத்ராயம் த்ர்யங்கு³லம் ஸ்யாத³நாமிகா |
இதி வா பாடா²ந்தரம் |

ஸப்தாஷ்டநவதசைவ த்ரயோதசயவம் க்ரமாத் ।
கநிஷ்டாத்யங்குஷ்டாந்தானாம் து விஸ்தார: ப்ரகீர்த்திதே ॥ சக ॥

மூல(ம்)மக்ர(ம்) ஸமம் ப்ரோக்தம் விஸ்தாரம்(ரே) து நகாஜிதே ।
த்விபாகம் நகவிஸ்தாரம் தத்தத்யாயதவர்த்துலம் ॥ சஉ ॥

ததோ(அ)ங்குஷ்டமூலே து பாததலம் து கனம் பவேத் ।
கநிஷ்டாபாதமூலே து கனம் நவயவம் பவேத் ॥ சங ॥

குல்பாந்தாத்பார்ஷ்ணிதைர்க்யம் து வேதமாத்ரம் ததுச்ச்ரயம் ।
வ்ருத்தப்ருஷ்டவிஸ்தாரம் பாதோனம் நவமாத்ரகம் ॥ சச ॥

பக்ஷ்மஸ்யைவ பரே வ்யாஸம் பஞ்சவிம்சதிமாத்ரகம் ।
*ஜ(க)ங்கயோரந்தரம் ப்ரோக்தம் (ப்ருஷ்டே) அஷ்டாவிம்சதிமாத்ரகம் ॥ சரு ॥

நீளம் 2½ அங்குலமாகும். சிறுவிரல் முதல் பெருவிரல் முடிய விரல்களின் அகலம் முறையே 7, 8, 9, 10, 13 யவையாகும் (41)

விரல்களின் அடியும் நுனியும் (அகலத்தில்) ஸமமாக இருப்பதாகும். விரல்களின் நகங்கள், அதன் அகலத்தில் 3-ல் 2 பங்கு அகலமும் அதற்கேற்ற நீளமுமுடையதாய், நீண்டுவட்டமாக இருப்பதாகும். கால் பெருவிரலின் அடியில் பாததலத்தின் கனம் 2 அங்குலமாகும். சிறு விரலுக்குக்கீழே பாததலத்தின் கனம் 9 யவையாகும். (43)

கால் மணிக்கட்டு முண்டியிலிருந்து குதிகாலின் நீளம் 4 அங்குலமாகும் குதிகாலின் உயரமும் 4 அங்குலமாகும். வட்டமான பிருஷ்டபாகத்தின் அகலம் 8¾ அங்குலமாகும்.

---

*ஜ(க)ங்கயோரந்தரம் ப்ருஷ்டே இதி ஸரஸ்வதீமஹாலயஸ்த மாத்ருகாபாட:

𑌅𑌨𑍁𑌕𑍍𑌤𑌾𑌨𑌾𑌂 𑌤𑍁 𑌸𑌰𑍍𑌵𑌷𑌾𑌮𑍁𑌤𑍍𑌤𑌮𑌦𑌶𑌤𑌾𑌲𑌵𑌤𑍍 ।
𑌯𑍇𑌷𑌾𑌂 𑌯𑌲𑍍𑌲𑌕𑍍𑌷𑌣𑌂 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌂 𑌤𑍇𑌷𑌾𑌂 𑌪𑍂𑌰𑍍𑌵𑌵𑌦𑌾𑌕𑍃𑌤𑌿𑌃 ॥

𑌇𑌤𑌿 𑌕𑌾𑌶𑍍𑌯𑌪𑌶𑌿𑌲𑍍𑌪𑍇 𑌅𑌧𑌮𑌦𑌶𑌤𑌾𑌲𑌵𑌿𑌧𑌾𑌨𑌂 𑌨𑌾𑌮
𑌸𑌪𑍍𑌤𑌪𑌞𑍍𑌚𑌾𑌶𑌤𑍍𑌤𑌮𑌃 𑌪𑌟𑌲𑌃 ॥

கக்ஷாந்தரம் வரையில் மார்பின் மத்திய அகலம் 25 அங்குலமாகும். பின்பக்கத்தில் கக்ஷாந்தரத்தின் அகலம் 24 அங்குலமாகும். இங்கு கூறப்படாத அளவுகள் யாவும் உத்தமதசதாலத்தில் கூறப்பட்டிருப்பனபோலவேயாகும். எந்த எந்த தேவதைகளுக்கு லக்ஷணம் கூறப்பட்டதோ அந்த அந்த தேவதைகளின் ஆகிருதியானது முன் கூறப்பட்டிருப்பதுபோலவேயாகும். (46)

காசியபிய சில்பசாஸ்திரத்தில் அதம தசதாலம்
என்னும் ஐம்பத்தேழாவது
படலம் முற்றும்.

॥ 𑌅𑌥𑌾𑌷𑍍𑌟𑌪𑌞𑍍𑌚𑌾𑌶𑌤𑍍𑌤𑌮𑌃 𑌪𑌟𑌲𑌃 ॥

𑌉𑌤𑍍𑌤𑌮𑌨𑌵𑌤𑌾𑌲𑌮𑍍 ॥

𑌨𑌵𑌤𑌾𑌲𑍋𑌤𑍍𑌤𑌮𑌂 𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑍇 𑌶𑍃𑌣𑍁 𑌤𑍍𑌵𑌂 𑌷𑌡𑌾𑌨𑌨𑌃 ।
𑌵𑌸𑌵𑍋𑌽𑌷𑍍𑌟𑌮𑍂𑌰𑍍𑌤𑌯𑌶𑍍𑌚 𑌵𑌿𑌦𑍍𑌯𑍇𑌶𑌾 𑌲𑍋𑌕𑌪𑌾𑌲𑌕𑌾𑌃 ॥ ௧ ॥

𑌅𑌨𑍍𑌯𑌾𑌶𑍍𑌚 𑌦𑍇𑌵𑌤𑌾𑌶𑍍𑌚𑍈𑌵(𑌃 𑌕𑌾𑌰𑌯𑍇𑌤𑍍) 𑌨𑌵𑌤𑌾𑌲𑍋𑌤𑍍𑌤𑌮𑍇𑌨 𑌤𑍁 ।
𑌸𑌦𑍍𑌵𑌾𑌦𑌶𑌶𑌤𑌂 𑌸𑌾𑌂𑌶𑌂 𑌬𑍇𑌰𑌮𑌾𑌨𑍇 𑌵𑌿𑌭𑌾𑌜𑌿𑌤𑍇 ॥ ௨ ॥

𑌉𑌷𑍍𑌣𑍀𑌷𑍇𑌕𑌮𑌾𑌤𑍍𑌰𑌂 𑌤𑍁 𑌕𑍇𑌶𑌾𑌨𑍍𑌤𑌂 𑌤𑍁 𑌗𑍁𑌣𑌾𑌂𑌶𑌕𑌮𑍍 ।
𑌕𑍇𑌶𑌾𑌨𑍍𑌤𑌾𑌦𑌕𑍍𑌷𑌿𑌸𑍂𑌤𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌂 𑌵𑍇𑌦𑌮𑌾𑌤𑍍𑌰𑌂 𑌵𑌿𑌧𑍀𑌯𑌤𑍇 ॥ ௩ ॥

𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑌾𑌪𑍁𑌟𑌪𑌰𑍍𑌯𑌨𑍍𑌤𑌂 𑌹𑌨𑍍𑌵𑌨𑍍𑌤𑌂 𑌵𑍇𑌦𑌮𑌾𑌤𑍍𑌰𑌕𑌮𑍍 ।
𑌕𑌨𑍍𑌧𑌰𑌂 𑌤𑍁 𑌵𑍇𑌦𑌾𑌂𑌶𑌂 𑌭𑌾𑌨𑍍𑌵𑌂𑌶𑌂 𑌹𑍃𑌦𑌯𑌾𑌵𑌧𑌿 ॥ ௪ ॥

ஐம்பத்தெட்டாவது படலம்

உத்தமநவதாலம்.

இனி உத்தமநவதாலத்தைக் கூறுகிறேன். ஊன்றிக் கேட்ப்பாயாக. வஸுக்கள், அஷ்டமூர்த்திகள், வித்தியேசர்கள், லோகபாலகர்கள், மற்ற தேவதைகள், இவர்களை உத்தமநவதாலத்தாலே செய்யவேண்டும்

பேரத்தின் உயரத்தை 112 பாகங்களாகப் பங்கு செய்யவேண்டும். அவைகளில் :—

உஷ்ணீஷத்தின் உயரம் 1 அங்குலமாகும். கேசாந்தத்தின் உயரம் 3 அங்குலமாகும். கேசாந்தத்திலிருந்து அக்ஷிஸூத்ரம் வரையில் 4 அங்குலமாகும். அதிலிருந்து புடாந்தம் 4 அங்குலமாகும். அங்கிருந்து ஹந்வந்தம் 4 அங்குலமாகும். கழுத்தின் உயரம் 4 அங்குலமாகும். கழுத்திலிருந்து ஹிருதயாந்தம் 12 அங்குலமாகும்.

ஹ்ருதயாந்நாபிபர்யந்தம் ததா த்வாதசமாத்ரகம் |
நாப்யாதிமேட்ரமூலாந்தம் த்வாதசாத்ரம் விதீயதே || ௫ ||

ஊருதீர்கம் சதுர்விம்சத்யங்குலம் ஜாநுர்வேதாங்குலகம் |
ஜங்காதீர்கம் சதுர்விம்சம் வேதாம்சம் தத்
வர்த்தயேத் || ௬ ||

ஹிக்காயா பாஹுதீர்கம் ஸ்யாத் சதுர்விம்சதி
மாத்ரகம் |
மணிபந்தாந்தம் ப்ரகோஷ்டம் ஸ்யாத் அஷ்டாதசம்
ததாயதம் || ௭ ||

தலம் ஸாங்குல்யம் த்வாதசாங்குலம் மத்யமாங்குலிதைர்க்யம் ஷடங்குலமிதீரிதம் |
கநிஷ்டதசதாலோக்தமாநேந சேஷாணி கல்பயேத் || ௮ ||

ததாதவயவாநாம் து ப்ரத்யேகம் பரிகல்பயேத் |
ஏவம் ஸர்வத்ர ஸர்வேஷாம் லக்ஷணம் கதிதம் மயா || ௯ ||

இதி காமிகாக்யே உத்தரதந்த்ரே தாலலக்ஷணம் நாம
அஷ்டபஞ்சாசத்தம: படல: ஸமாப்த: ||

ஹிருதயத்திலிருந்து நாபிவரையில் 12 அங்குலமாகும். நாபியிலிருந்து மேட்ராந்தம் 12 அங்துலமாகும் துடையின் உயரம் 24 அங்துலமாகும். முழங்கால் உயரம் 4 அங்குலமாகும். கண்டைக்கால் உயரம் 24 அங்தல மாகும். பாதத்தின் உயரம் 4 அங்குலமாகும். ஆகக் கூடுதல் உயரம் 1+3+4+4+4+4+12+12+12+24+4+24+4=112 அங்குலமாகும். ஹிக்காஸூத்ரத்திற்குக்கீழே மேல்கையின் நீளம் 24 அங்குலமாகும். முன்கையின் நீளம் 18 அங்குலமாகும். உள்ளங்கையின் (விரலுள்பட) நீளம் 12 அங்குலமாகும். அதில் மத்தியமாங்குளியின் (நடுவிரலின்) நீளம் 6 அங்குலமாகும். மற்ற அங்கங்களின் அளவுகளை கநிஷ்டதசதாலத்திற்குக் கூறியுள்ளதைப்போலக் கொள்ள வேண்டும். ஆகையால் அங்கங்களுக்குக்கூறப்பட்டிருக்கும்

|| அத மத்யமநவதாலவிதி: ||

மத்யமநவதாலம் ||

மத்யமம் நவதாலம் து வக்ஷ்யே ஸங்க்ஷேபத: க்ரமாத் |
யக்ஷாப்ஸரோகணாஶ்சைவ அஸ்த்ரமூர்திமருத்கணா: || ௧ ||

மத்யமநவதாலேந கர்தவ்யா விஶேஷத: |
அஷ்டோத்தரஶதாம்ஶே து ப்ரதிமோச்சே விபாஜிதே || ௨ ||

உஷ்ணீஷம் சைகமாத்ரேண கேஶம் பாதோநகத்வயம் |
கேஶாந்தாந்நேத்ரஸூத்ராந்தம் அஷ்டாம்ஶம்
யவோநகம் || ௩ ||

புடாந்தம் சைவ தந்மாத்ரம் ஹந்வந்தம் ச ததா பவேத் |
பாதோநத்ர்யம்ஶம் து க்ரீவாமாநம் ததா ஹ்ருதம் || ௪ ||

அளவுகளை இவ்விதமே கொள்ளவேண்டும். (பேரங்களின்) லக்ஷணமானது முன்னமே கூறப்பட்டிருக்கிறது. (9)

காசியபீயசில்பசாஸ்திரத்தில் உத்தமநவதால லக்ஷணத்தைக்கூறும் ஐம்பத்தெட்டாவது படலம் முற்றும்.

ஐம்பத்தொன்பதாவது படலம்

மத்தியமநவதாலம்

இனி மத்தியம நவதாலத்தைச்சுருக்கமாகக் கூறுகிறேன். ஹே பிராமணோத்தமனே! யக்ஷர்கள், அப்ஸரஸ்ஸுகள், அஸ்திரமூர்த்திகள், மருத்துக்கள், இவர்களை மத்தியமநவதாலத்தாலே செய்யவேண்டும்.

பிரதிமையின் உயரத்தை 108 அம்சமாகப் பிரித்துக் கொள்ளவேண்டும். அவைகளில் உஷ்ணீஷம் 1 அம்சமாகும். கேசாந்தம் $2\frac{3}{4}$ அங்குலமாகும். கேசாந்தத்திலிருந்து நேத்திர ஸூத்ரம் வரையில் $3\frac{7}{8}$ அங்குலமாகும். புடாந்தமும், ஹன்வந்தமும் அதேபோல $3\frac{7}{8}$ அங்குலமாகும். கழுத்தின் உயரம் $3\frac{3}{4}$ அங்குலமாகும். கழுத்திலிருந்து

த்ரயோவிம்ஶா து ஸாம்ஶாம்ஶா ஹிக்காதோ ஹ்ருதயாவதி ।
நாப்யந்தம் சைவ தத்துல்யம் மேட்ரமூலாந்தகம் ததா ॥

பாதாதிககுணாம்ஶா ஸ்யாத் ஸ்ம்ஶாம்ஶா ஜாநுதீர்க்ககம் ।
ஜாநுநீவஸ்தம் தந்மாத்ரம் ஜங்கா ஜாநுஸமா பவேத் ॥

ஜாநுதத்துல்யா தத்பாதம் பாஹுர்த்தைர்க்யோருஸமோ பவேத் ।
ஸப்தாதஶாம்ஶா ப்ரகோஷ்டம் வ்யாங்குலஸ்ய து தீர்க்ககம் ॥

ஷடம்ஶம் அர்த்தயவோநம் து தலாதைர்க்யம் கரஸ்ய து ।
தத்ஸமம் மத்யமாங்குல்யம் ஶேஷா யுக்த்யா ப்ரகல்பயேத் ॥ ௮ ॥

இதி காஶ்யபஶில்பே மத்யமநவதாலவிதாநம் நாம
ஏகோநஷஷ்டிதம: படலஸ்ஸமாப்த: ॥

ஹ்ருதயாந்தம், நாபியந்தம், மேட்ராந்தம், இவைகள் ஒவ்வொன்றும் 11⅝ அங்குலமாகும் துடையின் உயரம் 23¼ அங்குலமாகும். முழங்காலின் உயரம் கழுத்தின் உயரத்தையொக்கும். (3¾ அங்குலமாகும்) கண்டைக்காலின் உயரம் துடையின் உயரத்தையொக்கும் (23¼ அங்குலமாகும்) பாதத்தின் உயரம் முழங்காலைப்போன்றதேயாம். (3¾ அங்குலமாகும்) ஆகக்கூடுதல் உயரம் $1+2\frac{3}{4}+3\frac{7}{8}+3\frac{7}{8}+3\frac{7}{8}+3\frac{3}{4}+11\frac{5}{8}+11\frac{5}{8}+11\frac{5}{8}+23\frac{1}{4}+3\frac{3}{4}+23\frac{1}{4}+3\frac{3}{4}=108$ அங்குலம். மேல்க்கையின் நீளம் துடையின் அளவேயாகும். (23¼ அங்குலமாகும்.) முன்கையின் நீளம் 17 அங்குலமாகும். உள்ளங்கையின் நீளம் 5⅞ அங்குலமாகும். நடுவிரலின் நீளம் உள்ளங்கையளவேயாகும். (5⅞ அங்குலமாகும்) மற்றவைகளை யுக்தியாக அமைத்துக்கொள்ள வேண்டும். (8)

காசியபசில்பசாஸ்திரத்தில் மத்தியமநவதாலத்தைக் கூறும்
ஐம்பத்தொன்பதாவது படலம் முற்றும்.

॥ 𑌅𑌥 𑌷𑌷𑍍𑌟𑌿𑌤𑌮𑌃 𑌪𑌟𑌲𑌃 ॥

𑌅𑌧𑌮𑌨𑌵𑌤𑌾𑌲𑌮𑍍 ॥

𑌅𑌧𑌮𑌨𑌵𑌤𑌾𑌲𑌸𑍍𑌯 𑌲𑌕𑍍𑌷𑌣𑌂 𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌤𑍇𑌽𑌧𑍁𑌨𑌾 ।
𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌧𑌰𑌗𑌣𑌾𑌶𑍍𑌚𑍈𑌵 𑌅𑌸𑍁𑌰𑌾𑌶𑍍𑌚 𑌤𑌥𑍈𑌵 𑌚 ॥ ௧ ॥

𑌪𑌿𑌤𑌰𑌸𑍍𑌸𑌿𑌦𑍍𑌧𑌗𑌨𑍍𑌧𑌰𑍍𑌵𑌾𑌃 𑌨𑌵𑌤𑌾𑌲𑌾𑌧𑌮𑍇𑌨 𑌤𑍁 (𑌅𑌧𑌮𑍇𑌨 𑌤𑍁) ।
𑌸𑌵𑍇𑌦𑌰𑌤𑌹𑌾𑌮𑌂 𑌤𑍁 𑌕𑌲𑌾𑌤𑍁𑌕𑍋𑌷𑍍𑌠𑍇 𑌵𑌿𑌭𑌾𑌜𑌿𑌤𑍇 ॥

𑌉𑌷𑍍𑌣𑍀𑌷𑌾𑌤𑍍𑌤𑍁 𑌤𑍍𑌰𑌿𑌪𑌾𑌦𑌂 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍𑌕𑍇𑌶𑌂 𑌸𑌾𑌰𑍍𑌧𑌤𑍍𑌰𑌿
(𑌦𑍍𑌵𑌿)𑌭𑌾𑌗𑌕𑌮𑍍 ।
𑌕𑍇𑌶𑌾𑌨𑍍𑌤𑌾𑌨𑍍𑌨𑍇𑌤𑍍𑌰𑌸𑍂𑌤𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌂 𑌪𑌾𑌦𑍋𑌨𑌚𑌤𑍁𑌰𑌂𑌶𑌕𑌮𑍍 ॥

𑌤𑌸𑍍𑌮𑌾𑌨𑍍𑌨𑍇𑌤𑍍𑌰𑌾𑌦𑌿 𑌹𑌨𑍁𑌕𑌾𑌨𑍍𑌤𑌂 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍𑌤𑌥𑍈𑌵 𑌹𑌿𑌤𑌮𑍍 ।
𑌹𑌿𑌕𑍍𑌕𑌾𑌨𑍍𑌤𑌾(𑌸𑌾𑌰𑍍𑌧𑌂 𑌤𑍁 𑌤𑍍𑌰𑍍𑌯)𑌂𑌶𑌂 𑌗𑍍𑌰𑍀𑌵𑌾𑌯𑌾𑌂
𑌵𑌿𑌸𑍍𑌤𑍃𑌹𑍀𑌯𑌤𑍇 ॥ ௨ ॥

𑌸𑌪𑌾𑌦𑌂 𑌸𑌾𑌰𑍍𑌧𑌹𑌾𑌰𑌂 𑌤𑍁 𑌹𑌿𑌕𑍍𑌕𑌾𑌦𑍀𑌵𑌾𑌹𑍁𑌪𑌾𑌦𑌾𑌨𑍍𑌤𑌕𑌮𑍍 ।

அறுபதாவது படலம்

அதமநவதாலம்

இப்பொழுது, அதம நவதால லக்ஷணத்தைக் கூறுகிறேன். வித்யாதரகணங்கள், அஸுரர்கள், பித்ருக்கள், ஸித்தர்கள், கந்தர்வர்கள், இவர்களை அதம நவதாலத்திலே செய்யவேண்டும்.

அதமநவதாலத்தின் உயரத்தை 101 பாகங்களாகக் கொள்ளவேண்டும். அந்த பாகங்களில் உஷ்ணீஷத்தின் உயரம் 3/4 அங்குலமாகும். கேசாந்தம் 3½ (2½) அங்குலமாகும். கேசாந்தத்திலிருந்து நேத்திரஸூத்திராந்தம் 3¾ அங்குலமாகும். புடாந்தம் 3¾ அங்குலமாகும். ஹந்வந்தம் 3¾ அங்குலமாகும். கழுத்தின் உயரம் 4 (3½) அங்குல

தஸ்மாஹ்நாஹ்யஞ்ஜ ம் தஸ்ய ச ஜமுத் ரோபரூாம் தரம் ததா || ரு ||

ஜா பாதீவம் (த்வ அரவிம்ஸத் ஜ ஜ சவ)விதீயதே ।
தீர்வாயதம் தஜும் ஜாநு ஜம் வொாவஷ்ஜ பராயதா || கூ ||

பாஹுதீவம் தொர்ஷம் வ ஜகொஷம்
ஷொடஸாம்மூமுழ ।

தருதீவம் து ஹஸ்தாம்ஸம் தக்ஷம் உயூஜாம்ஸதமுரீ: |
சேஷம் யுக்த்யா து கதேவ்யம் ஸவாரம்மம் து விதீயதே ||

இதி காஸ்யபஸில்பே அஷ்டநவதாலக்ஷணம் நாம
ஷஷ்டிதம: படலஸ்ஸமாப்த: ||

மாகும். கழுத்திலிருந்து ஹ்ருதயாந்தம் $11\frac{1}{4}$ அங்குலமாகும். நாபியந்தம் $11\frac{1}{4}$ அங்குலமாகும். மேட்ராந்தம் $11\frac{1}{4}$ அங்குல மாகும். துடையின் நீளம் (22 அங்குலம்) விதிக்கப் பட்டுள்ளது. முழங்கால் பாதம் இவைகளின் உயரம் கழுத்தின் உயரமேயாகும். 4 ($3\frac{1}{2}$) அங்குலமாகும். மேல்க் கையின் நீளம் 22 அங்குலமாகும். முன்கையின் நீளம் 16 அங்குலமாகும். உள்ளங்கையின் நீளம் 5 அங்குலமாகும். நடுவிரலின் நீளம் 5 அங்குலமாகும். மற்ற எல்லா அங்கங் களையும் யுக்தியாகக்கல்பித்துக்கொள்ள வேண்டும். (7)

காசியபீயசில்பசாஸ்திரத்தில் அஷ்டநவதாலமென்னும்
அறுபதாவது படலம் முற்றும்.

|| அதைகஷஷ்டிதம: படல: ||

—o—

அஷ்டதாலலக்ஷணம் ||

அத வக்ஷ்யே விஶேஷேண அஷ்டதாலவிதிம் பரம் |
ஶதாம்ஶம் உச்ச்ர(தச்ச்ர)பிம்போச்சம் உஷ்ணீஷம் து ஶிவாம்ஶகம் || 1 ||

ஸார்தத்வ்யம்ஶம் து கேஶாந்தம் கேஶாந்தாத்தனுஹீனகம் |
*பாணேனாஷ்டபதாம்ஶம் ஸ்யாத் தத்த்ரிதா து விபாஜிதே ||

ஶிவாம்ஶம் அக்ஷிஸூத்ராந்தம் புடாந்தம் சைவ தத்ஸமம் |
புடாத்தன்வந்தகம் ஶேஷம் ஸார்தத்ர்யம்ஶம் களோதயம் ||

ஹிக்காதிஹ்ருதயாந்தம் து ருத்ராம்ஶம் த்ரிபாதகம் |
நாப்யந்தம் சைவ தத்துல்யம் மேட்ராந்தகம் ததா ||

அறுபத்தொன்றாவது படலம்

அஷ்டதாலலக்ஷணம்

இனி அஷ்டதால விதியை விசேஷித்துக் கூறுகிறேன். அஷ்டதாலத்தின் உயரம் 100 அங்குலமாகும். (இதுவே மனித பிம்பத்தின் உயரமாகும்.) இந்த அளவில் உஷ்ணீஷம் 1 அங்குலமாகும். கேசாந்தம் $2\frac{1}{2}$ அங்குலமாகும். கேசாந்தத்திலிருந்து முகவாய்க்கட்டை வரையில் $9\frac{3}{4}$, ($10\frac{3}{4}$) அங்குலமாகும். இந்த $9\frac{3}{4}$, ($10\frac{3}{4}$) அங்குலத்தை 3 பாகங்களாகச் செய்து, அவைகளில் 1 பாகம் நேத்ராந்தம், 1 பாகம் புடாந்தம், பாக்கியுள்ள 1 பாகம் ஹன்வந்தம், எனக் கொள்ளவேண்டும். கழுத்தின் உயரம் $3\frac{1}{2}$ அங்குலமாகும். கழுத்திலிருந்து ஹிருதயம் வரையில் $10\frac{3}{4}$ அங்குலமாகும். நாபிவரையில் $10\frac{3}{4}$ அங்குலமாகும். மேட்ராந்தம் $10\frac{3}{4}$

---

*பாணைகாதஶாம்ஶம் இதி பாடே ஸார்தத்விதி பாதி |

ஸார்த்தைகவிம்ஶமாத்ரம் து ஊருதீர்க்யம் ப்ரகீர்த்திதம் |
ஜாநுகண்டஸமம் துங்கம் ஜங்கா சோருஸமா பவேத் ||

ஜாநுதுல்யம் பதோச்ச்ரயம் பாஹுஸ்ஸார்த்தைகவிம்ஶாயத: |
ப்ரகோஷ்டம் து ஷோடஶாங்குலம் ஸார்த்தபஞ்சதலம் ததைவ
ததம் || ௬ ||

தத்ஸமம் மத்யமாங்குல்யம் ஶேஷம் ப்ராகுக்தவத்ததம் |
அநுக்தம் து யத்ஸர்வம் கந்யஸதஶதாலவத் || ௭ ||

இதி காஶ்யபஶில்பே அஷ்டதாலவிதாநம் நாம
ஏகஷஷ்டிதம: படலஸ்ஸமாப்த: ||

அங்குலமாகும். துடையின் உயரம் 21½ அங்குலமாகும். முழங்காலின் உயரம், கழுத்தினளவுக்கு ஸம அளவு (3½ அங்குலம்) ஆகும். கண்டைக்காலின் உயரம் துடையின் உயரத்திற்கு ஸமம் (21½ அங்குலம்) ஆகும். பாதத்தின் உயரம் முழங்காலினளவாகும் (3½ அங்குலமாகும்) ஆக உச்சி முதல் பாதம் வரையில் உயரம், 1, 2½, 10¾, 3½, 10¾, 10¾, 10¾, 21½, 3½, 21½, 3½ = 100 அங்குலமாம்.

பாஹுவின் (பின்கையின்) உயரம் 21½ அங்குலமாகும். முன்கையின் உயரம் 16 அங்குலமாகும். உள்ளங்கையின் நீளம் 5½ அங்குலமாகும் நடுவிரலின் நீளம் 5½ அங்குலமாகும். மற்ற அளவுகளை முன்கூறியுள்ளபடியே கொள்ள வேண்டும். இங்கு கூறப்படாதவைகள் எல்லாவற்றையும் அதமதசதாலத்தில் கூறியபடியே கொள்ளவேண்டும். (7)

காசியபீய சில்பசாஸ்த்ரத்தில் அஷ்டதாலத்தைக்கூறும்
அறுபத்தோன்றுவது படலம் முற்றும்.

|| अथ द्विषष्टितमः पटलः ||

सप्तताललक्षणम् ||

अथ वक्ष्ये विशेषेण सप्ततालविधिं परम् ।
पिशाचबिम्बकोत्सेधं साष्टाशीत्यङ्गुलं भवेत् ||

उष्णीषमर्धमात्रं तु केशान्तं शशिमात्रतः ।
सार्धद्वयं तु नेत्रान्तं सार्धत्रयं
पुटान्तकम् || २ ||

हन्वन्तं च तत्समं वेदांशं च गलोदयम् ।
स्तनान्तं सप्तमात्रं तु रुद्रांशं नाभिसीमकम् ||

तथैव मेढ्रान्तं विंशांशं चोरु
दीर्घकम् ।
जानून्नतं द्विमात्रेण जङ्घा चोरु समा भवेत् || ४ ||

पादोच्चं द्विमात्रेण दशांशं तु तदायतं
(आयतम्) ।

அறுபத்திரண்டாவது படலம்

ஸப்ததால லக்ஷணம்

இனி ஸப்ததால விதியை விசேஷித்துக்கூறுகிறேன். பைசாசபிம்பங்களின் உயரம் 88 அங்குலமாகும். அவைகளில், உஷ்ணீஷம் ½ அங்குலமாகும். கேசாந்தம் 1 அங்குலமாகும். நேத்திராந்தம் 2½ அங்குலமாகும். புடாந்தம் 3½ அங்குலமாகும் ஹநுவந்தம் 3½ அங்குலமாகும். கழுத்து 4 அங்குலமாகும். ஸ்தநாந்தம் 7 அங்குலமாகும். நாபியந்தம் 11 அங்குலமாகும். மேட்ராந்தம் 11 அங்குலமாகும். துடையின் உயரம் 20 அங்குலமாகும். முழங்கால் 2 அங்குலமாகும். கண்டைக்கால் 20 அங்குலமாகும். பாதம் 2 அங்குலமாகும். ஆக உச்சிமுதல் பாதம் வரையில்

[illegible] பாஹூ: ப்ரகோஷ்டாந்தம் த்ரிபஞ்சகம் ||

தலாயாமம் து பஞ்சாம்ஶம் வேதாம்ஶம் தஸ்ய விஸ்த்ருதம் |
தலாயாமஸ்ய ஸத்ருஶம் மத்யமாங்குலிதீர்க்கம் || ௬ ||

*ஶேஷம் ப்ராக்வதேவ து ஹ்ராஸம் கார்யமு
சிதக்ரியம் |
ஸப்ததாலம் ஸமாக்யாதம் ஶேஷம் ப்ராகிவ யோஜிதம் ||எ||

இதி காஶ்யபஶில்பே ஸப்ததாலலக்ஷணம் நாம
த்விஷஷ்டிதம: படல: ||

கூடுதல் ½, *1, 2½, 3½ 3½, 4, 7, 11, 11, 20, 2, 20, 2 = 88 அங்குலமாகும்.

பாதத்தின் நீளம் 14 அங்குலமாகும். பாஹுதீர்கம் (பின்கையின் நீளம்) 20 அங்குலமாகும் முன்கையின் நீளம் 15 அங்குலமாகும். கைத்தலத்தின் நீளம் 5 அங்குலமாகும். அதன் அகலம் 4 அங்குலமாகும். நடுவிரலின் நீளம் 5 அங்குலமாகும். மற்றவைகளை முன் கூறியுள்ள முறையில் உசிதம்போல் குறைத்துக் கொள்ளவேண்டும். இவ்விதமாக ஸப்ததால லக்ஷணம் கூறப்பட்டிருக்கிறது. இதில் கூறப்படாதவைகளை முன்பு கூறியுள்ளபடியே கொள்ளவேண்டும். (7)

காசியபீய சில்பசாஸ்திரத்தில் ஸப்ததாலலக்ஷணமென்னும்
அறுபத்திரண்டாவது படலம் முற்றும்.

---

*ஶேஷம் ப்ராக்க்ரமேணைவ ஹ்ராஸம் கார்யம் யதோசிதம் | இதி பாடே ஸாத்வீதி பாதி |

|| 𑌅𑌥 𑌤𑍍𑌰𑌿𑌷𑌷𑍍𑌟𑌿𑌤𑌮𑌃 𑌪𑌟𑌲𑌃 ||

𑌮𑍂𑌰𑍍𑌤𑌿𑌸𑍍𑌥𑌾𑌪𑌨 𑌵𑌿𑌧𑌿𑌃 ||

𑌅𑌥 𑌶𑍈𑌵𑌾𑌨𑍍𑌤𑌰𑌂 𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑍇 𑌵𑌿𑌷𑍍𑌣𑍋𑌰𑍍𑌮𑍂𑌰𑍍𑌤𑍇𑌸𑍍𑌤𑍁 𑌸𑍍𑌥𑌾𑌪𑌨𑍇 𑌵𑌿𑌧𑌿𑌃 |
𑌨𑌗𑌰𑍇 𑌪𑌶𑍍𑌚𑌿𑌮𑍇 𑌵𑌾𑌪𑌿 𑌮𑌧𑍍𑌯𑍇 𑌵𑌾 𑌉𑌤𑍍𑌤𑌮𑍋𑌤𑍍𑌤𑌮𑌮𑍍 || ௧ ||

𑌮𑌤𑍍𑌸𑍍𑌯𑌾𑌦𑌿𑌕𑌲𑍍𑌕𑍍𑌯𑌨𑍍𑌤𑌕𑌂 𑌵𑌾 𑌅𑌵𑌤𑌾𑌰𑌂 𑌤𑍁 𑌶𑌿𑌲𑍍𑌪𑌿(𑌶𑌂𑌭𑌿)𑌤𑌮𑍍 |
𑌤𑌤𑍍𑌸𑍍𑌥𑌾𑌨𑍇 𑌵𑌾𑌸𑍍𑌤𑍁𑌨𑍇𑌵𑌾𑌂𑌸𑍍𑌤𑍁 𑌸𑍍𑌥𑌾𑌪𑌯𑍇𑌤𑍍 𑌶𑌿𑌲𑍍𑌪𑌿𑌕𑍋𑌤𑍍𑌤𑌮𑌃 ||

𑌅𑌗𑍍𑌰𑌂 𑌤𑍁 𑌵𑌿𑌷𑍍𑌣𑍋𑌰𑌗𑍍𑌰𑌤𑌃 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌕𑍁𑌞𑍍𑌜𑌂(𑌕𑍁𑌞𑍍𑌜𑌨𑍇𑌯)𑌅𑌥𑌵𑌾𑌪𑌿 𑌵𑌾 |
𑌅𑌞𑍍𑌜𑌲𑌿𑌹𑌸𑍍𑌤𑌸𑌂𑌯𑍁𑌕𑍍𑌤𑌂 𑌪𑌕𑍍𑌷𑌿𑌰𑌾𑌜𑌂 𑌅𑌗𑍍𑌰𑌤𑌸𑍍𑌤𑌥𑌾 || ௨ ||

𑌶𑍂𑌰𑌮𑍇𑌵𑌾(𑌣𑍍𑌯𑌾𑌕𑍇) 𑌵𑌾𑌪𑌿 𑌤𑌟𑌾𑌕𑍇 𑌪𑌣𑍍𑌯𑌵𑍀𑌥𑌿𑌕𑍇 |

அறுபத்திமூன்றுவது படலம்

மூர்த்திகளை ஸ்தாபிக்கும் விதி

சைவமூர்த்தியை ஸ்தாபித்தபிறகு, விஷ்ணுமூர்த்தியை ஸ்தாபிக்கவேண்டிய விதியைக் கூறுகிறேன். நகரமாக இருந்தால், அதில் மேற்குதிக்கு அல்லது மத்திய பாகத்தில் (விஷ்ணு மூர்த்தியை ஸ்தாபிப்பது) உத்தமமாகும். மத்ஸ்ய மூர்த்தி முதல் கல்கி மூர்த்தி வரையிலுள்ள மூர்த்திகளை, சில்பியானவன் அவைகளுக்குரிய ஸ்தாநங்களில் ஸ்தாபிக்க வேண்டும். (2)

விஷ்ணுவின் முன்பக்கத்தில் கருடனையாவது விஷ்ணு குஞ்சத்தையாவது (ஆஞ்சநேயரையாவது) ஸ்தாபிக்க வேண்டும். முன்பக்கத்தில் எதிரிலிருக்கும் கருடமூர்த்தி யானது இரண்டு கைகளையும் கூப்பி அஞ்சலிபந்தம் செய்து கொண்டு இருக்கவேண்டும். (3)

ம்ராமெ வா வாஸ்தூஉயெ்ய வா ஹவெக் வ௰வ-ீ
உகூரூ⁻உ-வெ || ச ||

*வாரு-ணெ வெஸ்யூஹ௰ஸிம் அ யஉஸிரு‍ம் த-ஸ்ரூாவயெக் ।
விஸா,நா(அா) ம்ள வஷெ ஸ்ரூாவகு நெஜு-ீதிம் வாயு-
உஅ-ீயெக் || ரு ||

ஈய வகெூ்ய விஸெஷெண ஸகஸூரூா,நஉ-த்தஉழ ।
ஸாஂகஸெ நூ,த்தஉ௰திமீஂ த- ரூஸெயூாஂ வூஷவாஹநழ ||

உஉாஸூடியு-தஂ விவு நெஜு-ீத்யூாஂ வஸிக்ஷூயெக் ।
கஂகாஸ-ஂ வாயு-தி ஹாமெ ஹிகூாடிநஂ ஜயாஞிகெ || எ ||

விஷ்ணுமூர்த்தியை, ஆலயம், அரண்யம், குளம் புண்ய தீர்த்தம், இவைகளில் ஸ்தாபிக்கவேண்டும்.

கிராமமாக இருந்தால் கோவிலில் ஸ்தாபிக்கவேண்டும். அது கிழக்கு முகம் அல்லது வடக்கு முகமாக இருக்க வேண்டும். (4)

விஷ்ணு மூர்த்தியை, மேற்கு திக்கு, தெற்கு திக்கு, இவைகளில் ஸ்தாபிக்கவேண்டும். ஈசானியதிக்கு, அக்கினி திக்கு, நைர்ருதிதிக்கு, வாயுதிக்கு இவைகளிலும் ஸ்தாபித்து பூஜை செய்யலாம். (5)

இனி (சிவ மூர்த்திகளில்) ஸகல மூர்த்திகளை ஸ்தாபிக்க வேண்டிய விதியைக் கூறுகிறேன்.

ஈசான திக்கில் நடராஜமூர்த்தியையும், அக்கினி திக்கில் விருஷவாஹன மூர்த்தியையும், நைர்ருதி திக்கில் ஸோமாஸ்கந்தமூர்த்தியையும், வாயு திக்கில் கங்காளமூர்த்தியையும்,

---

*வ.பா-ணெ விஷ்ணு-உ௰திமீஂ அ யாமெகு ஸெமெரு த-
ஸ்ரூாவயெக் ।
வெஸாநெ வாவயூயாமெயெ வாயஎ வா நெஜு-ீதெ
அ-ீயெக் ||

ஐதி ஸெயிதஃ வாடஃ ஈயஸிகஸஂமஜூதெதி ஹாதி ।

ஸுகாஸநம் து ஸத்யாம்சே விதயாம்சே த்ரிபுராந்தகம் |
ஸுக்ரீவே ஹரிஹரார்த்தம் ஸ்யாத் கந்தர்வே சந்த்ரசேகரம் ||

சேஷாம்சம் (சேசே சண்டாநுக்ரஹம் ச) முக்யே (யாம்சே) காலாரிமூர்த்திகம் |
உதிதே சார்த்தநாரீசம் பூர்வே கல்யாணஸுந்தரம் || ௯ ||

க்ஷேத்ரபாலம் து பர்ஜந்யே யாம்யே வா தக்ஷிணேச்வரம் |
லிங்கோத்பவம் வாருணே து ஸௌம்யே து கஜஹாரிணம் ||

ஜத்யாஸ்வாம்சம் (ஜத்யவசாம்சே) ப்ராக் ச ஞாநாதிஸ்யாத் (ப்ராக்சேத்க்ஞாநாதிஷு) கல்பயேத் |
உந்மத்தே (யே) து ஸம்வீக்ஷ்ய (வேச்ய) ஸகலம் ஸ்தாபநம் சரேத் || ௰ ||

ப்ராகாரேஷ்வஷ்டதிக்ஷு சதுர்திக்ஷு கல்பயேத் |

ஜய திக்கில் பிக்ஷாடநமூர்த்தியையும், ஸத்தியாம்சத்தில் ஸுகாஸநமூர்த்தியையும், விதியம்சத்தில் திரிபுராந்தக மூர்த்தியையும், ஸுக்ரீவாம்சத்தில் ஹரிஹரார்த்த மூர்த்தியையும், கந்தர்வாம்சத்தில் சந்திரசேகர மூர்த்தியையும், சேஷாம்சத்தில் (சண்டேசாநுக்கிரஹ மூர்த்தியையும்) முக்கியாம்சத்தில் காலாரி மூர்த்தியையும், உதிதிக்கில் (கிழக்கில்) அர்த்தநாரீஸ்வரமூர்த்தியையும், கிழக்கில் கல்யாணஸுந்தரமூர்த்தியையும், பர்ஜந்ய திக்கில் க்ஷேத்திர பாலகரையும், தெற்கில் தக்ஷிணாமூர்த்தியையும், மேற்கு திக்கில் லிங்கோத்பவ மூர்த்தியையும், வடக்கு திக்கில் கஜ ஸம்ஹார மூர்த்தியையும், ஆலயமத்தியில் கூறப்பட்ட இடங்களில் ஸ்தாபிக்கவேண்டும். மூலஸ்தானத்தை மத்திய மாகத் தெரிந்துகொண்டு (அல்லது மூலஸ்தாநமூர்த்தியை ஸ்தாபித்துவிட்டு) ஸகல மூர்த்திகளை ஸ்தாபிக்கவேண்டும்.

பிராகாரத்தின் 8 திக்குகளிலும், 4 திக்குகளிலும்,

ப்ராகாராணாம் த்ரி(த்ரி)மத்₄யே ச தீ₃ர்க₄மத்₄யே ச வேஶ்மநாம் ||

ஸ்வயம் வா ஹர்ம்யஸ்ய மத்₄யே து த்₃வ்யேகபௌ₄மகம் ।

ப்ராஸாத₃மேகம் வா ஸர்வதோ₃வா ஆலயகம் த்₃விஜ || ௧௩ ||

இதி காஶ்யபஶில்பே ஸகலமூர்திஸ்தா₂பநவிதி₄ர்நாம

த்ரிஷஷ்டிதம: படலஸ்ஸமாப்த: ||

கோபுரவாயில் முதலியவைகளை அழகாகக் கல்பிக்க வேண்டும். பிராகாரத்தின் ஆதி, மத்தியம், அந்தம், இவைகளிலும், நீளமாக இருக்கும் பிராகாரத்தின் மத்தியிலும் (பரிவாரதேவதைகளுக்கு) ஸ்தாநங்களை (சிறிய ஆலயங்களை) கல்பித்துக்கொள்ளவேண்டும்.

அல்லது தேவாலயத்தின் மத்தியில்... ... ...
... ...
... ...
... ... (13)

காசியபிய சில்பசாஸ்திரத்தில் ஸகல மூர்த்தி ஸ்தாபனவிதி என்னும்
அறுபத்திமூன்ருவது படலம் முற்றும்.

॥ 𑌅𑌥 𑌚𑌤𑍁𑌃𑌷𑌷𑍍𑌟𑌿𑌤𑌮𑌃 𑌪𑌟𑌲𑌃 ॥

𑌸𑍁𑌖𑌾𑌸𑌨𑌮𑍂𑌰𑍍𑌤𑌿𑌲𑌕𑍍𑌷𑌣𑌮𑍍 ॥

𑌅𑌥 𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑍇 𑌵𑌿𑌶𑍇𑌷𑍇𑌣 𑌸𑍁𑌖𑌾𑌸𑌨𑌵𑌿𑌧𑌿𑌂 𑌪𑌰𑌮𑍍 ।
𑌆𑌸𑌨𑌂 𑌰𑌾𑌜𑌸𑌂 𑌭𑌾𑌵𑌂 𑌭𑌦𑍍𑌰𑌪𑍀𑌠𑍋𑌕𑍍𑌤𑌮𑌾𑌸𑌨𑌮𑍍 ॥ ௧ ॥

𑌵𑌾𑌮𑌾𑌙𑍍𑌘𑍍𑌰𑌿𑌂 𑌶𑌾𑌯𑌯𑍇𑌤𑍍 𑌪𑍀𑌠𑍇 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌾𑌙𑍍𑌘𑍍𑌰𑌿𑌂 𑌤𑍁 𑌲𑌮𑍍𑌬𑌯𑍇𑌤𑍍 ।
𑌊𑌰𑍍𑌧𑍍𑌵𑌹𑌾𑌰𑍋(𑌕𑌾𑌯𑍋)𑌵𑌶𑌿𑌷𑍍𑌟𑌾𑌰𑍍𑌧 𑌸𑌾𑌰𑍍𑌧𑌵𑍇𑌦𑌾𑌂𑌶𑌮𑌾𑌤𑍍𑌰𑌿𑌕𑌮𑍍 ॥ ௨ ॥

𑌸𑍍𑌥𑌿𑌤𑌿𑌕𑌾𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌹𑍇𑌤𑌸𑍍 𑌸𑍁𑌖𑌾𑌸𑍀𑌨𑍋𑌰𑍍𑌧𑍍𑌵𑍇 𑌵𑌿𑌶𑍇𑌷𑌤𑌃 ।
𑌸𑍁𑌖𑌾𑌸𑌨𑍇(𑌨𑌾𑌸𑌾) 𑌪𑌞𑍍𑌚𑌵𑌿𑌂𑌶𑌾𑌂𑌶𑌂 𑌜𑌾𑌨𑍍𑌵𑌨𑍍𑌤𑌬𑌾𑌹𑍍𑌯𑌾𑌵𑌸𑌾𑌨𑌕𑌮𑍍 ॥ ௩ ॥

𑌜𑌾𑌨𑍁𑌮𑌧𑍍𑌯𑌂 𑌪𑌞𑍍𑌚𑌵𑌿𑌂𑌶𑌾𑌂𑌶𑌂 *𑌜𑌾𑌨𑍍𑌤𑌬𑌾𑌹𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌬𑌾𑌹𑍍𑌯𑌕𑌮𑍍 ।

அறுபத்திநான்காவது படலம்.

ஸுகாஸநமூர்த்தி லக்ஷணம்.

இனி ஸுகாஸநமூர்த்தியின் லக்ஷணத்தை விசேஷித்துக் கூறுகிறேன். இந்த மூர்த்தியானது, உட்கார்ந்த வடிவமுடையதாகும். ராஜஸ ஸ்வபாவமுடையதாகும். பத்திர பீடத்திற்குக் கூறியதே ஆஸநமாகும். இடது காலை பீடத்தின்மீது படுக்கையாக வைத்தும், வலது காலை தொங்கவிட்டும் இருக்கவேண்டும். ஊர்த்துவகாயமானது 4½ அங்குலம் கூடுதலாக இருப்பதாகும். இந்த 4½ அங்குல அளவானது, உட்கார்ந்த வடிவமான மூர்த்தியின் ஸ்பிக் பிண்டத்தின் (பிருஷ்ட பாகத்தின்) விசேஷ மாநமாகும்.

ஆஸநத்திலிருந்து பூர்வகேசாந்தம், முழங்கால்களின் வெளிப்பக்கம் வரையிலுள்ள ஒதுக்கம், இரு முழங்கால்

---

*𑌜𑌾𑌨𑍋𑌰𑍍𑌬𑌾𑌹𑍍𑌯𑌾𑌨𑍍𑌤𑌮𑍀𑌧𑍍𑌵𑌾𑌸𑍍𑌯𑌕𑌮𑍍 । 𑌇𑌤𑌿 𑌕𑍋𑌶𑌾𑌨𑍍𑌤𑌰𑌃

परहस्तमणिबन्धमध्ययोस्तु समं भवेत् ॥ ४ ॥

शृणुष्व नवसूत्राणि(त्राणि) पूर्वसूत्रं यदा(त्रं द्वि३) प्रोच्यते ।
मौलिमध्यं(ध्यात्) तु नासाग्रं स्तनान्ते नाभिमध्यमे ॥ ५ ॥

वामाङ्घ्रिगुल्फमध्ये तु ब्रह्मसूत्रं प्रलम्बयेत् ।
सूत्राद्दक्षिणजान्वन्तमेकत्रिंशन्मात्रं भवेत् ॥ ६ ॥

अथवा त्रिंशन्मात्रं स्यादेकोनत्रिंशतं तु वा ।
सूत्रात्तद्दक्षिणनखाग्रा(न्ता)न्तं द्वादशमात्रकम् ॥ ७ ॥

त्रयोदशमात्रं वाथ दशमात्रकमेव वा ।

களின் கோடி வரையிலுள்ள ஒதுக்கம். முழங்காலின் உச்சியிலிருந்து பூர்வகேசாந்தம், பரஹஸ்தங்களின் மணிக்கட்டுகளின் மத்தியிலிருந்து நடுவிலுள்ள ஒதுக்கம், இவைகள், ஸம அளவாக இருக்கவேண்டும். (4)

ஆஸநம் வரையில் தொங்கும் 9 ஸூத்திரங்கள் கூறப்பட்டிருக்கின்றன. அவைகளில் பூர்வஸூத்ரத்தைக் கூறுகிறேன். ஹே அந்தணனே! கேட்ப்பாயாக.

மௌளி மத்தியிலிருந்து, நாஸாக்கிரம், ஸ்தநங்களின் மத்தியம், (ஹிருதயமத்தியம்) நாபிமத்தியம், இடதுகணுக் கால் முண்டின் மத்தியம், இந்த இடங்களில் மத்திய ஸூத்திரத்தைத் தொங்கவிடவேண்டும். (5½)

மத்திய ஸூத்திரத்திலிருந்து வலது ஜாநுவந்தமாக ஒதுக்கம் 31, 30 அல்லது 29 அங்குலமிருப்பதாகும். மத்திய ஸூத்திரத்திலிருந்து அதன் (வலது காலின்) நளகாந்தம் வரையில் ஒதுக்கம் 12 அங்குலமாகும், 13 அல்லது 10

பீடாந்தாத் (மத்ய) ஸூத்ராச்ச குக்ஷிபார்ச்வாந்த நிர்கமம்
த்வித்ர்யங்குலம் ததா வா || ௮ ||

தஸ்மாத் ஸூத்ராதபயஸ்ய (அபயஸ்ய) ஹஸ்தஸ்ய மத்யரேகாவஸாநகம் |
அந்தரம் சதுர்தசாங்குலம் ப்ரோக்தம் ததா விசேஷத: || ௯ ||

*பஞ்சதசாங்குலம் வா ... ... நாப்யந்தம் பவேத் |
தஸ்மாத் ஸூத்ராத் கடகே ஹஸ்தே மணிபந்தஸ்ய மத்யமம் || ௰ ||

அங்குலமுமிருப்பதாகும். பீடத்திலிருந்து (பீடத்திலுள்ள மத்திய ஸூத்திரத்திலிருந்து) அந்த (இடது) குக்ஷிகாலின் ஒதுக்கம் 2, அல்லது 3 அங்குலமாகும் (8)

மத்திய ஸூத்திரத்திலிருந்து அந்தக்கையின் (அபய ஹஸ்தத்தின் மத்தியரேகைவரையில்) ஒதுக்கம் 14 அங்குல மாகும். (9)

* 15 அங்குல ஒதுக்கமுடைய அங்குலாக்கிரமானது, தொப்புள் வரையில் இருக்கவேண்டும் (9½)

ஸூத்திரத்திலிருந்து கடகஹஸ்தத்தின் (வரதஹஸ்தத்

---

*ஸரஸ்வதீமஹாலயபுஸ்தகாதர்சே, 9 ச்லோகாநந்தரம் ஸார்த்தச்லோகாத்மகோऽயமதிகபாடோ த்ருச்யதே | தத்ர அ
"பஞ்சதசாங்குலம் வா தக்ஷகூர்பரம் நாபிஸீமகம் |"
இதி வ்யத்யாஸேநாப்யர்த்தோ நீயதே ஸாதி |

* ஸரஸ்வதி மஹால் புத்தகத்தில், 9வது சுலோகத்திற்கு மேலே 1½ சுலோகம் அதிகமாகக் காணப்படுகிறது. அதில் முதல் ½ சுலோகத்தை, (வரதஹஸ்ததல மத்தியத்தின் ஒதுக்கம் 14 அங்குலம்) அல்லது 15 அங்குலமாகும் அந்ததல மத்தியமும், வலது முழங்கையும், நாபிஸமமாக இருக்கவேண்டும் என்று பொருள்படும்படித் திருத்தியமைத்துக்கொள்ள வேண்டுமென்று தோன்றுகிறது.

வஹஸ்தாம் ப்ரகோஷ்டாந்தம் விதஸ்திக |
மத்யாங்குலி மணிபந்தாந்தம் தீர்க்கம் வித்யாத்
து வா || ௬௧ ||

கடகம் ஸிம்ஹகர்ணம் வா தஸ்ய ஹஸ்தம் ப்ரகீர்த்திதம் |
தர்ஜந்யாதி கநிஷ்டாந்தம் ததங்குள்யஸ்து வக்ரமா: ||௬௨||

அங்குஷ்டம் வக்ரம் தஸ்யாந்தம் ஏவம் ஸ்யாத் கடகாக்ருதி: |
மத்யமா மத்யதலாந்தம் து அர்த்தார்த்தம் வக்ராநாமிகா || ௬௩ ||

[மத்யா ஹஸ்தா தலாந்தம் து அர்த்த ஹஸ்தா வக்ராநாமிகா ||]

*வக்ரம் சேஷாங்குள்யம் ப்ராக்வத் ஸிம்ஹகர்ணமிதம் வரம் |

தின்) மணிக்கட்டு நடுவரையில் ஓதுக்கம் 15 அங்குல மாகும். (10½)

துடையிலிருந்து (இடது) மணிக்கட்டுவரையில் ஓதுக்கம் 2 அல்லது 3 $(2\times3=6)$ அங்குலங்களாகும். அந்த (இடது)கையானது, கடகஹஸ்தம், அல்லது ஸிம்ஹகர்ண மாக இருக்கவேண்டும் என்று விதிக்கப்பட்டிருக்கிறது.

சுட்டுவிரல் முதல் சிறுவிரல் வரையில், விரல்கள் யாவும் வளைந்திருக்கவேண்டும். பெருவிரல் சிறிது வளைந் திருக்கவேண்டும். இவ்விதமாக இருப்பதற்கு "கடக ஹஸ்தம்" என்று பெயர். (12½)

நடுவிரலானது, உள்ளங்கை நடுவரையில் வளைந்தும், அணிவிரல் அரைப்பங்கு வளைவாகவும், மற்ற விரல்கள் முன்போலவே சிறிது வளைவாகவும் இருப்பதற்கு ஸிம்ஹ கர்ணம் என்று பெயர். (13½)

---

*"வக்ராசேஷா: ப்ராக்வதேவ" இதி வா பாடஸ்ஸாது |

हिक्कासूत्रसमं कार्यं कर्तर्यग्रं(ग्र्यं)
परे करे ॥ १६ ॥

सक्रानामिकाङ्गुष्ठौ तलसंलग्नकौ ।
किञ्चिद्वक्रा कनिष्ठापि शेषौ ऊर्ध्वौ तु ऋजुक्रियौ ॥

कर्तर्याख्य(ख्यो)करस्त्वेवं सम्यक् सुलक्षणान्वित
सुन्दरम् ।
कूर्परं श्रोणिपार्श्वे तु पञ्चषट्सप्त
मात्रया ॥ १७ ॥

कुक्षिमध्ये(ध्यं) च नासाग्रे(ग्रं) पूर्व
सूत्रं तु संस्पृशेत् ।
मेढ्रमूलात्तु वामांघ्रि गुल्फमध्यं रसांगुलम् ॥

सप्तवा सप्तमात्रं तु पञ्चमात्रयोऽपि वा ।
नाभिमध्यात्तु वामांघ्रि नलकाग्रं तदन्तरम् ॥ १८ ॥

பரகரங்களின் கர்தர்யக்ரமானது (வெளிக்கைகளிலுள்ள கர்தரீமுத்திரையின் உச்சியானது) ஹிக்காஸூத்திர ஸமமாக (கழுத்து மட்டமாக) இருக்கவேண்டும். அக்கைகளின் அணிவிரலும், பெருவிரலும், உள்ளங்கையில் பொருந்தி இருக்கவேண்டும். சிறுவிரலானது சிறிது வளைந்திருக்கவேண்டும். மற்ற இருவிரல்களும் நேராக உயர்ந்திருக்கவேண்டும். இவ்விதமான கர்தரீஹஸ்தத்தை, லக்ஷணத்துடன் அழகாக அமைக்கவேண்டும்.

முழங்கையானது, (ச்ரோணியின் பக்கத்தில், 5, 6 அல்லது 7 அங்குல ஒதுக்கத்திலிருக்கவேண்டும். பூர்வ ஸூத்திரமானது, குக்ஷிமத்தியம், நாஸாக்ரம், இவைகளைத் தொட்டிருக்கவேண்டும். (16½)

மேட்ரமூலத்திலிருந்து இடது கணுக்கால் முண்டின் நடுவானது, 6, 7, அல்லது 5 அங்குலமாகும், நாபி மத்தி

த்ரயோதஶாங்குலம் வாபி த்வாதஶாங்குலமதாபி வா ।
மௌல்யக்ராத் மத்யஸூத்ராந்தம் ததுச்சம் அங்குலாத்ரயம் ॥ ௧௯ ॥

ஸார்த்த த்ரயோதஶாம்ஶம் வா த்ரயோதஶாம்ஶமேவ வா ।
ஸ்தாநம(ய)தம் ப்ரவாலாபம் ப்ரவால ஸத்ருஶ ப்ரபம் ॥

த்ரிநேத்ரம் ஸுமுகோபேதம் ஸம்பூர்ணம் ராஜஸம் குணம் ।
வ்யாக்ராஜிநாம்பரோபேதம் துகூலவஸநாந்விதம் ॥

பரஹஸ்தத்வயம் சைவ ஹ்யந்தர்பாஹ்யமுகாந்விதம்
(பரஶுஞ்சைவம்) ।
தக்ஷிணே பரஶு: வாமே க்ருஷ்ணஸாரம்ருகம் ததா ॥ ௨௨ ॥

அபயம் தக்ஷிணம் வாமம் கடகம் ஸிம்ஹகர்ணகம் ।
வாமே கர்ணே விஶேஷேண ஶங்கபத்ரம் ப்ரகல்பயேத் ॥

யத்திலிருந்து இடது காலின் நளகையின் உச்சியானது 14, 13, அல்லது 12 அங்குலமாகும். மௌளியக்கிரத்திலிருந்து மத்தியஸூத்திரம் வரையில் ஓதுக்கமானது, 14, 13½, அல்லது 13 அங்குலமாகும். (19½)

ஸ்தாநகமூர்த்தியானது, நேராக உயர்ந்து, பவழம் போன்ற நிறமும், 3 கண்களும், அழகிய முகமும், நிறைந்த ராஜஸ குணமும், புலித்தோலாடையும், வெண்பட்டாடையும் தரித்திருப்பதாகும். (21)

பரஹஸ்தங்கள் இரண்டும் உள்பக்கம் நோக்கியாவது, வெளிப்பக்கம் நோக்கியாவது இருப்பதாகும். (பரஹஸ்தங்களில்) வலது கரத்தில் பரசுவும் (கோடரி) இடது கரத்தில் மானும் இருக்கவேண்டும். மற்ற இரு கரங்களில், வலது கரம் அபயஹஸ்தமாகவும், இடது கரமானது, கடகஹஸ்தம் அல்லது ஸிம்ஹகர்ணமாகவும் இருக்க வேண்டும். இடது காதில், விசேஷித்து சங்கபத்திரத்தை கல்பிக்கவேண்டும். (23)

த்ரிசதுஷ்பஞ்சமாத்ரம் வா பத்ரம் கர்ணவிஸ்த்ருதம் |
கர்ணநாளகனம் சைவ த்ரிகுணம் (யவம்) பத்ர
விஸ்த்ருதம் || உச ||

[illegible] |
தக்ஷிணே கர்ணே சைவம் (மகராக்யம்) து குண்டலம்
(வ்யாளம் வா) ஸிம்ஹ மகரம் வா || உரு ||

குண்டலவ்யாஸதுங்கம் து த்ரிசதுஷ்பஞ்சமாத்ரகம் |
யுக்த்யா தத்குண்டலம் க்ருத்வா கர்ணாத் ஸ்கந்தாவதி
ந்யஸேத் || உசு ||

அதவா கர்ணயோர் த்விஜ வ்ருத்தகுண்டலகம் ந்யஸேத் |
வ்ருத்தகுண்டலவிஸ்தாரம் அஷ்டாதசயவம் பவேத் || உஎ ||

வேதாங்குலம் து தத்துங்கம் கும்பாப்ஜமுகுளாக்ருதிம் |
அன்யதா ஸுந்தராகாரம் கல்பயேத் வ்ருத்தகுண்டலம் ||உஅ||

வட்டமான (கர்ண) பத்திரத்தின் விஸ்தாரமானது, 3, 4, அல்லது 5 அங்குலமாகும். கர்ணநாளத்தின் கனமும் பத்திரவிஸ்தாரமும் 3 மடங்காகும் (3 யவையாகும்) பத்திரத்தின் கனமானது இவ்விதமாகக் கூறப்பட்டிருக்கிறது.

வலது காதில் மகர குண்டலம், வியாள (ஸர்ப) குண்டலம் அல்லது ஸிம்ஹ குண்டலம் இருக்கவேண்டும். குண்டலத்தின் உயரமும் அகலமும், 3, 4, அல்லது 5 அங்குலமிருக்கவேண்டும். அந்த குண்டலத்தை யுக்தியினாலே செய்து காதிலிருந்து தோளுக்குமேலே தொங்கும்படி கல்பிக்கவேண்டும். (26)

ஏ அந்தணனே! அல்லது, காதுகளில் வட்டவடிவமான குண்டலத்தைக் கல்பிக்கவேண்டும்.

விருத்த குண்டலத்தின் விஸ்தாரமானது, 18 யவையாகும். அதன் உயரமானது 4 அங்குலமாகும். அதை கும்பம் (அல்லது) தாமரை மொட்டு போன்றுவது வேறு விதமாக அழகாக இருக்கும்படியாவது கல்பிக்கவேண்டும்

ஜடாமகுடஸம்யுக்தம் மகுடஸம்வ்யாஜடாந்விதம்
உத்கடம் த்வ்யேகவிம்சத்ய அஷ்டாதசாங்குலம் பவேத் ||

த்ரிபாக்ஷாம்சமதாம்சம் வா த்ரிபாதாம்சமதாபி வா |
கேசாந்த(ந்தா)த்ப்ராரப்ய தத் லலாடபட்டஸம்யுதம் ||

முகவிஸ்தாரமானம் ஸ்யாத் உச்ச்ரயோ(ஸ்ய) விஸ்தாரகம் |
தத்ஸப்தாஷ்டநவாம்சேன ஹீனம் மூலவிஸ்தாரகம் || ௩௧ ||

அதஷ்சதுஷ்பூரிஸம்யுக்தம் த்வாதசாம்சம் பூரிகோதயம் |
ஸவ்யே நாகதத்தூரம் வா வாமே அர்த்தசந்த்ரம் ந்யஸேத் ||
தக்ஷிணே சந்த்ரகலாம் வாமே நாகதத்தூரகம் |

ஸுகாஸனமூர்த்தியானது ஜடாமகுடம், அல்லது ஜடைமகுடம், இவைகளை தரித்திருப்பதாகும். மகுடத்தின் உயரமானது 21 அங்குலமாகும். 21 அல்லது 18 அங்குல உயரமுமிருக்கலாம். மகுடத்தின் உயரமானது கேசாந்தத்திலிருந்தாகும். அது லலாட பட்டத்துடன் கூடியதாகும். (30)

மகுடத்தின் விஸ்தாரமானது, முகவிஸ்தாரத்திற்கு ஏற்றதாக இருக்கவேண்டும். அதன் உச்சியானது அடிப்பக்கத்திலுள்ள அகலத்தில் 7ல் 1 பங்கு, 8ல் 1 பங்கு அல்லது 9ல் 1 பங்கு குறைவாக இருக்கவேண்டும். (31)

அந்த மகுடமானது (நான்கு பக்கங்களிலும்) நான்கு பூரிமங்களுடனிருக்கவேண்டும். (பூரிமம்—இலைகளின் வடிவமான அலங்காரம்) பூரிமமானது மகுடத்தின் உயரத்தில் 12ல் 1 பங்கு இருக்கவேண்டும். கிரீடத்தில் வலதுபக்கத்தில் நாகவடிவமும் ஊமத்தம்பூவும் அமைக்கவேண்டும். இடது பக்கத்தில் அர்த்த சந்திர வடிவத்தைக் கல்பிக்கவேண்டும். அல்லது வலது பக்கத்தில் சந்திரகலையையும் இடது பக்கத்தில் நாகம், ஊமத்தம்பூ இவைகளையும் கல்பிப்பதுமாகும்.

கடிஸூத்ரம் த்ரிஸங்க்யாதிகஸூத்ரம் ரஜ்ஜுவத்யவம் பவேத் ||

கடிஸந்த்யூர்த்வஸம்ஶ்லிஷ்டா கடிஸூத்ரம் து பந்தயேத் |
பஞ்சஷட்ஸப்தமாத்ரம் வா கீர்த்திமானம் ப்ரகல்பயேத் || ௩௪ ||

தத்துங்கவிஸ்தாரஸமம் மேட்ரோர்த்வம் விநிக்ஷிபேத் |
கடிஸூத்ராதூருத்ர்யம்ஶாந்தம் ஊருதாம ப்ரலம்பயேத் || ௩௫ ||

முக்தாதாமோருதாமம் ஸ்யான்மத்யே ரத்நஸம்யுதம் |
கடிஸூத்ரம் ஸமாக்யாதம் கடகவலயாந்விதம் || ௩௬ ||

கடகவலயோபேதம் ப்ரகோஷ்டம் த்விஜஸத்தம |
சதுரஷ்டாங்குலிவிஸ்தாரம் வலயம் மாத்ரயேத் ஸதா || ௩௭ ||

கடிஸூத்திரமானது மூன்றுக்கு அதிகமான சுத்துகளுடையதான கயிற்றின் வடிவமுடையதாகும். அதன் கனம் 1 யவையாகும். இந்த கடிஸூத்திரமானது, கடிஸந்திக்குமேலே இணைக்கப்பட்டிருக்கவேண்டும். (அதன் நடுவில்) கீர்த்திமாநத்தைக் கல்பிக்கவேண்டும். (கீர்த்திமாநம்—சிங்கத்தின் முகம்போன்ற வடிவமுள்ள முகப்பு) அந்த கீர்த்திமாநமானது, 5, 6, அல்லது 7 அங்குலம் உயரமும் அதே அகலமுமுடையதாகும். இது மேட்ரத்திற்கு மேலே கல்பிக்கப்படவேண்டும். ஊருதாமாவானது, கடிஸூத்திரத்திலிருந்து துடையின் 3ல் 1 பாகம் வரையில் அமைக்கப்பட வேண்டும். (ஊருதாம — கடிஸூத்திரத்திலிருந்து துடை வரையில் தொங்கும் குஞ்சம்போன்ற அலங்காரம்) ஊருதாமாவானது நடுவில் ரத்நங்களுடன் கூடிய முத்துமாலையின் வடிவமாக இருக்கவேண்டும். இவ்விதமாக கடிஸூத்திரம் கூறப்பட்டிருக்கிறது. கடகவலயத்துடனிருக்கவேண்டும். (36)

ஏ அந்தணனே! பிரகோஷ்டத்தில் (முன் கையின் அடிப்பக்கத்தில்) கடகவலயம் அணிவிக்கவேண்டும். அந்த

ஸுவா வயெஸ்வ வ தம் ஷி ீ யவம் த வா |
வராஜிதம் த வலயம் யுமம் வ கெ கொஜெ)
நியாவயெக || ௩அ ||

ரா-ீவம் (ஹாஸம்) ர த்நபுமம் வா கூ கவா த வலயெ
ஷிஜ |
கெயூரம் கூவ-ீரெ நூஸு வலயஸு வ நாஙிதழ ||

ஷ காகாரம் த கெயூரம் வாஷவத ராஜவஸம்யுதழ |
நா நாரத்நஸ ரயுக்தம் ஸெலுவாஹுயோவி வா || ச0 ||

வத்ரவூரிஸம்யுக்தம் பாஹுமயெ ஷிஜொத்தம |
வத்ரவூரி நாஸம் த கெயூரஸ்ரபம் வ தழ || சக ||

வலயமானது, சிறுவிரலின் கனமுள்ளதாகவும் மிருதுவாக (அழகாக)வும் இருக்கவேண்டும். 2 அல்லது 3 யவை கன முள்ளதாக இருப்பதுமாகும்.

பிரகோஷ்டத்தில் (முன் கை நுனியில் மணிக்கட்டுக்கு மேலே) பராஜிதமென்னும் வளையை இரட்டையாக (இரண்டு வளைகளாக) அமைக்கவேண்டும். அது, அழகாக வும் ரத்நங்கள் பதப்பித்தும் இருக்கவேண்டும். முழங் கையில் (முழங்கைக்குமேலே) சேயூரத்தை (சேயூரம்-முழங் கைக்குமேலே அணியக்கூடிய வலயம்போன்ற ஆபரணம்) அமைக்கவேண்டும். சேயூரமானது, ஓரேவிதமாகவாவது. 8 இதழ்களுடன் கூடிய தாமரை மலர்போன்ற வடிவத்தி னுலே அலங்கரிக்கப்பட்டாவது இருக்கவேண்டும். அது சிலையினுலே செய்யப்பட்டிருப்பினும் அதில் பலவித ரத்நங் களும் பதிப்பிக்கப்பட்டிருக்கவேண்டும் (40)

அந்த கேயூரமானது பாஹுமத்தியத்தில் பத்திர பூரிமத்துடனிருக்கவேண்டும். பத்திரபூரிமத்தின் நாள

தஸ்ய பூரிமாதோ நாளம் *பாஹுர்த்ரிவஸம் த்ரயம் வா |
த்ரிசதுஷ்பஞ்சமாத்ரம் வா பத்ரபூரிமவிஸ்தரம் || ௪௩ ||

தஸ்யோத்ஸேதம் (மாத்ரம்) தத்ஸமம் வா ததோ த்விகுணம்
த்ரயம் வா |
த்விகுணம் வாபி தத்ஸமம் தத் பாஹுவலயம் பவேத் ||

மத்யமாங்குளிவினா சேஷாங்குல்யோ முத்ரிகாந்விதா: |
முத்ரிகாமூலவர்த்மஸ்யு ரத்நைர்யா வஸ்த்ராந்விதம்
(ரத்நஸம்யுதா) || ௪௪ ||

உதரபந்தவிஸ்தாரம் ஏகத்வித்ரியாமம் த்ரயம் வா |
யவம் வா த்வியவம் வாத உதரம் பந்தநம் பவேத் (பந்தநம்) ||

நாநாலங்காரஸம்யுக்தம் நாநாரத்நவிசித்ரிதம் |

